# கட்டுரை மலர்கள்

## (துணைப் பாடநூல்)

### ஒன்பதாம் வகுப்பு

SCANNED

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் ஆய்வு செய்த ஆவணங்களைக் கையாண்டு 'இந்திய விடுதலைப் போரின் விடிவெள்ளி மாவீரன் பூலித்தேவன்' என்னும் கட்டுரையை எழுதியுள்ளேன். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள 'கட்டுரை மலர்கள்' என்னும் புத்தகத்தில் 37-ஆம் பக்கத்தில் இக்கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

'கட்டுரை மலர்கள்' என்னும் புத்தகங்கள் இரண்டு ஆவணக் காப்பகத்திற்கு வழங்குகின்றேன்.

நன்றி. இவண்,

SCANNED

(... இராசையா)
... கொல்லங்கொண்டான்
626142
...சபாளையம் வட்டம்.
காமராசர் மாவட்டம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

TS
021,6/9
N191
174284

# கட்டுரை மலர்கள்
## (துணைப் பாடநூல்)

### ஒன்பதாம் வகுப்பு

(புதிய கல்விக் கொள்கையின்கீழ் அமைந்த
பாடத்திட்டத்திற்கிணங்க இயற்றப்பட்டது.)

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
கல்லூரி சாலை, சென்னை - 600 006

©தமிழ்நாடு அரசு
முதற்பதிப்பு - 1989
மறுபதிப்பு–1991

174284
73
031,6(9)
N91

**குழுத்தலைவர்**

டாக்டர் பி.இரத்தினசபாபதி,
தமிழ்ப் பேராசிரியர், அரசுக் கலைக்கல்லூரி,
சென்னை - 600 035

**நூலாசிரியர்கள்**

புலவர் சி.சிவப்பிரகாசம்,
தமிழாசிரியர்,
டாக்டர் குருசாமி முதலியார்
தொ.து.வே. மேனிலைப் பள்ளி,
சென்னை - 600 079

புலவர் வி. இராசமாணிக்கம்,
(தாமரைக்கண்ணன்)
அரசினர் மேனிலைப்பள்ளி,
அச்சிறுபாக்கம் - 603 301
செங்கை அண்ணா மாவட்டம்

**மேலாய்வாளர்கள்**

டாக்டர் **பா. வீரப்பன்,**
உதவி கள ஆலோசகர்,
தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி
நிறுவனம், சென்னை - 600 083

புலவர் கோ. பெரியண்ணன்,
மேனிலைத் தமிழாசிரியர்,
நேரு அரசினர் மேனிலைப் பள்ளி,
சென்னை - 600 114

**விலை: ரூ. 3-50**

இந்நூல் 60 ஜி.எஸ்.எம்.தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர்:
குங்குமம் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை – 34

# பொருளடக்கம்

பக்கம்

1. தமிழ்த் திருநாள் .... 1
- டாக்டர் இரா.பி.சேதுப்பிள்ளை

2. மாமல்லபுரம் .... 6
- டாக்டர் விக்கிரமன்

3. வாழ்வுசார் தொழில்கள் .... 18
- பொறியாளர் க. பன்னீர்செல்வம்

4. எழுத்துச்சூழல் .... 31
- திரு இரா.கிருஷ்ணமூர்த்தி

5. விடுதலை இயக்கத்தின் விடிவெள்ளி மாவீரன் பூலித்தேவன் .... 37
- புலவர் ந. இராசையா

6. ஆங்காங் பயணம் .... 48
- டாக்டர் ந. சஞ்சீவி

7. காணவேண்டிய காசி மாநகரம் .... 58
- புலவர் இ. கோமதிநாயகம்

8. கணிப்பொறி .... 65
- பேராசிரியர் சி. சோமசுந்தரம்

9. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு .... 75
- டாக்டர் இராம. குருநாதன்

10. கடைசிக் கடிதம் .... 91
- ஜவகர்லால் நேரு

ஆசிரியர் குறிப்பு .... 101

பயிற்சியும் வினாக்களும் .... 103

# 1. தமிழ்த் திருநாள்

(டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை)

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இன்று இலங்கையில் தமிழ்த் திருவிழா நடைபெறுகின்றது. இது நான்காம் தமிழ்விழா. முதல் ஆண்டிலே தமிழ்விழா மதுரையம்பதியில் நடைபெற்றது. மதுரை மாநகரம் பாண்டி நாட்டின் தலைநகரம்; செந்தமிழை உருவாக்கிய திருநகரம். இத்தகைய மதுரை மாநகரம் முதலாண்டு விழாவினை நடத்தியது மிகப் பொருத்தமாயிருந்தது. அடுத்த ஆண்டு விழா சோழநாட்டின் பழந் தலைநகராகிய திருவாரூரில் நிகழ்ந்தது. சோழவளநாட்டின் செழுமைக்கு ஏற்ற முறையில் எடுப்பாக நடந்தது அம் மாநாடு. மூன்றாம் மாநாடு பண்டைச் சேரநாட்டின் ஓர் அங்கமாக விளங்கிய கொங்கு நாட்டிலே சீரும் சிறப்பும் உற்று விளங்கும் கோயம்புத்தூரில் நடைபெற்றது. நான்காம் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. இம் மாநாட்டின் இலக்கியப் பகுதியில் என்னையும் பங்குப் பற்றுமாறு பணித்த அன்பர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம் உரியதாகும்.

அன்பர்களே! தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் பழமையான தொடர்புண்டு. தமிழ் இலக்கியமே இதற்குச் சான்று. பண்டமாற்று முறையிலும் பண்பாட்டு முறையிலும் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்த உறவு சங்க நூல்களிலும் பிற்காலத்துப் பெருநூல்களிலும் பேசப்படுகின்றது. சங்கத் தமிழில் ஈழநாடு என்பது இலங்கையின் பெயர். பட்டினப்பாலை என்னும் பழந்தமிழ்ப் பாட்டிலே சோழநாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் இருந்த வாணிக உறவு குறிக்கப்படுகின்றது. அந்நாளில் பட்டினம் என்றால் தமிழகத்தில் காவிரிப்பூம்பட்டினமே! சோழநாட்டை ஊட்டி வளர்க்கின்ற காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்னும் திருநகரம் அமைந்திருந்தது. அதன் செழுமையையும் அழகையும் கண்டு மகிழ்ந்த செந்தமிழ்ப் புலவர்கள் பூம்புகார் என்றும் அதனைப் போற்றுவாராயினர். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள், ''பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்'' என்று பாடினார். அந் நகரத்தின் துறை

---

இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் திருவிழாவில் ஆற்றிய தலைமையுரை.

முகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நிகழ்ந்தன. கடல் கடந்து பிற நாடுகளிலிருந்து அங்கு வந்திறங்கிய பண்டங்களைப் பட்டினப்பாலை தொகுத்துக் கூறுகின்றது. இந்த வரிசையில் ஈழநாட்டுப் பண்டமும் இடம் பெற்றுள்ளது. ''ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்'' பட்டினத்துறைமுகத்தில் வந்து இறங்கிய பண்டங்களென்று அப்பாட்டு கூறுகின்றது. ஈழநாட்டிலிருந்து என்ன என்ன உணவுப்பொருள்கள் தமிழ் நாட்டுக்கு இறக்குமதியாயின என்று இப்பொழுது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், பண்டமாற்றுமுறையில் சோழவளநாடு விரும்பி ஏற்றுக்கொண்ட உணவுப் பொருள்கள் இலங்கையிலிருந்து வந்தன என்பது ஒரு பெருஞ் சிறப்பன்றோ?

இனி, சேரநாடு என்று பழங்காலத்தில் பெயர் பெற்றிருந்த மலையாள நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் பலவகையான தொடர்பிருந்தது. மலையாள நாட்டில் இன்று ஈழவா என்று அழைக்கப் படுகின்ற வகுப்பார் இலங்கையிலிருந்து அந் நாட்டில் குடியேறியவரேயாவார். ஈழவர் என்ற சொல்லே அவர் ஈழநாட்டிலிருந்து வந்தவர் என்பதை உணர்த்துகின்றது.

செங்குட்டுவன் என்னும் சிறந்த சேரமன்னன் மலையாள நாட்டில் அரசு வீற்றிருந்தபொழுது தமிழ்நாட்டில் அரும்பெருஞ் செயலொன்று நிகழ்ந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகி, பாண்டிய மன்னனைத் தன் கற்பின் திண்மையால் வென்று, சேரநாட்டையடைந்து தெய்வீகமுற்றாள். இந்த நிகழ்ச்சி மூன்று தமிழ்நாட்டையும் அதிரச் செய்தது. சேரநாட்டு அரசன் தன் நாட்டில் வந்து தெய்வீகமுற்ற வீரமாபத்தினியாகிய கண்ணகிக்குச் சிறந்த திருக்கோயில் ஒன்று அமைத்தான். அக்காட்சியைக் காண்பதற்கு அயல் நாட்டு மன்னர் பலரைச் செங்குட்டுவன் அழைத்திருந்தான். அன்னவருள் ஒருவன் ஈழநாட்டு மன்னன். 'கடல்சூழ் இலங்கைக்கயவாகு மன்னன்' என்று சிலப்பதிகாரத்தில் அவ்வரசன் குறிக்கப்படுகின்றான். இலங்கை வரலாற்றில் கஜபாகு என்ற பெயருடைய மன்னர் இருவர் இருந்தனர் என்றும் அவருள் முதல் கஜபாகு மன்னனே செங்குட்டுவன் அழைப்பை ஏற்றுக் கண்ணகி விழாவிற் கலந்துகொண்டவன் என்றும் வரலாற்று நூலோர் கூறுவர். தமிழகத்திற் கோயில் கொண்ட கண்ணகியின் பெருமையையும் கருணையையும் கண்கூடாகக் கண்ட கஜபாகு மன்னன் இலங்கையிலும் அத்தேவிக்கு ஆலயமமைத்துச் சிறப்போடு பூசனை செய்தான் என்றும்

அதனால் மழை தவறாமல் பெய்து, ஈழநாடு, 'வளம் பல பெருகிப் பிழையாவிளையுள் நாடாயிற்று' என்றும் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. இன்றும் கண்டி முதலிய பல இடங்களில் கண்ணகி வழிபாடு நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது. முன்னமே வாணிகத்தால் இணைக்கப்பெற்றிருந்த தமிழகமும் இலங்கையும் கண்ணகி காலந்தொட்டு வழிபாட்டு முறையிலும் இணக்கமுற்றன.

இன்னும் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் ஆன்மநேய ஒருமைப்பாடும் உண்டு. சிவ மணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் தேவாரம் பாடிய பெரியோர்கள் இலங்கையிலுள்ள சிறந்த சிவத்தலங்களைப் பாடியுள்ளார்கள். கடலருகேயுள்ள திருக்கோணமலையைப் பாடினார் திருஞானசம்பந்தர். மாதோட்டம் என்னும் நன்னகரில் அமைந்த மாதொரு பாகனைத் தொழுது பாமாலை அணிந்தனர் திருஞானசம்பந்தரும் சுந்தரரும். தமிழ்நாட்டிலுள்ள முருகனடியார்கள் இலங்கையிலுள்ள கதிர்காமத்தை நினைக்குந்தோறும் காதலாகிக் கசிந்து கண்ணீர் பெருக்குவர். அப்படியே ஈழநாட்டிலுள்ள சிவனடியார்க்குச் சிதம்பரமே சிறந்த திருக்கோயில். அன்னார் தில்லைமன்றிலே திருநடம் புரியும் 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' எனச் சிந்தையாரப் போற்றுவர். தமிழகத்தில், முருகப் பெருமானுடைய படைவீடுகளாகப் போற்றப்படும் ஆறுபதிகளையும் அகனமர்ந்து ஏத்துவர். அவற்றுள், ''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்'' என்று திருமுருகாற்றுப்படையில் புகழப்பெற்ற திருச்செந்தூரை நினைத்து நெக்கு நெக்குருகுவர்.

இன்னும், ஈழநாட்டிலே பிறந்து, தமிழ்நாட்டிலே வாழ்ந்து, தமிழ்த்தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தார்க்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத்தில் தோன்றிய தாமோதரம்பிள்ளையவர்களுக்கே உரியதாகும். நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்து தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் அரும்பெருந்தொண்டு செய்த ஆறுமுக நாவலரை அறியாதார் தமிழ் கூறு நல்லுலகத்தில் உளரோ? இந்நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம் பதியிலே வாழ்ந்து எல்லையற்ற புகழெய்தினார். இன்னும், முத்தமிழில் நடுநாயகமாக விளங்கும் இசைத் தமிழுக்கு விழுமிய

தொண்டு செய்த விபுலானந்த அடிகளும் இந்நாட்டவரேயாவர். பழந்தமிழ்நாட்டில் சிறந்த இசைக் கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் தமிழிசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திற்கு அரியதொரு விருந்தளித்த அறிஞர் பெருமானை அறியாதார் அறியாதாரே.

இலங்கை நாட்டிலே, யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம்; தமிழ்மணங் கமழுந் திருநகரம். தமிழர் பண்பாடு யாழ்ப்பாணம் என்ற சொல்லிலே விளங்குகின்றது. யாழ்ப் பாணர் என்பார் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு வகுப்பார். பண்ணோடு இசைபாட வல்லவர் பாணர் என்று முன்னாளில் அழைக்கப் பெற்றனர். அவருள் யாழிலே வல்லவர்கள் யாழ்ப் பாணர் என்று பெயர் பெற்றார்கள். சிலப்பதிகாரத்தில் இவர் பெருமை குறிக்கப்படுகின்றது. கண்ணகி வாழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில்,

''குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபின் பெரும்பாண் இருக்கையும் ''

என்று அவர் இருந்த வீதி புகழப்படுகின்றது. தேவாரம் எழுந்த காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் சிவனடியார் ஒருவர் யாழிசையில் வல்லவராய் இருந்தார். அவர் திருஞான சம்பந்தரோடு பல தலங்களுக்கும் சென்று அவர் பாடிய தமிழ்ப் பாட்டை யாழிலே இசைத்துக் கேட்போர் செவிக்கும் சிந்தைக்கும் இனிய இசை விருந்து அளித்தாரென்று திருத்தொண்டர்புராணம் தெரிவிக்கின்றது. இத்தகைய சிறந்த மரபு இப்பொழுது தமிழகத்திலே தூர்ந்து போயிற்று. பாணர் என்ற இனத்தார் இன்று தமிழ்நாட்டிலில்லை. அன்னார் கையாண்ட இசைக்கருவியாகிய யாழும் இப்பொழுது காணப்பட வில்லை. எனவே, முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து மறைந்து போன ஓர் இன்னிசைக் கருவியையும் அக்கருவியிலே தமிழ்ப் பாட்டிசைத்த ஒரு பழங்குலத்தின் பெயரையும் இக் காலத் தார்க்கும் பாதுகாத்து வைத்திருப்பது யாழ்ப்பாணமேயாகும்.

நமது தாய்மொழியாகிய தமிழ் இவ்வுலகிலுள்ள செம்மை சான்ற தொன்மொழிகளுள் ஒன்று. மன்னரும் முனிவரும் அம்மொழியைப் பேணி வளர்த்தார்கள். அறிவு வளர்ச்சிக்கும் ஆன்ம நலத்திற்கும் சாதனமாகிய நூல்கள் தமிழ் மொழியிலே

சாலச் சிறந்து விளங்குகின்றன. இத்தகைய விழுமிய மொழியைத் தாய்மொழியாகப் பெற்றுள்ள நாம், இவ்வுலகிலுள்ள எந்நாட் டார்க்கும் எவ்வாற்றானும் குறைந்தவரல்லோம். ஆதலால், எந் நாட்டிலிருந்தாலும் எத்தொழில் செய்தாலும் தமிழ் மக்கள் நெஞ் சில் தமிழார்வம் குடிகொண்டிருத்தல் வேண்டும். இன்று தமிழினம் பலவேறு நாடுகளிற் பரவியுள்ளது. இவ் வுண்மையையறிந்து பாடினார் பாரதியார்:

''சிங்களம் புட்பகம் சாவகம் - ஆதிய
தீவு பலவினும் சென்றேறி - அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் - நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு''

என்ற பாட்டிலே விரிந்து பரந்த தமிழகம் குறிக்கப்படுகின்றது. இன்று பர்மா, மலேயா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய அயல்நாடுகளிலும் தமிழர் வாணிகம் புரிந்தும் வளம் பெருக்கியும் வாழ்ந்து வருகின்றார்கள். அன்னவர் அனைவரும் தமிழ்த்தாயின் சேய்கள் என்று உணர்ந்து ஒன்றுபடல் வேண்டும்.

சுதந்திர இந்தியாவில், நாட்டுமொழிகள் தலையெடுத்து வளரத் தொடங்கியுள்ளன. நாமிருக்கும் நாடு நமது என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடம் பெருகி வருகின்றது. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்; யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்ற பாரதியார் பாட்டின் உண்மையை உணர்ந்து பண்டைத் தமிழ்ப் பனுவல்களைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் பாராட்டிப் படிக்கின்றார்கள். இத்தகைய ஆர்வம் தமிழ் வழங்கும் நல்லுல கெங்கும் பரவுதல் வேண்டும். 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு' என்று பாடினார் ஒரு புலவர். அவர் பாடிய தமிழ்ப் பண்பு பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கப் பேசப்படுகின்றது. ஆதலால், தமிழிலக்கியம் தமிழினத் தார்க்குத் தனிப்பெருஞ்செல்வம். அச்செல்வத்தை நாமும் துய்த்துப் பிறர்க்கும் வழங்குதலே இம்மாநாட்டின் நோக்கமாகும். இந்நோக்கம் நிறைவேறுமாறு தமிழ்ப்பெருந்தெய்வம் திருவருள் புரிக. 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்னும் உண்மையை உணர்ந்து இம் மாநாட்டில் நிகழும் சொல்விருந்தை நுகர்வதற்குப் பல்லாயிரக்கணக்காகக் குழுமியுள்ள மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

# 2. மாமல்லபுரம்

(டாக்டர் விக்கிரமன்)

தமிழகத்தைச் சிறப்பாக ஆண்ட மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களுடன் சேர்த்துப் புகழப்பட வேண்டிய அளவு திறம்பட, சுமார் கி.பி. 300 முதல் 800 வரை ஆட்சி புரிந்தனர் பல்லவர்.

இன்று காணும் செங்கல்பட்டு, தென்னார்க்காடு, வட ஆர்க் காடு மாவட்டங்களும் அதையொட்டிய சில பிரதேசங்களும் சேர்ந்து தொண்டைமண்டலம் என்ற பெயருடையதாயிருந்தது. தொண்டை நன்னாட்டையும் காவிரி பாயும் சோழநாட்டின் ஒரு பகுதியையும் கிருஷ்ணா நதிக்கரை வரையிலுள்ள நிலப் பகுதி யையும் பல்லவர்கள் ஆண்டு வந்தனர். அவர்களை முற்கால, இடைக்கால, பிற்காலப் பல்லவர்கள் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் பாகுபாடு செய்கின்றனர். பிற்காலப் பல்லவர் களுள் முதல் மன்னர் சிம்மவிஷ்ணு ஆவார். இவருக்குப் பிறகு தான் பிரசித்தி பெற்ற அரசர் மகேந்திரவர்மன் பட்டத்துக்கு வந்தார். அவரது ஆட்சிக்காலமாகிய முப்பது ஆண்டுகளில் நாட்டில் கலை வளர்ந்தது; ஒற்றுமை உயர்ந்தது. ஆட்சி முறை யிலே அசோகருக்கும் அக்பருக்கும் ஹர்ஷவர்த்தனருக்கும் சிறிதும் குறையாத திறமை படைத்தவர் மகேந்திரர்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவ ராஜதானி யிலே மாமல்லபுரம் பெருந்துறைமுகப் பட்டினமாக விளங்கிற்று. அந்நிய தேசங்ளுடன் வாணிபஞ் செய்து பெருஞ் செல்வங்களைக் கொண்டு சேர்க்கும் மரக்கலங்கள் இத் துறைமுகப் பட்டினத்திற்கு எப்போதும் வந்து சென்றவண்ணம் இருந்தன. பல்லவநாட்டு மக்கள் சிறந்த மாலுமிகளாகவும் பெரும் வியாபாரிகளாகவும் திகழ்ந்தனர்.

மாமல்லன் காலத்தே வந்த புகழ்பெற்ற சீனப்பயணி யுவான் சுவாங் பல்லவநாட்டைப்பற்றி எழுதுகையில், காஞ்சிபுரம் பெரும் நகரமாகக் கடற்கரை வரையில் பரவியிருந்தது என்றும், அங்கிருந்து சீனம் முதலிய கீழ்த்திசை நாடுகளுக்கும் சிங்களத் திற்கும் கப்பல்கள் சென்று வந்துகொண்டிருந்தனவென்றும் குறிப்பிடுகிறார்.

மாமல்லபுரத்தில் காணவேண்டியவைகளை மூன்று பிரிவு களாகப் பிரித்துக் கொள்ளலாம். 1) மலைச்சரிவிலே குடையப் பட்டுள்ள குகை மண்டபங்கள் 2) பகீரதன் தவம், ஐந்து ரதங்கள் 3) கடற்கரைக் கோயில், மாமல்லபுரத்திலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள சளுவன்குப்பம் என்ற கிராமத்தில் உள்ள சிங்கக் குகையும் குகை மண்டபமும்.

**குகை மண்டபங்கள்**

மகேந்திரன் காலத்து மண்டபங்கள் மாமல்லபுரத்தில் ஆடம் பரம் ஏதுமின்றி வறிதே காணப்படுகின்றன. ஏனெனில் முதன் முதலில் மலைச்சரிவில் குடைவரைக் கோயில்களமைக்கும் முறை அக்காலத்தில் தமிழகத்திற்கே புதிதாயிருந்தது. அஜந்தாவில் தாம் கண்டவற்றைத் தமிழகத்தில் படைக்க மகேந்திரன் முயன்றார்; முயன்று வெற்றி கண்டார். முதன் முதலில் குடையப்பட்ட கோயில் தளவானூர் என்னும் இடத்தில் உள்ளது.

மகேந்திரனுக்குப் பிறகு மாமல்லன் அக் குகை மண்ட பங்களிலே பல முன்னேற்றங்களைக் கண்டார். வேறு பாறையின் உதவியின்றி குகை மண்டபங்களைக் கலைக்கூடமாக்கினார்.

மாமல்லபுரத்தில் மகேந்திரன் காலத்தியதென்று நம்பப்படும் கோயில்கள் மூன்றுடன், மாமல்லன்காலத்தில் குடையப்பட்ட வேறு கோயில்களும் சுமார் பத்து இருக்கின்றன. தமிழ் நாட்டின் பல இடங்களிலும் உள்ள கலைக்கோயில்களில் இப்படித் தந்தை யின் வழியைப் பின்பற்றியோ அல்லது அவர் பணியில் பூர்த்தி யாகாதவற்றைச் செய்தோ வெற்றி கண்டிருக்கிறார் மாமல்லன்.

முதல் கருவறையாகத் திகழும் மாடத்தில் திருமாலின் பாதத் தடியில் இருவர் உட்கார்ந்து பணிவிடை செய்வதுபோல் செதுக் கப்பட்டுள்ளது. அப்பணிவிடையாளர்களின் தலைமயிர் முடியப் பட்டுள்ள விதமும் அவர்கள் கண்களிலே கனியும் அன்பும் சிற்பி யின் கலைத்திறமையைக் காட்டுகின்றன.

இரண்டாவது சிவனுடையது. அவரது வாயிற்காவலரின் (துவாரபாலகர்களின்) கம்பீரமான தோற்றம் காண்போரைக் கவரும். அதற்கடுத்ததில் விளங்குபவர் நான்முகன். மும்மூர்த்திகளுக்கும் ஒரிடத்திலேயே கோயில் கண்டுவிட்டார் பல்லவ மன்னர்.

இந்த மண்டபங்களை ஒட்டினாற்போல் துர்க்கை ஓர் எருமைத் தலையில் அமைதியாக நிற்கிறாள். மகிஷாசுர மர்த்தனியைச் சிருஷ்டிப்பதில் பல்லவச் சிற்பிகள் கைதேர்ந்தவர் கள். சிங்கத்தூணும் ஸோமாஸ்கந்தருருவமும் மகிஷாசுரமர்த்தனி உருவமும்தான் மாமல்லபுரத்தில் அதிகம் காணப்படுகின்றன.

திருமூர்த்தி மண்டபத்திற்குச் சிறிது தூரத்தில் கோடிக்கல் மண்டபமெனும் ஒரு மண்டபமுள்ளது. கதை சொல்வோன் இதைத் 'திரௌபதி மண்டப'மென்று கூறுகிறான். இம்மண்டபத் தில் பெண் துவாரபாலகியின் உருவமிருப்பதால், பெயர் மேற் கண்டவிதமாக வந்துவிட்டதோ என்னவோ! பெண் துவார பாலகியிருப்பதால் துர்க்கைக்கு ஏற்ற கோயிலாக இது விளங்கி யிருக்க வேண்டும். அப்பெண் பாலகி வில்லைத் தாங்கி நிற்கும் வீரபாவம் அக்காலச் சிற்ப நிலையை உணர்த்துகிறது. அவ்விரு மங்கையரும் இரண்டு காதுகளிலும் அணிந்திருக்கும் குண்டலங் கள் அக்காலத்தில் உன்னத நிலையிலிருந்துவந்த ஆடை ஆபரணங்களின் நாகரிகத்தைக் காட்டுகின்றன. கழுத்திலே சிறு மாலை, ஒரு கை வில்லைச் சுமந்து, மற்றொரு கை இடுப்பி லிருக்க இத்தோற்றம் அக்காலப் பெண்குலச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

இம்மண்டபத்துத் தூண்கள் முன்னேற்றமடையாத பட்டை வடிவமாயும் சதுர வடிவமாயும் உள்ளன. இதற்கடுத்ததாக, பூர்த்தி யாகாத மண்டபம் ஒன்றுள்ளது. இதையொட்டி ஐந்துலிங்க மண்டபமென்ற பெயருள்ள ஒரு மண்டபமிருக்கிறது. இந்த மண்ட பத்தில் ஐந்து இறையகங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் லிங்கம் பிரதிஷ்டை செய்வதற்காகக் குழிவுகள் காணப்படுகின்றன. ஐம்பெரும் பூதங்களைக் குறிக்க ஐந்து லிங்கங்களை அமைக்க அவர்கள் எண்ணி இருக்கலாம். ஒவ்வொரு கர்ப்பக் கிருகவாயிலிலும் தலையில் இரு கொம்புகளுள்ள துவார பாலகர்கள் விளங்குகிறார்கள். அஜந்தா மாதிரியில் பதினாறு பட்டை வடிவங் கொண்ட தூண்களும் முக மண்டபத்தில் சிறு சிறு வளைவுகளுள்ள வடிவத் தூண்களுமுள்ளன. அழகும் அன்பும் அருளும் விளங்கவேண்டிய அந்த இடத்தில் இன்று வெளவால்கள் வாசம் செய்து களிக்கின்றன!

இவற்றிற்குப் பிறகு வராக மண்டபத்திற்கு வந்து சேர்வோம். எப்படியோ தப்பித்தவறி இம்மண்டபத்திற்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டது. இம்மண்டபத்தில் உள்ளே இரு பக்கச்

சுவர்ப் பாறைகளிலும் கதைகள் கூறும் மதிற் சிற்பங்கள் இருக்கின்றன. இடப் பக்கத்தில் வராகவதாரக் கதை சுமார் எட்டுச் சிற்பங்களின் மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. பூமியைச் சுருட்டிச் சென்ற அரக்கன் பணிந்து படிந்து கைகூப்பிக் கிடக்கிறான். திருமால் வராக அவதாரமெடுத்து ஒரு கையில் **இலக்குமியைத்** தாங்கி நிற்கிறார். நாடக அரங்கம் போன்ற அம் மண்டபத்திலே இக்காட்சி உயிருள்ள நாடகமாகவே தோன்றுகிறது. அந்தக் கம்பீரமான வராகமூர்த்தி கையிலே செல்வத் திருமகளைத் தூக்கிக் கொண்டிருக்கும் காட்சி, மேலே தேவர்கள் வணங்கும் காட்சி, திருமால் நமக்கு வராகவதாரமெடுத்து அரக்கனை யழித்த அந்த நாளை நினைப்பூட்டுகின்றன. வராக மூர்த்தியின் உயரம் ஏறக் குறைய ஆறடி இருக்கலாம். மனிதர்களின் உயரம் எவ்வளவோ அதே அளவில்தான் பல்லவச் சிற்பிகள் சிற்பங்களைச் சிருஷ்டித் திருக் கின்றனர். வராக மூர்த்திக்கு அருகே நிற்பவர் நிற்கும் முறை அஜந்தா ஓவியப் பாணியை ஒத்திருக்கிறது.

இம் மண்டபத்திலேயே வராகவதாரப் பாறைச் சிற்பத்திற் கெதிரே வலப்பக்கப் பாறையில் மூவுலகும் ஈரடியால் அளந்து வாமனாவதாரமெடுத்து, மகாபலியின் கர்வத்தை அடக்கி அழுத்தி விஸ்வரூபம் எடுத்த கதை செதுக்கப்பட்டிருக்கிறது. 'விண் ஓர் அடி, இந்த மண் மற்றோர் அடி, இன்னொரு அடியை அளக்க இடமெங்கே? என்கிறார் மாபெரும் வடிவமெடுத்து ஆகாயத் திற்கும் பூமிக்கும் ஒரே உருவமாக நிற்கும் திருமால்.

விண்ணை அளப்பதுபோல் தூக்கிய ஒரு கால். எட்டுக் கைகள். கீழே மகாபலி, வியப்பும் அச்சமும் கலந்த பாவத்தில் உட்கார்ந்திருக்கிறான். வாமனர் விண்ணையும் மண்ணையும் **அளந்தது ஆச்சரியமன்று;** சிற்பி விண்ணையும் மண்ணையும் ஈரடியால் அளக்கும் உணர்சசி நமக்குத் தோன்றும் வண்ணம் அந்த விஸ்வரூபமெடுத்த திருமாலையும், மகாபலியையும் சுலபமாகச் செய்ததுதான் விந்தையினும் விந்தை. திரைச் சீலையிலும் சுவரிலும் காகிதத்திலும் தூரிகைகளால் வ்ண்ணங்களைக் கொண்டு ஓர் ஓவியம் எழுதி, பாவத்தையும் அழகையும் இதயக் கிளர்ச்சியையும் காட்டிவிடலாம். அம் முறையிலே ஓவியன் எடுக் கும் பிரயாசையோ, திறனோ அவ்வளவு கஷ்டமானவையல்ல. ஆனால், சிற்பி பாறையைத் தேர்ந்தெடுத்துத் திருத்தி, லட்சண அள்வு மாறுபடாமல் உறுப்புகளின் அளவில் பேத முண்டாக் காமல் அழகுபடவும் உள்ளத்திலுள்ளதை முகபாவத்தினால்

காட்டும்படியான அமைப்புடனும் ஒரு சிலையைச் செதுக்கு வதற்கு அவனுக்குக் கலையுள்ளமும் பொறுமையும் ஓவியத் திறனும் கவிதை மனமும் பரந்த அறிவும் எவ்வளவு இருக்க வேண்டும்! பகீரதன் தவத்தையும் மகிஷாசுரமர்த்தனியையும் மகாபலிச் சிற்பத்தையும் கண்டபிறகு "பல்லவச் சிற்பி, மயன், மயன் என்கிறார்களே அந்த தேவ சிற்பிதானோ'' என்ற எண்ணம் நமக்கு மனத்தில் விழுந்துவிடுகிறது.

இம்மண்டபக் கர்ப்பக்கிருகத்தின் இடப்பாகத்தில் தாமரை மலர்மீது இருபுறமும் சேடிகள், கையில் குடத்துடன் நீராட்ட யத்தனிக்கும் பாணியில் மகாலட்சுமி சோபையுடன் விளங்கு கிறாள்.

இச்சிற்பத்துக்கு வலப்புறம் வெண்கொற்றக்குடையின் கீழே விளங்குகிறாள் துர்க்கை. போரிலே மகிஷாசுரனை வென்று சாந்தமடைந்த நிலையிலே செதுக்கப்பட்டிருக்கிறது இச்சிற்பம். கர்ப்பக்கிருகத்தில் சிலையேதுமில்லை.

'லைட்ஹவு' சிற்குக் கீழ்ப்புறத்தே ஒரு மண்டபமிருக்கிறது. ராமாநுஜ மண்டபம் என்று பெயராம்! இராமாநுஜருக்கும் இம் மணடபத்திற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரிய வில்லை. இம்மண்டபத்திலுள்ள சிற்பங்கள் உருத்தெரியா விதத் தில் அழிக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்திலுள்ள சிங்கத் தூண்கள் அழியா அழகு பெற்றவை. இம்மண்டபத்தில் இருபுறங் களிலுமுள்ள பாறைச் சுவரில் அழகிய கதைச் சிற்பங்கள் இருந் திருக்க வேண்டும். அவை எக்காரணத்தினாலோ எவராலோ சிதைக்கப்பட்டிருக்கின்றன.

இம்மண்டபத்திற்குக் கீழே பஞ்சபாண்டவர்கள் ரதத்திற்குப் போகும் வழியில், தருமர்மண்டபம் என்ற ஒரு மண்டபமிருக் கிறது. மகேந்திரர் காலத்தில் அமைக்கப்பட்டது அம் மண்டபம் என அதிலுள்ள கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

'லைட்ஹவு' சிற்கு எதிராக, பழைய கலங்கரை விளக்கத் திற்குக் கீழே அமைந்திருப்பது மகிஷாசுர மண்டபம். ஒவ் வொருவரும் தவறாமல் பார்க்க வேண்டிய சிரஞ்சீவிச் சிற்ப முடைய மண்டபம் இது. இருபுறமும் இரண்டு மதிற் சிற்பங்கள் இருக்கின்றன. இடப்பக்கப் பாறைச் சுவரிலே யோகநித்திரை புரிகிறார் நீலநிறத்துப்பெருமான். ஐந்து தலையுடைய ஆதி சேஷனின் படுக்கையிலே, ஒரு கை தலைப்பக்கமாக

நீண்டிருக்கிறது. பாதி மூடிய கண்களும் அகன்ற மார்பும் நீண்ட கால்களும் பாம்பின்மீது வைத்த தலையும் கொண்ட எம்பெருமானைத் தரிசிக்க மல்லைக்கு ஓடி வாருங்கள். பணங்கொடுத்து, கற்பூர ஆரத்தியாவது கிடைக்காதா என்று எங்கெங்கோ சென்று பள்ளி கொண்ட பெருமானைத் தரிசிக்கப் பாடுபடுபவர்கள் இங்குள்ள அறிதுயில்பயில் மாலை எளிதில் கண்டு களிக்கலாம்!

அந்தச் சிற்பத் தொகுதியில் எதிர் ஓரத்தே இரு உருவங்களிருக்கின்றன. அடிபட்டு 'அப்பாடா' என்று முதுகைத் தடவிக் கொள்கிறான் ஒருவன்; மற்றொருவன் கையிலுள்ள கதா யுதத்தால் ஓங்கி அடித்து விடும் நிலையிலிருக்கிறான். மேற்கு மூலையிலுள்ள இவ்வுருவமும் எதிர்ப்பாறையில் கிழக்குப் பாகத்தே உள்ள மகிஷாசுரன் உருவமும் அம்மண்டபச் சிற்ப அற்புதத்தில் நேர் எதிரேயுள்ள சிரஞ்சீவிச் சிற்பங்களாகும். அவ் வீர உருவத்தின் கோப நிலையை உதடும் கண்ணும் காட்டுகின்றன. சமயம் பார்த்துத் தாக்கும் எண்ணத்தைச் சாய்ந்துள்ள காலும் கதையைப் பிடித்துள்ள முறையும் காட்டுகின்றன.

திருமாலின் திருக்கோலத்துக் கெதிரேயுள்ள பாறையில்தான் உலகம் புகழும் மகிஷாசுர மர்த்தனிச் சிற்பம் செதுக்கப் பட்டுள்ளது.

சீற்றத்தைக் காட்டவேண்டுமானால் — கோபாவேச காளியைக் காட்டவேண்டுமானால் கோரைப் பற்களும் தொங்கிய சிவந்த நாக்கும் விரித்த தலைமயிரும் கூடிய உருவத்தைத்தான் இது வரையில் நாம் பல ஊர்களில் கண்டிருக்கிறோம். ஆனால், முக பாவத்தின் மூலம் நவ ரசங்களை விளக்கும் பல்லவ சிற்பி மேற் கண்ட முறையைத் தன் துர்க்கைக்குக் கொள்ளவில்லை.

இத் துர்க்கைக்கு எட்டுக் கைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கையிலும் ஒவ்வொருவித ஆயுதமிருக்கிறது. எனினும், இரு கைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கையிலே கத்தி, மற்றொரு கையிலே வில். இந்த இரு கைகள் மட்டுமே வீரத்தை உணர்த்தப் போதுமானவை.

மகிஷாசுரன் முகத்தில் துள்ளும் கபடத்தைக் காணுங்கள். புலி பதுங்குவது பாய்வதற்கெளிது என்னும் முறைப்படி, சாய்ந்து கதாயுதத்தால் அடித்துவிடலாமென்று எண்ணும் தந்திரமுடைய மகிஷாசுரனைப் படைத்த சிற்பியின் திறனைப் போற்றாதவர்களே கிடையாது.

அவசியம் பார்க்கவேண்டிய மண்டபங்களில் வராஹப் பெருமாள் கோயிலும் ஒன்று. இதுவும் ஒரு மண்டபமே எனினும், பிற்காலத்தில் இம் மண்டபம் முன்பாகங்களிலெல்லாம் அடைக்கப்பட்டு ஒரு கோயிலாக்கப்பட்டது. இங்கே நித்திய பூஜை நடக்கிறது. அந்த வேளைகளில்தான் இக் கோயிலுள்ளே சென்று பார்க்க முடியும். நரசிம்மவர்மன் காலத்திய மண்டபம் இது.

இருளடைந்த இம் மண்டபதுக்குள்ளே ஒரு விநாடி சுவர்க்கத்தையே நாம் பார்த்துவிடுகிறோம். என்ன சுவர்க்கமா? ஆம், இடப் பக்கச் சுவரிலே படைக்கும் தொழில் கொண்ட நான்முகனும் அழித்து ஆளும் அரனும் விளங்குகிறார்கள்.

பல்லவகுல விளக்கான சிம்மவிஷ்ணு தன் தேவியருடன் அமர்ந்திருக்கிறான் நடுவே வலப் பக்கச் சுவரிலே மகேந்திரன் தேவியருக்கு ஏதோ ஒன்றைக் காட்டுவது போன்ற சிற்பம். அவன் சுட்டிக்காட்டுவது வேறு எதையுமில்லை; அசுரனை வென்று வெற்றியடைந்து, தன் வெற்றியைக் கொண்டாடுவது போல் அமைதியாக நிற்கும் துர்க்கையைத்தான் காட்டுகிறான். இம் மண்டபத்தில் தன் பாட்டனாரின் சிற்பத்தையும் தன் தந்தையின் சிற்பத்தையும் செதுக்கிய மாமல்லன் தன்னுடைய உருவத்தையும் செதுக்கும்படிச் செய்யாதது அவனுடைய ஆடம்பரமற்ற அடக்க நிலையைக் காட்டுகிறது. அழியாச் சிற்பச் செல்வம் நிறைந்த இடம் பூட்டப்பட்டு இருள் சூழ்ந்திருக்கிறது. மாமல்லபுரம் வருபவர்கள் கண்களில் படமுடியாதபடி தப்பிவிடுமாறு செய்யப்பட்டிருக்கிறது.

மாமல்லபுரக் கடற்கரையோரமாக வடக்கு நோக்கி மூன்று கல் தூரம் சென்றோமானால், சளுவன்குப்பம் என்ற ஊரில் குகை மண்டபம் ஒன்று இருக்கிறது. இம் மண்டபம் இராசசிம்மன் காலத்தியது. புலிக்குகை என்று இதனைக் கூறுவர். ஆனால் சிங்கத்தின் முகம்தான் — வாய் திறந்து உறுமும் நிலையிலுள்ள சிங்கங்கள்தாம். இதனருகே பூமியிலகப்பட்ட சிங்கம், இலக்குமி, பிள்ளையார் முதலிய சிலைகளை வைத்துள்ளார்கள். இதனருகே ஒரு மண்டபம் இருக்கிறது. அதுவும் பாறையில் குடையப்பட்ட மண்டப வகைதான். அதிரண சண்டன் மண்டபம் என்று பெயர். அதிரண சண்டன் என்பது இராசசிம்மனுக்கு ஒரு விருதுப் பெயர்.

அம்மண்டபத்தின் கர்ப்பக்கிருகத்தில் பதினாறு பட்டை வடிவமுள்ளதாய், உயரமானதாய் உள்ள லிங்கம் ஒன்று இருக்கிறது. இந்த லிங்கம் அமைக்கப்பட்ட கல் கருமை நிறமுடையதாயிருக்கிறது. பூர்த்தியான மண்டபங்களையும் சேர்த்து மாமல்லையில் பன்னிரண்டு மண்டபங்கள் உள்ளன.

**பகீரதன் தவம்**

அந்நிய நாட்டினின்று இந்தியாவுக்கு வந்து கலைக் கூடங்களைக் கண்டு களித்துச் செல்வோர், மல்லையிலுள்ள அர்ச்சுனன் தவம் என்னும் பெரும் பாறைச்சிற்பத்தைக் கண்டு பெரிதும் புகழ்கிறார்கள். ஆராய்ச்சியாளர்களுக்குள்ளே கருத்து வேற்றுமையையும் பற்பல கதை மயக்கத்தையும் உண்டாக்கும் இப்பாறைச்சிற்பம் மாமல்லபுரத்திலே நடுநாயகமாக விளங்குகிறது. இப்பாறை எண்பதடி நீளமும், முப்பதடி உயரமும் கூடியதாயிருக்கிறது. இந்தப் பாறைச் சிற்பத்திற்கு யார் 'அர்ச்சுனன் தவம்' என்று பெயர் கொடுத்தார் எனத்தெரியவில்லை.

வலப்பக்கப் பாறையிலே தேவர்களும் தேவியர்களும், கின்னர கிம்புருடர்களும் ஓடிவரும் பாவத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றனர். இரண்டு பிரம்மாண்டமான யானைகளும் கண்ணை மூடிக்கொண்டு தவஞ்செய்யும் பூனையும் வலப்பக்கப் பாறையிலே செதுக்கப்பட்டுள்ளன.

தென்பாகத்தில் மேல்பக்க ஓரத்தில் முனிபுங்கவர் ஒருவர் ஒரு காலைத் தூக்கி மடக்கிக் கொண்டும் இரு கைகளைத் தலைக்கு மேல் கூப்பிக்கொண்டும் தவஞ்செய்கின்றார். அவரருகில் நான்கு கைகளைக் கொண்ட சிவன் அத் தவசிக்குக் காட்சியளிக்கிறார்.

மான் துள்ளியோடுகிறது. பூத கணங்கள் வடதிசைநோக்கி ஓடுகின்றன. ஓரிரண்டு சிங்கங்கள் பாயும் நிலையில் இருக்கின்றன. வில்லுடன் கூடிய வேடர்கள் நிற்கிறார்கள். ஆமை ஒன்றும் உள்ளது. அன்னப்பட்சியும் இருக்கிறது.

கீழ்ப்பாகத்தே பல்லவக் கட்டட அமைப்பைப்போல ஒரு சிறு கோயிலும் அக்கோயிலருகே ஒரு முனிவரும் தோற்றம் தருகின்றனர்.

ஒற்றைக்காலால் நின்று தவஞ் செய்பவர் அர்ச்சுனன் என்று கூறி, அதனால் அப்பாறைச்சிற்பத்துக்கு 'அர்ச்சுனன் தவம்'

என்று பெயர் சூட்டுகிறார்கள் சிலர். அரசாங்கத்தாரும் பல கையில் அவ்வாறே பொறித்திருக்கிறார்கள். மாமல்லபுரம் என்ற பெயர் போய் மகாபலிபுரம் என்பது எப்படி நிலைத்ததோ அது போலவேதான் இதுவும்.

**ரதங்கள்**

பாறையைக் குடைந்து குகை மண்டபங்கள் அமைப்பதைப் போல், ஒரே பாறையைக் கோயிலாக மாற்றும் சக்தியைப் பல்லவர்கள் நன்றாகப் பெற்றிருந்தார்கள். ஒரே கல்லைச் செதுக்கி விமானம், விமானத்தில் மாடங்கள், கருஅறை, தூண் கள், சிற்பங்கள் கொண்ட கோயிலாக்கினார்கள். அதைத்தான் 'ரதம்' என்று பிற் காலத்தே அழைக்கத் தொடங்கினர். இம் மாதிரியான ஒரே கல்லாலான ஒன்பது கோயில்கள் மல்லையிலுள்ளன. ஊருக்குள் வரும்பொழுதே நம்மை இரண்டு ரதங்கள் வரவேற்கின்றன. பிடாரி ரதம் என்றும், வளையன்குட்டை ரதம் என்றும் பெயர் கொண்ட இவை ஊரின் புறத்தே இருக்கின்றன. அக்கோயில்களில் சிலை ஏதுமில்லை. பூர்த்தியாகாத நிலையிலிருக்கும் அவை மாமல்லையைக் காவல் புரிகின்றன!

ஊருக்குள்ளே 'பகீரதன் தவம்' அமைந்துள்ள பாறைக் கருகில் ஒரு ரதம் உள்ளது. அதற்குக் கணேசர்ரதம் என்று பெயர். மேற்குத் திக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் வேலைப்பாடுகள் மெச்சத் தகுந்தவைகளுள் ஒன்று. இரண்டு அடுக்குகளும் குதிரை லாடவடிவமுள்ள மேல் விதானமும், உச்சியில் ஏழு கலசங்களும் வேலாயுத வடிவத்துடனும் கூடிய இந்த ரதத்திலுள்ளள தூண் களைப் பல சிங்கங்கள் தாங்குகின்றன. இக்கோயிலின் கூடு சந்திரனின் முகங்கொண்டது.

பல்லவர்களின் ரதங்களில் பஞ்சபாண்டவர் ரதம் அல்லது ஐந்து ரதங்கள்தாம் உலகப் பிரசித்தி பெற்றவை. மேல் நாடு களிலிருந்து பல்லவச் சிற்பங்களைக் காணவருபவர்கள் கடற் கரைக் கோயிலையும் அர்ஜூனன் தவத்தையும் ஐந்து ரதங்களை யும் காணாமல் செல்லமாட்டார்கள். ஐந்து என்றவுடன் பாரதக் கதை பஞ்சபாண்டவர் நினைவு மக்களுக்கு வந்ததனாலோ என்ன வோ, இந்த ரதங்களுக்குப் பஞ்சபாண்டவர் பெயர்கள் சூட்டப் பட்டன போலும்.

இந்த ரதங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான

அமைப்பை உடையதாயிருக்கிறது. நரசிம்மவர்மன் காலத்தில் ஆரம்பமாகிய இந்தச் சிற்ப வேலை கடைசி அரசன் இரண்டாம் நந்திவர்மன் காலத்திலும் முடிந்த பாடில்லை. வேலைகள் பூர்த்தி யாகாது, சிற்பியின் கனவு நிறைவேறாமல் அரை குறையாக நின்று விட்ட இவை ஊருக்குத் தெற்கே சவுக்கு மரங்கள் புடைசூழ மணற் பாங்கான இடத்திலுள்ளன. இவற்றுள் நான்கு கோயில்கள் ஒரு வரிசையிலும், ஒன்று தனித்தும் இருக்கிறது. முதலில் நம்மை வரவேற்பது கம்பீரமான ஆறடி உயரத்திலிருக்கும் ஒரே கல்லால் ஆன சிங்கந்தான்.

சிங்க உருவத்திற்கு அருகே ஒரு சிறு ரதம் இருக்கிறது. அது தான் முதல் கோயில். அதைத் திரௌபதிரதமென்று கூறு கின்றனர். அதன் மேல்கூரை நான்கு புறமும் ஒரே வடிவத்தையும் கூரை வீட்டின் தோற்றத்தையும் அளிக்கிறது.

ஆடம்பரச் சிற்பம் ஏதுமின்றி உள்ளது இது. இதன் வாயிற் காப்பாளர்களாக உள்ளவர்கள் பெண்துவாரபாலகிகள். அவர் கள் கையில் வில்லும் கத்தியும் ஏந்தியுள்ளனர். மூன்றுபுற இள மாடங்களிலும் துர்க்கையின் சிலைக்கருவறையிலும் துர்க்கை குடி கொண்டிருக்கிறாள். அவளுக்கு நான்கு கரங்கள். அவள் காலடி யிலேயே ஆடவர் இருவர் பணிவுடன் இருக்கிறார்கள்.

அடுத்து விளங்கும் ஒரே கல்லாலான கோயிலை அர்ஜுனன் ரதம் என்கிறார்கள். அதுவும் திரௌபதி ரதமும் ஒரே மேடை யில் அமைந்துள்ளன. அது மூன்றாவதாக விளங்கும் தர்மராசர் ரதத்தைப் போன்று விமான அமைப்பில் ஒத்துள்ளது. அதன் சுற்றுப்புறப் பாறைச்சுவரில் புடைச்சிற்பங்கள் பல உள. ஐரா வதத்தில் காட்சிதரும் இந்திரனும் கருடனோடு திகழும் திருமாலும் காளை தழுவி நிற்கும் கங்காதரனும் அழகுடன் இருப்பதைக் காணலாம். அழகு மங்கையர் ஒயிலாக நிற்கும் சிற்பங்கள் நம் இதயத்தைக் கவரவல்லன. முல்லை நகை, குமிழ் சிரிப்பு, அல்லி விழி என்கிறார்களே அவற்றின் நடமாடும் இலக்கியமோ அந்தச் சிற்பங்கள்!

அடுத்தது பீமன்ரதம். பெயரைப் போலவே பெரியதாயிருக் கிறது! பௌத்த விகாரங்களின் முறையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோயில் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. கூண்டு வண்டியின் வடிவங் கொண்ட விமானம் — சிதம்பரத்து விமானமும் நினைவுக்கு வரும்.

நான்காவதாக 'தருமர் ரதம்' என்றழைக்கப்படும் மாடக் கோயில் ஒன்றுதான் முடிவடைந்த நிலையில் உள்ளது. இக் கோயிலில் இரண்டு மாடிகள் உள்ளன. சிற்ப காலரி ஒன்றை - கண்காட்சியொன்றை-ஏற்படுத்த எண்ணிப் பல்லவன் பிற பாறைகளின் உதவியின்றி 'மாடிப்படிகள்' ஏற்படுத்தியது அற்பு தத்திலும் அற்புதம். கீழே இருந்து மேல் மாடிக்குப்போகப் படிக் கட்டு மரத்தாலாகியது. முதல் மாடிக்குச் சென்றோமானால் பிரகாரம் போன்று சுற்றி வருவதற்கான இடம், ஓரங்களில் சிற் பங்களுடன் காணப்படுகின்றது. இரண்டாவது மாடிக்குச் செல் வதற்குப் பாறையாலாகிய படிக்கட்டுள்ளது.

இதற்கடுத்தபடியாக ஒதுங்கியிருக்கும் கோயிலுக்கு வரு வோம். தெற்குத் திக்கு நோக்கியுள்ள இக்கோயிலுக்குச் சகாதேவர் ரதம் என்று பெயர் கூறப்படுகிறது. பாவம்! நகுலருக்கு ரத மெங்கே? தூங்கானைமாடம் எனும் கோயிலமைப்புக் கொண்டது இந்த ரதம்.

கடற்கரைக் கோயில்

'பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்விசும்பில்
கணங்களியங்கு மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே'

என்று திருமங்கையாழ்வார் சிறப்பித்துப் பாடிய ஜலசயனம், தலசயனம் எனப்படும் கடற்கரைக் கோயிலை, மாமல்லபுரத்தில் முதன் முதலில் பார்த்தோமானால் நமக்குப் பர்மா நினைவோ சீனா நினைவோ வந்துவிடும். அசைப்பிலே சீனக் கோயில்கள், வீடுகளின் அமைப்பை ஒத்திருக்கிறது இக்கடற்கரைக் கோயில்.

இக்கோயிலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். கிழக்குத் திக்கு நோக்கியுள்ள சிவன் கோயில் ஒரு பிரிவு, நடுவே பள்ளி கொண்டிருக்கும் திருமால் உள்ள இடம் இரண்டாவது பிரிவு, மேற்கு நோக்கி இருக்கும் சோமாஸ்கந்தருள்ள இடம் மூன்றாவது பிரிவு.

கிழக்குத் திக்கு நோக்கியிருக்கும் இறை வாழும் இடத்திலே சிவலிங்கம் தன்னந்தனியே, கர்ஜிக்கும் கடலொலியையும் வேகமாக எழும்பி வந்து மோதும் அலையின் வீராவேசத்தையும் அலை எழுப்பும் போது உண்டாகும் பலவித வர்ண ஜாலங் களையும் வெகு தூரத்துக்கு வெகு தூரம் தெரியும் நீல

வானத்தையும் அளக்க முடியாத - அறிய முடியாத அளவுள்ள தொலைவிலே வானமும் கடலும் ஒன்றை ஒன்று தழுவும் அற்புதத் தையும் கண்டு களித்து நிற்கிறது. லிங்கம் சாதாரண பாறையா லானதன்று; மற்ற லிங்கங்களைப் போன்றதும் அன்று. கடப்பைக் கருங்கல் போன்ற ஒருவிதக் கருப்பு வர்ணக் கல்லால் ஆன இந்த லிங்கம் பட்டை வடிவமாகவும் தலைப்பாகம் சாதாரண லிங்கம் போன்ற வடிவமாகவும் உள்ளது.

விளக்கும் கையுமாக நடுப்பாகத்திலுள்ள பிரகாரத்திற்குள் நுழைந்தோமானால் இருளிலே யோகநித்திரை புரியும் திரு மாலைக் காணலாம். சுமார் எட்டடி நீளத்தில் துயிலுறும் அரங் கனின் முகத்திலே தோன்றும் அமைதியை என்னவென்போம்! இப்பொழுது எஞ்சி நிற்கும் கடற்கரைக் கோயிலின் மதிற்புறத்தில் இன்று அலை வந்து மோதுகிறது. தனித்தனியே கண்டெடுத்த நந்திகளையெல்லாம் எடுத்துச் சேர்த்து ஒரு பிரகாரச்சுவர்போல அமைத்து இருக்கிறார்கள். நந்திகளின் சாயல்தான் புலப் படுகின்றதே ஒழிய, முழு உருவத்தையும் அறிய முடியவில்லை.

முக்கியமாக இக்கோயிலின் ஒவ்வொரு மூலையிலும் தாங்கி நிற்கும் சிங்கத்தைப் பற்றிக் கூறவேண்டும். காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலில் இருப்பதைப்போல் முன்னிரு கால் களையும் தூக்கிக் கொண்டிருக்கும் சிங்க உருவங்கள் பிரகாரச் சுவர் மூலைகளில் காணப்படுகின்றன. நரசிம்மவர்மன் காலத்துச் சிங்கங்கள் உட்கார்ந்திருந்தன. ராஜசிம்மன் காலத்தில் அவை கம்பீரமாக எழுந்துவிட்டன!

தமிழகத்தின் மகோன்னத காலத்தைச் சித்தரிக்கும், பண் டைய நாகரிகத்தின் உயர்வைப் பெருமைப்படுத்தும் சின்னம் மாமல்லபுரத்திலிருக்கிறது. அதை அனைவரும் அறியவேண்டும். திறமான புலமை அது; அதைப் பிற நாட்டார் வணக்கஞ் செய் கிறார்கள். நாம் வாளாவிருக்கிறோம் என்ற அபவாதம் நீங்கி வருங்காலச் சந்ததி மெச்சத் தகுந்த வகையில் நாம் ஏதாவது செய்தாக வேண்டும். ஒவ்வொருவரும் கலை யாத்திரை செய்ய வேண்டும். நண்பர்களையும் சென்று காணத் தூண்ட வேண்டும்.

# 3. வாழ்வுசார் தொழில்கள்

(பொறியியலாளர் க. பன்னீர்செல்வம் )

''கருப்புப்பூனையை இருட்டில் தேடும் குருடனைப் போல் நான் தவிக்கிறேன். என் எதிர்காலமே இருண்டு கிடக்கிறது. என்ன செய்வது? எப்படிச் செய்வது? எதுவும் புரியவில்லை'' -தன் வீட்டின் நிலை எண்ணி அங்கலாய்த்துக் கொண்டான் ஆனந்தன்.

''ஆனந்தன் — பெயரில்தான் — வாழ வழி தெரியவில்லை''

ஆனந்தன் ஒன்பதாம் வகுப்புப்படித்துக் கொண்டிருக் கிறான். அவனுடைய பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு ஒரு நல்லவேலைக்குச் சென்று பணம் ஈட்டிக் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றாகவேண்டும். ஆனால் பள்ளிப் படிப்பை முடித்ததும் வேலை கிடைக்குமா?

''பட்டம் பெற்ற படிப்பாளிகளுக்கே வேலை கிடைப்பது குதிரைக் கொம்பு. பள்ளிப்படிப்புக்கு மதிப்பேது?'' - இது அவன் எண்ணம்.

''என் எதிர்காலமே இருண்டு கிடக்கிறதே. நம்பிக்கை ஒளி ஒரு சிறிதும் தெரியாமல் நான் தள்ளாடித் தவிக்கிறேன்; தனிமையிலே அழுகின்றேன். நீயாவது ஒரு வழி சொல்லக் கூடாதா? மணி!'' ஆனந்தன் தன் நண்பன் மணியிடம் அறிவுரை கேட்கிறான்.

''முடியாது என்னும் சொல்லை அகராதியிலிருந்தே எடுத்து விடவேண்டும்'' என்று கூறிய நெப்போலியனின் வாழ்க்கை வரலாற்றைப் படித்ததில்லையா? 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை மறந்து விட்டாயா? பிரச்சினைகளைக் கண்டு மலைத்து நிற்பதைவிட அவற்றிற்குத் தீர்வு காண்பதுதான் அறிவுடைமை. அதோ, நம் ஆசிரியர் வருகிறார். அவர் நமக்கு வழிகாட்டுபவர். வா ஆனந்தா, அவரிடம் கேட்கலாம்'' என்றான் மணி.

ஆசிரியர் எதிரே வரவும்,

'தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல
வன்மையுள் எல்லாம் தலை'

எனும் வள்ளுவர் வாய்மொழி நினைவுக்கு வரவும் ஆனந்தனும் மணியும் தங்கள் குறை நீங்க அறிவுரை கேட்டனர்.

ஆனந்தன் : ஐயா, எங்கள் பிரச்சினைகளை விளக்கமாகத் தங்களிடம் கூறிவிட்டோம். வருங்காலம் வளமாக வழியொன்று கூறுங்கள்.

ஆசிரியர் : ஆனந்தா! உழைப்பின் உயர்வை உணர்ந்தவன் நீ. உன்னைப் போல உன் நண்பனும் எந்தப் பிரச்சனையையும் எதிர்நோக்கி வெற்றி காணமுடியும். விரைவில் வேலைக்குச் செல்லவேண்டும் என்று எண்ணினால், பள்ளிப்படிப்பை முடித்ததும், தொழிற்பயிற்சிப்பள்ளியில் சேரலாம். தொழில் கற்றுக்கொள்ளலாம்.

ஆனந்தன் : ஐயா, தொழிற்பயிற்சி பெறுவதால் என்ன பயன்?

ஆசிரியர் : தொழிற்பயிற்சி பெற்றிருப்போர்க்கு வேலை கிடைப்பது மிகவும் எளிது. வேலை கிடைக்கா விட்டாலும் சொந்தமாகத் தாமே தொழில்களைத் தொடங்கி நடத்தலாமே. ஏதேனும் ஒரு தொழில் தெரிந்தவன், நல்லமுறையில் பொருளீட்டி முன்னேறலாம்.

மணி : தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிலாமலேயே நிறையப்பேர் . தொழில்களைக் கற்றுக் கொள்கிறார்களே! தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து தொழில் கற்பதால் என்ன பயன்?

ஆசிரியர் : தொழிற்பயிற்சி நிலையத்தில், குறிப்பிட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையில் பயிற்சியை முறையாக அளிக்கிறார்கள். தொழில் தெரிந்த ஒருவரிடம், பல ஆண்டுகள் பணி புரிந்துதான், தாமாகவே சிறிது சிறிதாகத் தொழிலைக் கற்கவேண்டும். மேலும் அவர் தமக்குத் தெரிந்த தொழில்நுட்பங்களை எல்லாம் கற்பவருக்குச் சொல்லித்தருவதில்லை. எனவே பல ஆண்டுகளாகப் பயிலும் தொழிற் கல்வியை ஓரிரு ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்றுக்கொள்ளலாம். ஓராண்டு, இரண்டாண்டு, என்பது குறுகிய கால அளவு தானே!

ஆனந்தன் : ஓராண்டு காலத்தில் தொழிலைக் கற்றுக்கொடுத்து விடுகிறார்களா! வியப்பாக இருக்கிறதே! ஓராண்டு காலத்தில் கற்றுக்கொடுக்கப்படும் சில தொழில் களைச் சொல்லுங்கள் ஐயா!

ஆசிரியர் : தச்சு, குழாய்பொருத்துதல், டீசல் வேலை, அச்சுவார்த்தல்...

ஆனந்தன் : (இடைமறித்து) அச்சுவார்த்தல் என்றால் என்ன?

ஆசிரியர் : விநாயகர் சதுர்த்தியின் போது விநாயகர் உருவம் பதித்த அச்சில் களிமண்ணை நிரப்பி விநாயகர் பொம்மை செய்வதைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? அதே போல்தான் அச்சுவார்ப்பது. மணற்கலவையால் அச்சு செய்து அதில் உயர் வெப்ப நிலைக்குக் காய்ச்சப்பட்டுத் திரவ வடிவில் இருக்கும் உலோகக் குழம்பை ஊற்றுவார்கள். திரவ வடிவில் அச்சில் நிரம்பிய உலோகம் பிறகு குளிர் ந்து திடவடிவம் பெறும். பிறகு மணல் அச்சை உடைத்து அகற்றிவிடுவார்கள். இவ்வாறு உலோகங் களைக் காய்ச்சி வார்த்துத் தேவையான உலோக வடிவங்களைச் செய்பவர் 'அச்சுவார்ப்பவர்' என அழைக்கப்படுகிறார்.

ஆனந்தன் : உலோகத்தில் சிலைகள் செய்வதெல்லாம் இந்த முறையில்தானா?

ஆசிரியர் : ஆமாம்.

மணி : ஓராண்டு காலத்தில் கற்பிக்கப்படும் வேறு தொழில்களைக் கூறுங்கள் ஐயா!

ஆசிரியர் : உலோகத் தகடு வேலை, கையால் அச்சு கோர்ப்பது, புத்தகம் கட்டுவது, காலணி உற்பத்தி, தோல் பொருள் உற்பத்தி, பற்றவைத்தல்.

ஆனந்தன் : பற்ற வைத்தல் என்றால்?

ஆசிரியர் : பற்றவைப்பது என்றால், வேறெதுவும் என்று நினைத்துவிடாதீர்கள்! உலோகத் துண்டுகளை உருக்கி ஒன்றாக இணைப்பது. வேண்டிய பகுதி களை உயர்வெப்ப நிலையில் உருகச் செய்து,

மேலும் உருகிய உலோகத்தை நடுவில் உள்ள குழிவான பகுதியில் நிரப்புவார்கள். உருகிய உலோகம் குளிர்ந்து ஒன்றாக இணைந்துவிடும் இந்தத் தொழிலைச் செய்பவரே 'பற்றவைப்பவர்'.

மணி : வீடுகளுக்கு இரும்பு 'கிரில்கள்' பற்றவைத்தல் முறையில்தான் செய்கிறார்களா? ஐயா!

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய்! இந்தமுறையில்தான் செய் கிறார்கள்.

ஆனந்தன் : இரண்டாண்டு காலத்தில் பயிற்சியளிக்கப்படும் சில தொழில்களைக் கூறுங்கள் ஐயா!

ஆசிரியர் : ஏராளமாக இருக்கின்றன. கம்மியர் தொழில், கடிகாரம் பழுதுபார்த்தல், கம்பி இல்லாத் தந்தி இயக்குதல், கடைசல் பிடித்தல், கட்டடவரைவு, நில அளவை, வண்ணம் தீட்டல், மின்சாரப் பணி... எனப் பல தொழில்கள் உண்டு.

மணி : ஐயா, இந்நாளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்குப் போட்டி அதிகமாக உள்ளதே. எனக்கு யாராவது சிபார்சு செய்தால்தானே இடம் கிடைக்கும்.

ஆசிரியர் : யாருடைய பரிந்துரையும் தேவையில்லை. தொழிற் பயிற்சி நிலையத்தில், பள்ளியிறுதி வகுப்பு மதிப் பெண்களின் அடிப்படையில்தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். கணிதம், அறிவியல் ஆகிய இரு பாடங்களிலும் எடுக்கும் மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டே மாணவர்களின் தேர்வு நடைபெறும்.

ஆனந்தன் : அப்படியானால், பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில், கணிதம் மற்றும் அறிவியல் பாடத்தில் அதிகமான மதிப்பெண் பெற்றிருந்தால் தொழிற்பயிற்சி நிலை யத்தில் சேர இடம் கிடைக்குமா?

ஆசிரியர் : நிச்சயமாக. அந்த இரண்டு பாடங்களின் மதிப் பெண்கள்தாம் முதலில் கணக்கெடுத்துக் கொள்ளப்படும். அதிலே அதிக மதிப்பெண்கள் எடுக்கவேண்டும்.

மணி/ ஆனந்தன் : அப்படியானால் அடுத்த ஆண்டு பத்தாம் வகுப்பில் இரு பாடங்களிலும் மிக அதிகமான மதிப்பெண்கள் எடுப்போம். இப்போதே அதற்காக முயற்சி செய்வோம்.

ஆசிரியர் : தொழிற்பயிற்சிநிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுவது மிகவும் சிறந்தது. ஒருவேளை நீங்கள் தொழிற்பயிற்சிநிலையத்தில் சேராது போனாலும், அதற்காக மனம் சோர்ந்துவிடவேண்டாம். சற்றுச் சிரமம் எடுத்துக்கொண்டால், தொழில் நிறுவனங் களில் சேர்ந்து அவற்றின் மூலமாகவும் தொழிற் பயிற்சி பெறலாம்.

ஆனந்தன் : அது எப்படி என்று விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா!


ஆசிரியர் : அதைப்பற்றிய விவரங்கள் முழுமையாகத் தெரிய வேண்டுமானால், தொழிற்பயிற்சிநிலையத்தின் முதல்வரையோ பயிற்சி உதவிஇயக்குநரையோ அணுகிக் கேட்கவேண்டும். அவர்களிடமிருந்து தான் முழுமையான விவரங்கள் கிடைக்கும்.

மணி/ ஆனந்தன் : மிக்க நன்றி ஐயா, நாளையே நாங்கள் இருவரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் சென்று அது பற்றிக் கேட்டு அறிந்து கொள்கிறோம்.

(இருவரும் நன்றி கூறி ஆசிரியரிடம் விடைபெற்றுச் செல் கின்றனர்)


அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தின் முதல்வர், முக்கிய வேலையில் ஈடுபட்டிருந்ததால், ஆனந்தனும் மணியும் சிறிது நேரம் கழித்துவர நினைத்தார்கள். ஆர்வமுள்ள அவ்விரு வரையும், தொழிற்பயிற்சி நிலையத்தின் பல்வேறு பிரிவுகளைச் சுற்றிப்பார்த்து வரும்படி முதல்வர் கூறினார். அவர்களுடன் ஒரு பணியாளரும் சென்றார்.

தொழிற் கூடத்தின் பல்வேறு பிரிவுகளை ஒவ்வொன்றாகப் பார்த்து விளக்கம் அறிந்துகொண்டிருந்த அவர்கள், ஒரு பகுதி யில் மகளிரும் இயந்திரங்களில் பயிற்சி பெறுவதைக் கண்டு வியந்தனர்.



ஆனந்தன் : மகளிருங்கூட, தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சிபெறலாமா?

பணியாளர் : ஆண்கள் செய்யக்கூடிய எந்த வேலையையும் பெண்களாலும் செய்யமுடியும். இங்கே கடைசல் பொறியில் பயிற்சி பெறும் மகளிர், 'கருவிகள் கம்மியர்' தொழில் பிரிவைச் சேர்ந்தவர்கள்.



மணி : அதோ ஒருவர் இயக்குகிறாரே, அந்த இயந்திரத்தின் பெயர் என்ன?

பணியாளர்: 'மில்லிங் மிஷின்'. அவர் 'இயந்திரப் பணியாளர்' தொழில்பிரிவைச் சேர்ந்தவர். வாருங்கள்; இவ்வாறு பல இயந்திரங்கள் அந்தப் பிரிவிலும் உள்ளன. அவற்றையும் காணலாம்.

(பணியாளர் தொழில் கூடத்தின் பல்வேறு பிரிவு களையும் நேரில் காட்டி, விளக்கிய பின்னர், அவர்கள் முதல்வர் அறைக்குச் செல்கிறார்கள். முதல்வர் ஆனந்தனையும் மணியையும் அன்புடன் வரவேற்கிறார்.)

முதல்வர் : தொழிற்பயிற்சி பெறுவதில் உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். உங்களுக்கு என் னென்ன விவரங்கள் தேவை?

ஆனந்தன் : தொழில் நிறுவனங்களின் மூலமாகவும் தொழில் பயிற்சி பெறமுடியும் என்று எங்கள் ஆசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றிய விவரங்கள் கூறுங்கள் ஐயா!

முதல்வர் : தொழில் நிறுவனங்களில் தொழிற் பயிற்சி அளிப் பதற்காக அரசு ஒரு சட்டமே இயற்றியுள்ளது.

மணி : என்ன சட்டம்? எதற்காக இயற்றப்பட்டுள்ளது?

முதல்வர் : பல்வேறு தொழில்களை ஆற்றக்கூடிய கைதேர்ந்த தொழிலாளர்கள் பற்றாக் குறையாக இருந்தால், புதிய தொழில்களை ஆரம்பிக்கவோ ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்தவோ இயலாது அல்லவா? அதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தடைப்படும். எனவேதான் 'தொழில் பழகுநர்' சட்டம் 1961-ல் இயற்றப்பட்டது.

ஆனந்தன் : அந்தச் சட்டம் என்ன கூறுகிறது, ஐயா?

முதல்வர் : ஒவ்வொரு தொழில் நிறுவனமும் அந்த நிறுவனத் தில் உள்ள வசதிக்கு ஏற்ப, ஒரு குறிப்பிட்ட அளவி னோர்க்குத் தொழிற்பயிற்சி அளிக்கவேண்டும். அது மட்டுமன்று, அவ்வாறு தொழிற் பயிற்சி பெறுபவர்களுக்கு நிறுவனம் - அதாவது அந்தத் தொழில் நிறுவனம் ஒவ்வொரு திங்களும் உதவித் தொகை வழங்கவேண்டும். வழங்கும் உதவித்

தொகையும் அரசு வரையறுத்திருக்கும் அளவிற்குக் குறையாமல் வழங்குவது நிறுவனத்தின் சட்ட முறையிலான கடமையாகும்.

ஆனந்தன் : அரசு வரையறுத்துள்ள உதவித் தொகை எவ்வளவு ஐயா?

முதல்வர் : தற்போது, பயிற்சியின் - குறைந்த அளவு - முதல் ஆண்டில் ரூ.290; இரண்டாம் ஆண்டில் ரூ.330; மூன்றாம் ஆண்டில் ரூ.380; நான்காம் ஆண்டில் ரூ.440; தரப் படவேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு மேலாகப் பயிற்சி அளிக்கப்படுகிற தொழில் பிரிவு எதுவு மில்லை. சில பிரிவுகளில் ஆறே திங்களுக்குள் பயிற்சி முடிவதும் உண்டு.

மணி : 'தொழில் பழகுநர்' சட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி நிறுவனப் பயிற்சி பெறாதவர்களும் தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெறமுடியுமா?

முதல்வர் : எல்லாத் தொழில்களுக்கும் பயிற்சி பெறமுடியா விட்டாலும் கூட, சில தொழில்களில் பயிற்சி பெற முடியும். வேதியியல் தொழிற் சாலைகளில் 'ஆய்வக உதவியாளர்' மற்றும் 'வேதியியல் கருவி கள் கம்மியர்' போன்ற பிரிவுகளில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆனந்தன்: அந்தத் தொழிற்சாலைகள் எங்கெங்கே இருக்கின்றன?

முதல்வர் : சென்னை, வேலூர், மேட்டுர் அணை, தூத்துக்குடி ஆகிய ஊர்களிலும் மற்றும் சில ஊர்களிலும் வேதியியல் தொழிற்சாலைகள் உள்ளன.

மணி : இவை தவிர மற்றத் தொழிற் பிரிவுகள்?

முதல்வர் : அச்சகம் தொடர்பான தொழில்கள் அதாவது அச்சுக் கோர்த்தல் போன்ற தொழில்கள், பெரும் உணவு விடுதிகளில் மேற்பார்வை, அறை அலங் கரிப்புத் தொழில்கள். 'தொழில் பழகுநர்' சட்டத்தின் கீழ்வரும் பயிற்சித் தொழில்களாகும்.

இவை தவிர, நூற்பு மற்றும் நெசவாலைகள், சுரங்கங்கள், பீங்கான் தொழிற் சாலைகள், அழகு நிலையங்கள் ஆகியவற்றில், தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறாதவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆனந்தன் : ஐயா, தொழில் நிறுவனங்களில் பயிற்சி பெற யாரை அணுக வேண்டும்?

முதல்வர் : தொழிற்பயிற்சி நிலைய முதல்வரையோ பயிற்சி உதவி இயக்குநரையோ அணுகினால் அவர்கள் வழிகாட்டி உதவுவார்கள்.

ஆனந்தன் : பயிற்சி உதவி இயக்குநரா? அவர் எங்குள்ளார்?

முதல்வர் : தொழிற்பயிற்சி நிலையத்தில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் முதல்வர் - உங்கள் பள்ளியில் தலைமை ஆசிரியர் போல. சில பெரிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டங்கள் தொடர்பானவற்றைக் கண்காணிக்க தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களே, 'பயிற்சி உதவி இயக்குநர்கள்'

ஆனந்தன் : தொழில் பயிற்சி பெற்றவர்கள், வேலைக்காக வேறெங்கும் செல்லாமல், தாங்களே சொந்தமாகத் தொழில் நடத்த முடியுமா?

முதல்வர் : ஓ.. தாராளமாக! சொந்தமாகத் தொழில் தொடங்கும் ஆர்வமும் திறமையும் உள்ளவர்கள் மாவட்டத்தொழில்மையத்தை அணுகினால், அங் குள்ளோர் உதவிகிடைக்க ஆவன செய்வார்கள். கடனுதவிக்கும் ஏற்பாடு செய்வார்கள்.

மணி : ஐயா, தொழில்நிறுவனங்களிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும் சேர்ந்து தொழிற் பயிற்சிபெற பள்ளியிறுதிவகுப்புத் தேர்ச்சி தேவையல்லவா?

முதல்வர் : பள்ளியிறுதிவகுப்புத் தேர்ச்சி பெற்றும் சேரலாம். சில பிரிவுகளுக்குப் பள்ளியிறுதித் தேர்வு தேவையென்பதில்லை.

ஆனந்தன் : சற்று விளக்கமாகக் கூறுங்கள் ஐயா.

முதல்வர் : கிராமப்புற இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்து, அவர்கள் தாமாகவே தொழில் தொடங்க,

**அரசு 'ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புக்கான பயிற்சித் திட்டம்' என்னும் ஒன்றை வகுத்துச் செயல்பட்டுவருகிறது. இதில் பயிற்சி பெற எழுதப் படிக்கத்தெரிந்திருந்தால் போதுமானது.** வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இதன் முழு விபரம் அறியலாம். பொதுவாக இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் நலனுக்காக வகுக்கப்பட்டதாகும்.

(ஆனந்தனும் மணியும் முதல்வருக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டு, வட்டார வளர்ச்சி அலுவலரைச் சந்திக்கப் புறப்பட்டனர்.)

ஆனந்தன் : ஐயா, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள கிராமப் புற மக்களுக்காக, 'ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்' என்னும் ஒன்றை அரசு செயற்படுத்தி வருகிறதாமே? அதுபற்றி விபரங்கள் அறிய வந்தோம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் : ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்'. அதுதான் 'டிரைசம்' TRYSEM - Training for Rural Youth for Self Employment' அதைப் பற்றி என்னென்ன விபரங்கள் வேண்டும்?

மணி : 'வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்' என்றால் யார் யார்?

வ.வ.அ : குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3500க்கு கீழ் உள்ளவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனந்தன் : இப்பயிற்சித் திட்டம் எதற்காக நடத்தப்படுகிறது?

வ.வ.அ. : கிராமத்தில் வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள், விவசாயத் தொழிலாளிகள், பிற தொழிலாளிகள் ஆகிய அனைவரும் தாம் சொந்த மாக ஒரு தொழிலைத் தொடங்கி நடத்தக்கூடிய

வகையில் தொழிற் பயிற்சி அளிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் அவர்கள் வறுமைநிலையைப் போக்கலாம் அல்லவா?

மணி : இப்பயிற்சித் திட்டத்தில் சேருவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?

வ.வ.அ. : கிராமத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும், எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டும், வயது 18 முதல் 35 வரை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3500க்குக் கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

மணி : ஐயா, இத்திட்டத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்ற வரை பயிற்சி பெறுவோருக்குச் செலவு ஆகுமே!

வ.வ.அ. : அதுதான் இல்லை, இப்பயிற்சித் திட்டத்தில் சேருபவர்களுக்கு ஒவ்வொரு திங்களும் ரூ.250 உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கத் தேவைப்படும் கைக்கருவிகள் அடங்கிய கருவிப்பெட்டியும் இலவசமாக வழங்கப்படுகிறது.

ஆனந்தன்: அரசின் இந்தச் சலுகை மிகவும் ஊக்கம் தரக் கூடியதுதான். இருந்தாலும் ஒரு தொழிலைத் தொடங்க மூலதனம் வேண்டுமே?

வ.வ.அ. : அதற்காக, அரசு ரூ. 3000 முதல் ரூ. 10,000 வரையில் கடனுதவியும் வழங்குகிறது. அதே வேளையில் அதில் திரும்பச் செலுத்த வேண்டிய தொகை மூன்றில் இரண்டு பங்குதான்.

மணி : மீதிப் பணம்?

வ.வ.அ. : மூன்றில் ஒரு பங்கு அரசின் மானியமாக வழங்கப்படுகிறது.

மணி : என்னென்ன தொழில் பிரிவுகளில் தொழில்பயிற்சி அளிக்கப்படுகிறது?.

வ.வ.அ. : ஏராளமான தொழில் பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் சில; பொம்மை செய்தல், பாய் பின்னுதல், மின்மோட்டார் கம்பிச்சுருள் சுற்றுவது, வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுது பார்ப்பது, இருசக்கரவண்டி பழுது பார்த்தல், 'டிராக்டர்' அதாவது உழுவதற்குரிய இயந்திரம் பழுதுபார்ப்பது, நீரேற்றும் இயந்திரம் பழுது பார்த்தல், மின் இணைப்புச் செய்தல், கடிகாரம் பழுதுபார்த்தல், காலணி தயாரித்தல்.... எனப் பல தொழில்கள்.

ஆனந்தன் : எல்லாம் நம் அன்றாடவாழ்விற்குப் பயன் படுவதாகவே உள்ளனவே!

வ.வ.அ. : எல்லாமே வாழ்வுசார் தொழில்கள்தாம்.

ஆனந்தன் : ஐயா, நீங்கள் அளித்த தகவல் மிகவும் உற்சாகத்தைத் தருவதோடு, பயனுள்ளதாகவும் இருக்கிறது. இந்தப் பயிற்சிகளில் எவ்வாறு சேருவது?

வ.வ.அ : இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள், அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆனந்தன் : ஐயா, 'ஓர் ஐயம். இத்தனை வசதிகள் இருந்தும் சொந்தமாகத் தொழில் தொடங்கும் முயற்சியில் பலர் இறங்குவதில்லையே, ஏன்?

வ.வ.அ. : அதுவா? பலர் பாதுகாப்பையே விரும்புகிறார்கள். சவால்களைச் சந்திப்பதற்குத் துணிவில்லை. உழைப்பு உயர்வைத் தரும், 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ!' எனப் பழமொழிகளை நம்முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். அதை

எண்ணிப் பார்த்தால் நமக்குத் தெம்பு பிறக்கும். மேலும் தொழில்கள் பல தொடங்கினால் வேலையில்லாத் திண்டாட்டமும் தீரும். வாழ்க்கையில் சவால்களை எதிர்கொண்டு வாழ்பவர்களுக்கு வளமான வாழ்வு உண்டு. 'உடையர் எனப்படுவது ஊக்கம்'. வள்ளுவரே நமக்கு வழிகாட்டியுள்ளார்.

வட்டார வளர்ச்சி அலுவலரின் அறிவுரையால் மணியும் ஆனந்தனும் ஊக்கம் பெற்றனர். ஆனந்தனின் மனத்திருந்த தளர்ச்சி நீங்கியது; மகிழ்ச்சி பூத்தது; இருள் அகன்றது; நம்பிக்கை ஒளி வீசியது.

**'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**
**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்'**

எனும் பாடல் அவன் செவியில் ஒலித்தது; வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்னும் வேட்கை மிகுந்தது. இந்த உணர்வுதானே வெற்றியின் தொடக்கம்!

# 4. எழுத்துச் சூழல்

(திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி )

### தோற்றுவாய்

'மொழி முதற் காரணமாம் அணுத் திரள் ஒலி' என்பார் நன்னுலார். மொழி, முதலில் ஒலி வடிவம் பெற்றது. மாந்தரின் நாகரிக முதிர்ச்சியும் அறிவுத் தெளிவும் தோன்றிய பின்னர் மொழி, வரிவடிவத்தை ஏற்றது. ஒரு மொழியில் அனைத்துக் கூறுகளையும் வெளிப்படுத்தும் எழுத்து முறை தோன்றி, சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

### எண்ணங்களை வெளிப்படுத்தும் சித்திரங்கள்

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் காட்டு மிராண்டியாகக் குகைகளில் வாழ்ந்த காலத்தில் அவன் தங்கி யிருந்த குகைகளிலும் பக்கத்திலுள்ள பாறைகளிலும் சித்திரங்கள் வரைந்து தன் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறான் என்பது அறிஞர்களின் கருத்து.

### முழுமையான எழுத்து வடிவம்

மொழி முழுமையான எழுத்து வடிவம் கொண்ட காலம் சுமார் கி.மு.3200 முதல் கி.மு. 2200 வரை உள்ள காலமாகும்.

மிகப்பழங்காலத்திலேயே எகிப்தியர்களும் ஒருவகை எழுத்து முறையை உருவாக்கினர். அவ்வப்போது வழக்கிலிருந்த சித்திர எழுத்துகளுடன் எண், பால் இவற்றைக் குறிக்கக் கற்றனர். சில ஒலிக் கட்டுகளைக் குறிக்கும் குறியீடுகளையும் கண்டு பிடித்தனர். பினீசியர்களும் தொன்மை எழுத்து முறைக்குப் பெரிதும் உதவி யுள்ளனர். திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூர் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பெற்ற சில பொருள்கள் பினீசியர் பயன் படுத்தியவற்றை ஒத்திருக்கின்றன.

**கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவின் எழுத்து நிலை**

இந்தியத் துணைக்கண்டத்தின் வடபகுதியில் கி.மு.6 ஆம் நூற்றாண்டுக்கு முன் எந்தவித எழுத்து முறையும் இருந்ததில்லை என்று மேலைநாட்டுத் தொல்எழுத்தறிஞர்கள் கருதுகின்றனர்.

சிந்து சமவெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் காணப் படும் சில குறியீடுகளுக்கும் பிற்காலத்தில் தோன்றிய அசோகர் பிராமி எழுத்துகளில் காணப்படும் சில எழுத்துகளுக்கும் சில ஒற்றுமையிருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.




சுமேரியர், எகிப்தியர், ஹிட்டைட், சீனர் சித்திர எழுத்துகள்

பிராமி எழுத்து, அசோகர் காலத்தில் திடீரென்று தோன்றி வளர்ச்சியடைவதைக் காண்கிறோம். அசோகரின் காலத்தில் இந்த எழுத்துமுறை அவருடைய பேரரசு முழுவதும் பரவி யிருந்தது. இந்த எழுத்துமுறை எளிமையானது. எழுத்துகளில் நல்ல வளர்ச்சியும் வடிவச் சீர்மையும் காணப்படுகின்றன. எழுத்து முறை படிப்பதற்கு எளிமையாகவும் தவறுகள் அதிகம் வருவதற்கு வாய்ப்பில்லாமலும் அமைந்து இருந்தது. மொழியியல் வல்லு நர்கள் தோற்றுவித்த எழுத்து முறைகளைவிட அழகையும் நயத் தையும் உள்அடக்கி வைத்துக் கொள்ளும் தன்மையை அது பெற்றிருந்தது. இந்த எழுத்து முறைக்கு ''அசோகர் பிராமி'' என்று பெயர். இந்தியா முழுவதும் ஏறத்தாழ கி.மு. 3 ஆம் நூற் றாண்டில் ஒரே முறையான எழுத்து முறை பரவியிருந்தது என்று தொல்லியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

## கல்வெட்டுகளில் எழுத்து முறை

அசோகர் பிராகிருத மொழிக் கல்வெட்டுகளைப் பிராமி எழுத்துகளாலேயே செதுக்கினார். தமிழ் பிராமி எழுத்து முறை தமிழ் மொழிக் கல்வெட்டுகளைச் செதுக்குவதற்குப் பயன்படுத்தப் பட்டது. தமிழ்க் கல்வெட்டுகளில் பிராகிருதச் சொற்களும் கலந்துள்ளன.

## தமிழ் மொழியில் சிறப்பு எழுத்துகள்

தமிழ் பிராமிக்கும், அசோகர் பிராமிக்கும் பொதுவான எழுத்துகள் பல இருந்தாலும் தமிழ் மொழியின் சிறப்புக்குரிய ழ, ள, ற, ன ஆகிய எழுத்துக்கள் அசோகர் பிராமியில் காணப்பட வில்லை. தமிழ் பிராமியைத் தென் அசோகர் பிராமியென்றும் அழைப்பர்.

தமிழ் பிராமி குறித்துப் பல மாறுபட்டக் கருத்துகள் உள்ளன.

## தமிழ் வட்டெழுத்து

தமிழ் மொழியின் தொன்மை, எழுத்து வடிவங்களுள் வட்டெழுத்து மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. இதன் தோற்றம் மேன்மேலும் ஆராய்வதற்குரிய வகையில் அமைந்துள்ளது எதனால் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

வளைந்த கோடுகளையே அதிகமாகப் பெற்றிருந்ததால் இந்த வகை எழுத்துகள் வட்டெழுத்து, வட்டம் ஆகிய பெயர்களால் அழைக்கப்பெற்றன.

## வட்டெழுத்து வளர்ச்சி

கி.பி.6 ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் களப்பிரரை வென்ற பாண்டியர்கள் தங்கள் ஆட்சியை மீண்டும் பாண்டிய நாட்டில் நிலை பெறச் செய்தனர். ஆட்சியைப் பிடித்த பாண்டியர் தங்கள் பேரரசைக் கொங்கு நாட்டின் வட பகுதி வரை பரப்பினர். இவர்களது ஆட்சிக்காலம் சுமார் கி.பி.550 முதல் 970 வரை நீடித்தது. கடுங்கோன் அரசு, பாண்டிய முதற் பேரரசு என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். ஏறக்குறைய இதே காலத்தில் தொண்டை நாட்டில் பல்லவ மன்னர்கள் ஆட்சிக்கு வந்தனர். இவர்களது ஆட்சி ஏறக்குறைய நானூறு ஆண்டுகள் நிலைபெற்று ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வீழ்ச்சியுற்றது.

### வட்டெழுத்தில் பாண்டியர் பங்கு

தமிழ் நாட்டில் பாண்டிய நாடுதான் செந்தமிழ் நாடு என்று சிறப்பித்துப் பேசப்பெறுகிறது. ''தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டியநாடு'' என்பது மாணிக்கவாசகர் வாக்கு. சங்கம் நிறுவி தமிழ் வளர்த்தவர் பாண்டியர். தமிழினை வளர்த்த பாண்டியர் வட்டெழுத்தையும் வளர்த்தனர். பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வட்டெழுத்தே அரசு ஏற்றுக் கொண்ட எழுத்துமுறையாக இருந்திருக்கிறது. பாண்டிய நாட்டில் 7 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் பிராமி எழுத்துகள் கலவாத வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

8, 9 ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் காலத்திய செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் உள்ளன. செப்பேடுகள் அரசரால் ஏற்பளிப்பானவை. இதனால் வட்டெழுத்து பாண்டியர் அவையில் சிறப்புற்றிருந்ததை உணர்கிறோம். பாண்டிய நாட்டில் கி.பி. 1000 வரை வட்டெழுத்துச் சாசனங்கள் எழுதப் பெற்றுள்ளன.

### சேரநாட்டின் வட்டெழுத்து

சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து மேலும் பல நூற்றாண்டு வழக்கில் இருந்திருக்கிறது. காலம் செல்லச்செல்ல அது ஒழுங்கு இல்லாமல் எழுதப்பட்டு பல மாறுதல்களைப்பெற்றது. இவ்வாறு மாறுதல் அடைந்த வட்டெழுத்தைத் திருவிதாங்கூர்ப் பகுதிகளில் ''மலையாண்மா'' என்றும் கேரளத்தில் வடபகுதிகளில் ''கோலெழுத்து'' என்றும் அழைத்தனர்.

### கொங்கு நாட்டிலும் வட்டெழுத்து

கொங்கு நாட்டில் ஏறக்குறைய கி.பி. 1080 வரையிலும் அந்நாட்டு மன்னர்களின் சாசனங்கள் வட்டெழுத்தில் காணப்படுகின்றன. கொங்கு மன்னர்கள் சேரமன்னர்களின் கிளை வழியினராகக் கருதப்படுபவர்கள். வட்டெழுத்தின் வளர்ச்சியைப் பாண்டியர்களே கொங்கு நாட்டிலும் ஊக்குவித்திருக்கின்றனர். சேரர்களும் அதைப் பெரு மளவில் ஆதரித்துள்ளனர்.


### வட்டெழுத்து காணப்படும் இடங்கள்

வட்டெழுத்து, தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோவை, சேலம், தர்மபுரி, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய பகுதிகளிலும்

செங்கல்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வழக்கில் இருந்திருக்கிறது. மேலும் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் கர்நாடக மாநிலத்தில் கோலார் பகுதி வரையிலும் இவ்வட்டெழுத்து நடுகல்கள் கிடைத்துள்ளன.

### கடல் கடந்து மாலத்தீவில் வழங்கிய வட்டெழுத்து

இலங்கைக்குத் தென்மேற்கே சுமார் அறுநூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது மாலத்தீவு. கடல் கடந்து அங்கும் தமிழ் வட்டெழுத்து பரவி இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. மாலத்தீவில் வழங்கிய எழுத்து ''தெவ்ஹிஹக் குரா'' என்கிற பெயரில் அழைக்கப்பெற்றது. அந்த எழுத்துகள் இந்திய எழுத்துகளைப் போன்று இடமிருந்து வலம் நோக்கி எழுதப்பெற்றன. அந்த எழுத்துமுறைகளுக்கும், கன்னடம், துளு போன்ற எழுத்துமுறைகளுக்கும் தொடர்பு இருப்பதாக மொழியியலாளர்கள் கருதுகின்றனர். (படம் காண்க)




### சோழ ஆட்சியும் வட்டெழுத்து வீழ்ச்சியும்

பாண்டியநாட்டில் மிகச் செல்வாக்குடன் திகழ்ந்த வட்டெழுத்து, பாண்டிய நாட்டைச் சோழன் கைப்பற்றிய பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது. பிற்காலச் சோழர்குலத்தைச் சார்ந்த முதலாம் பராந்தகச் சோழன் பாண்டிய நாட்டை கி.பி.910 ஆம் ஆண்டிற்குப் பிறகு கைப்பற்றியதாகக் கருதப்படுகிறது. அவன் தன்னை ''மதுரை கொண்ட

கோப்பரகேசரி'' என்று கூறிக்கொண்டான். அவன் காலத்தி லிருந்து சோழர் ஆதிக்கம் பாணடிய நாட்டில் பரவத் தொடங்கியது.

இராசராசன் காலத்தில் பாண்டிய நாடு முழுமையும் சோழர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சோழர்கள் பாண்டிய நாட்டில் சிறிது காலம் வட்டெழுத்தையே பயன்படுத்தினர். ஆனால், அவர்கள் வட்டெழுத்தை ஆதரிக்காததால் வட்டெழுத்தின் மதிப்பு குறையத் தொடங்கியது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் பகுதி யிலிருந்து வட்டெழுத்து மறைந்து விட்டதாகக் கருதப்படுகிறது.

**திருக்குற்றாலம் தரும் செய்தி**

சுமார் கி.பி. 1387ஆம் ஆண்டு பராக்கிரம பாண்டியன் திருக்குற்றாலநாதர் சுவாமி திருக்கோயிலின் கருவறையைப் புதுப்பித்தார். அப்போது அதன் சுவர்களில் இருந்த கல்வெட்டுகளைத் தனியாகப் பெயர்த்து எழுதிக்கொண்டு கட்டடம் முடிந்தபின் மறுபடியும் அந்தச் சாசனங்களைச் செதுக்கியுள்ளார். பழைய சுவர்களிலுள்ள கல்வெட்டு ஒன்று வட்டெழுத்தாக இருந்ததால் ஒருவரும் படிக்க முடியாததால் அதைமட்டும் விட்டுவிட்டதாகவும் கல்வெட்டில் எழுதி வைக்கப் பட்டுள்ள செய்தி மிகவும் சிந்திக்கத்தக்கது. இதே கால கட்டத்தில் சேரநாட்டின் மீது சோழர்கள் படையெடுத்துச் சில காலம் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தனர்.

ஆனால் கி.பி. 1070 ஆம் ஆண்டு சோழர்களிடமிருந்து சேரமன்னன் இராமவர்ம குலசேகரன் சேரநாட்டை மீட்டதாக வரலாறு கூறுகிறது. இதனால், சேரநாட்டில் வட்டெழுத்து அழிவுறாமல் தொடர்ந்து வழக்கில் இருந்துவந்தது.

முடிவுரை

பாண்டிய, சேர நாடுகளுக்கு இடையில் உள்ள தொடர்பை இலக்கியங்கள் மட்டுமல்லாமல், தமிழ் வட்டெழுத்தின் வரலாறும் புதிய பாலம் அமைத்துக் காட்டுகிறது. வட்டெழுத்தின் மூலம் தமிழ் வரிவடிவத்தின் வளர்ச்சியையும் தமிழகம் தழுவிய பல வரலாற்று உண்மைகளையும் நாம் அறிகிறோம்.

# 5. விடுதலை இயக்கத்தின் விடிவெள்ளி மாவீரன் பூலித்தேவன்

(புலவர் ந. இராசையா)

திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து அயலார் ஆதிக்கத்தை எதிர்த்தவர் பலர். அவர்களுள் இந்திய விடுதலைப்போர் வரலாற்றில் முதல் முதலாக ஆங்கிலேயரையும் ஏனைய அயலாரையும் எதிர்த்து 1755 ஆம் ஆண்டுக்கு முன்னரே குரல் கொடுத்தவர் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரர் மாவீரன் பூலித்தேவன். வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்னரே தாயகத்தின் மண்ணிலே அயலார் எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என்று பல்லாயிரம் வீரமறவரை அணிதிரட்டி வாளெடுத்துப் போரிட்ட மாவீரன் பூலித்தேவன்.



**பூழிநாடும் பூழியர்கோனும்**

செந்தமிழ்நாட்டின் பன்னிரண்டு நிலப்பகுதிகளில் பூழிநாடும் ஒன்று. ''பூழியர்கோன்'' என்ற பெயர் சேரருக்கும் பாண்டியருக்கும் வழங்கப்பெற்று வந்திருப்பதால் சேரநாட்டிற்கும் பாண்டியநாட்டிற்கும் இடைப்பட்ட பகுதிதான் பூழிநாடாக இருந்திருக்கும். பூழிநாட்டை ஆண்டுவந்தவர்கள் பூழியர்கள் ஆவார்கள். பூலித்தேவன் முன்னோர்கள் ஆட்சி செய்துவந்த பகுதி பூழி நாடாகும். நெற்கட்டான்செவ்வல் பூழிநாட்டின் ஒரு பகுதியாக விளங்கிவந்தது. பூழியர்களே பின்னாளில் பூலியர்கள் என அழைக்கப்பெற்றனர்.

### பூழிநாடு பாளையமாகும்

பூலித்தேவன் முன்னோர்கள் இராமநாதபுரம் சேதுபதி மரபினர் என்றும் ஆப்பநாடு, சிஙூவைநாடு, ஆன்மநாடு ஆகிய பகுதிகளிலிருந்து பூழி நாட்டிற்கு வந்தவர்கள் என்றும் கூறப்படு கிறது. தமிழ்நாடு சங்ககாலத்தில் 24 கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அவற்றில் ஒன்று புலியூர்க்கோட்டம். பூழியூர்க் கோட்டமே புலியூர்க்கோட்டமாக வழங்கியிருத்தல் வேண் டும். பாண்டியர் காலத்தில் திசைக்காவலுக்காகப் பூலித்தேவனின் முன்னோர் நியமிக்கப்பெற்றனர். பின்னர் பாண்டியநாடு 32 பாளையங்களளாகப் பிரிக்கப்பெற்றது. அவற்றுள் ஒன்றுதான் நெற்கட்டான் செவ்வல் பாளையமாகும். பூலித்தேவனின் முன்னோர் நெற்கட்டான்செவ்வல்பாளையத்திற்குத் தலைமை தாங்கும் பெருமையுடன் விளங்கினர். நெற்கட்டான்செவ்வல் சங்கரன்கோயிலுக்கு வடமேற்கே ஏறத்தாழ 10 கி.மீ. தொலை விலுள்ளது.

### புலியை அடக்குதல்

கி.பி. 1378 இல் மதுரைக்கு அருகில் உள்ள நாகமலைத் தொடரில் யாராலும் அடக்கமுடியாத 16 அடி வேங்கைப் புலியை அடக்கிக் கொல்பவருக்குத் தக்க சன்மானம் வழங்கப் படும் என்று பாண்டிய மன்னன் அறிவித்தான். பாண்டியனின் அறிவிப்பைக் கேட்டு நெற்கட்டான்செவ்வல் பாளையக்காரன் புலியைக் கொல்லுவதற்குச் சிங்கம் போலப் பாய்ந்து சென்றான்; தன் கையிலிருந்த கட்டாரியாலேயே புலியைக் கொன்று பாண் டியமன்னனின் பாராட்டுக்கு உரியவனானான்; வரகுண ராம, சிந்தாமணி புலித்தேவன் என்ற பட்டத்திற்கும் உரியவனானான். இச்செய்தி 'மெர்கன்சி' என்பவர் சேகரித்துள்ள ஓலைச் சுவடியிலிருந்து தெரியவருகிறது. அன்றிலிருந்து நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரர் புலித்தேவன் என்னும் சிறப்புக்கும் உரியவராயிடீர்.

### பிறப்பு

இத்தகைய சிறப்பு மிக்க நெற்கட்டான்செவ்வல் பாளையத் தில் பூலித்தேவன் 1715 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பதினா றாம் நாள் பிறந்தான். இவனுடைய தந்தையார் சித்திரபுத்திரத் தேவன். தாயார் சிவஞான நாச்சியார். பூலித்தேவனுக்குப் பெற்றோர் இட்ட பெயர் காத்தப்பபூலித்தேவன் என்பதாகும்.

## பூலித்தேவன் பெயர் ஏற்பட்ட மரபு

பூலித்தேவனுக்கு முன்னால் ஆண்டுவந்த பாளையக்காரர்கள் அனைவரும் தம் பெயருக்குப் பின்னால் ''பூலி'' என்று சேர்த்துக் கொள்ளும் மரபு இருந்துவந்திருக்கிறது. ஆனால் பூலித் தேவனுக்குப் பிறகு வந்தவர்கள் தம் பெயருக்கு முன்னால் ''பூலி'' என்று சேர்த்துக் கொள்ளும் மரபைக் கொண்டார்கள் என்று தெரிகிறது.

## வேறு பெயர்கள்

பூலித்தேவனைப் புழித்தேவன், பூலித்தேவன், பூவித்தேவன், பூலாத்தேவன், பூலையாத்தேவன், புலித்தேவன் என வரலாற்று ஆசிரியர்கள் பலரும் பலவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

## இளமைப்பருவம்

பூலித்தேவன் ஆறுவயதுச் சிறுவனாக இருந்தபோது ஆரம்பக் கல்வி பயில ஆரம்பித்தான். எந்தநேரமும் ஏடும் கையு மாய்த் திரிவான். நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்ததும் இலஞ்சி சுப்பிரமணியப் புலவரிடம் தமிழ் கற்றதோடு சன்மார்க்க நெறி யையும் பயின்றான். நூல் ஆராய்ச்சியில் வல்லவனாகத் திகழ்ந் தான். இலக்கிய இலக்கண நூல்களைச் செவ்வனே கற்று, கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றான். பூலித்தேவன் தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் குதிரை யேற்றம், யானையேற்றம், மற்போர், வாள்வீச்சு, சிலம்ப வரிசை, கவண்எறிதல் முதலியவற்றை முறைப்படி கற்றுத் தேர்ச்சியடைந்தான்.

மதுரையில் பாண்டியர்களின் ஆட்சியின்போது தன்னு டைய முன்னோர்களின் வீரப்போர்கள் பற்றிய செய்திகளை யெல்லாம் கேட்டு, தானும் ஒரு மாபெரும் வீரனாக வேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் கொண்டான். யாரையும் பேச்சால் வெல்லும் ஆற்றல் படைத்தவனாக விளங்கினான். மகாபராக் கிரமசாலியாகவும் அஞ்சாநெஞ்சம் கொண்டவனாகவும் இருந்தான்.

## தோற்றமும் குணநலமும்

பூலித்தேவன் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும் வைரச்சிலை போன்ற உடற்கட்டும் வாய்ந்தவன். அவனது வலிமை மிக்க கைகள் முழங்கால் வரையில் நீண்டிருக்கும். பார்வைக்கு உயர்ந்து,

நிதானமான கண்களுடனும் நெஞ்சும் புயங்களும் பரந்து எழில்மிகு தோற்றத்துடனும் விளங்கினான். மற்றவர்களால் சுமக்க முடியாத பல ஆயுதங்களைச் சுமந்து கொண்டு நாளொன்றுக்கு 50 கல் தூரம் அவன் எளிதாக நடந்து செல்வான்.

பூலித்தேவன் தலைசிறந்த அரசியல் சாணக்கியனாகவும் நிகரற்ற போர்வன்மை படைத்த சிங்கமாகவும் திகழ்ந்தான்; புறநானூற்று வீரமறவர் பரம்பரையில் பிறந்த தமிழ் மகன். அவன் தன் பெயருக்கேற்ப அஞ்சாத நெஞ்சம் படைத்த ஆண்மை யாளன். சாம, பேத, தான, தண்டம் என்று சொல்லப் படுகின்ற நால்வகை உபாயங்களையும் சமயமறிந்து கையாளுவதில் சாணக் கியனையும் வெல்லக்கூடியவன். வீரமும் வலிமையும் மட்டுமன்றி அவன் நேர்மையும் பண்பும் நிறைந்தவன். தெய்வீகத்தையும், தேசியத்தையும் இருகண்களாகப் போற்றியவன். இப்படி இவனைப்பற்றி, குருகுகதாசப்பர் எழுதிய ''திருநெல்வேலி'' சரித்திரம் கூறுகிறது.

**இல்லறம்**

உரியகாலத்தில் பூலித்தேவனுக்குத் திருமண ஏற்பாடு நடை பெற்றது. கயல்கண்ணி என்ற இலக்குமி நாச்சியாரை இல்லக்கிழத்தியாக ஏற்று இல்லறத்தை நல்லறமாகப் போற்றி நடத்தினான். கோமதிமுத்து தவைச்சி என்ற பெண்மகளையும் பூலிசிவஞானத்தேவன், பூலிசித்திரபுத்திரத்தேவன் என்ற இரண்டு ஆண்மக்களையும் பெற்றான்.

**மக்கள்தொண்டு**

நாள்தோறும் அன்னதானம் செய்வதும் புத்தாடைகள் வழங் குவதும் நடைபெற்ற பின்னரே காலை உண்வு உண்பான். வசதி இல்லாத ஏழை மக்களுக்கு 100, 200 பொன் என்று தானமாகக் கொடுத்து வந்தான். பிரமச்சாரிகளின் திருமணத்தையும் தானே முன்னின்று நடத்திவந்தான்.

ஆங்காங்கே மண்டபங்கள் கட்டி, உணவு வழங்கி வந்தான். நந்தவனம் வைத்துக் கிணறும் வெட்டி வைத்தான். ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்று செயல்பட்டு வந்தான் பூலித்தேவன்.

**தெய்வீகப்பணி**

சங்கரன்கோவில், கரிவலம்வந்தநல்லூர், வாசுதேவநல்லூர் ஆகிய ஊர்களிலுள்ள கோவில்களுக்கு முன்மண்டபம் கட்டி வைத்து ஏராளமான அணிகலன்களையும் வழங்கினான்.

**ஆங்கிலேயர் வருகை**

கர்நாடகநவாப் மகமதுஅலியும் ஹைதராபாத் நிஜாம் சந்தாசாகிப்பும் போட்டி போட்டுக் கொண்டு திருநெல்வேலிப் பாளையக்காரர்களிடம் கப்பம் வசூலிக்க ஆரம்பித்தனர். இவர்களுக்குள் ஏற்பட்ட போட்டியைச் சாக்காக வைத்துக் கொண்டு பாளையக்காரர்கள் கப்பம் கட்டாமல் காலங் கடத்திக் கொண்டு வந்தனர். ஹைதராபாத் நிசாமுக்கான போட்டியைப் பயன் படுத்தி ஆங்கிலேயர் ஆற்காடு நவாபுக்கு ஆதரவாக 1751 இல் முதன்முதலாகத் திருச்சிக்கோட்டையில் ஆங்கிலேயக் கொடியை ஏற்றினர். அப்போது இன்னிசு துரைதான் திருநெல் வேலிக்கு ஆட்சியாளராக வந்த ஆங்கிலேயரில் முதல்வனாவான்.

**ஆங்கிலத் தளபதி 'கெரான்' வருகை**

ஆர்க்காடுநவாப்பிற்கு ஆதரவாகக் கும்பினியர்கள் திரு நெல்வேலிச் சீமையில் வரிவசூல் செய்ய ஆரம்பித்தார்கள். ஆங்கிலத்தளபதி கர்னல்கெரான் என்பவன் தலைமையில், முகமதுஅலியின் சகோதரன் மாபூசுக்கான், தளபதி கான்சாகிப் என்ற யூசுப்கான் ஆகியவர்களுடன் 500 ஐரோப்பிய வீரர்கள், 2000 கூலிப்படைகள் மற்றும் ஏராளமான படைகளும் வந்தன. இதுவே ஆங்கிலேயர் படையுடன் தாக்கவந்த நேரடி முதல் தலையீடாகும். அப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் கிழக்குப் பாளையங்கள், மேற்குப் பாளையங்கள் என இரு பிரிவுகள் இருந்தன. கிழக்குப் பகுதிக்குப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக் காரன் பொல்லாப்பாண்டிய கட்டபொம்மனும் மேற்குப்பகுதிக்கு நெற்கட்டான்செவ்வல் பாளையக்காரன் பூலித்தேவனும் தலைமை ஏற்று வந்தனர்.

ஆங்கிலத் தளபதி கெரானின் இந்தப் படையெடுப்பின் நோக்கம் பாளையக்காரர்களிடம் வரிவசூல் செய்வதும் கும்பினி யரின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதுமாகும். 1755 இல் கர்னல் கெரான் பாஞ்சர்லங்குறிச்சியையும் எட்டையபுரத்தையும் முற்றுகையிட்டான். இரு பாளையக்காரரும் பணிந்து.கெரானிடம் கப்பம் கட்டினர்.

## நெற்கட்டான் செவ்வல்

பின்னர் கர்னல் கெரான் நெற்கட்டான் செவ்வலின் மீது படையெடுத்தான். நவாபுக்கே வரிகட்டாத பூலித்தேவன் கும்பினி யருக்கா வரிகட்டிவிடப்போகிறான்? வரிகட்ட மறுத்தான். ''நாங்கள் இந்த மண்ணில் பிறந்தவர்கள், இந்த மண்ணுக் குரியவர்கள், எங்கிருந்தோ வந்த அந்நியரான ஆங்கிலேயருக்கு நாங்கள் எதற்காகக் கப்பம் கட்ட வேண்டும்? கப்பம் என்ற முறையில் ஒரு சல்லிக்காசு கூடச் செலுத்த மாட்டோம். உன்னால் ஆனதைப் பார்'' என்று பூலித்தேவன் வரி கொடுக்க மறுத்தான்.

''அந்நியன் எவனும் வரி வசூலிக்கும் உரிமையில் காலடி யெடுத்து வைக்கக் கூடாது'' என்று அறிக்கை வெளியிட்டான். 'வரி' என்ற பெயரில் ''ஒரு மணி நெல்லைக்கூடக் கட்டுவ தில்லை'' என்று பூலித்தேவன் கூறினான். அதனால் அவன் ஊரின் பெயரான நெல்கட்டும் செவ்வல், ''நெற்கட்டான் செவ்வல்'' என்று அழைக்கப்படலாயிற்று.

கர்னல் கெரானின் படைகள் நெற்கட்டான்செவ்வல் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகை இட்டன. பீரங்கிகள் குண்டு மழையைப் பொழிந்தன. அக்கோட்டையின் மதில் சுவர்களில் ஒரு சிறு ஓட்டையைக்கூட அவர்களால் உண்டுபண்ண முடிய வில்லை. இரு படையினருக்கும் மிகவும் பெரிய அளவில் சண்டை நடந்தது. பூலித்தேவன் வீரத்திற்கு முன்னால் கெரானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கெரான் நெற்கட்டான் செவ்வல் கோட் டையை விட்டுப் பின்வாங்கி வெட்கத்தோடும் அவமானத்தோடும் திரும்பிச் சென்றான். கெரானின் இந்த மாபெரும் தோல்வி மேற்குப் பாளையங்களுக்கு மேலும் உற்சாகத்தையும் ஊக்கத் தையும் கொடுத்தது.

## முதல் முழக்கம்

இதுவே ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய மண்ணில் ஓர் இந்தியன் செய்த வீரம்செறிந்த முதல்முழக்கமாகும். ஆம். ''இந்திய விடுதலைக்காகக் கும்பினியரை எதிர்த்து முழங்கிய முதல்முழக்கம் மாவீரன் பூலித்தேவனால்தான் தொடங்கி வைக்கப்பட்டது.'' என்று வரலாற்று ஆசிரியர்களான இராபர்ட் ஓம், கால்டுவெல், எச்.ஆர்.பேட்டி போன்றவர்கள் கூறுகிறார்கள். கும்பினியருடன் கூட வந்த ஆனந்தரங்கம் டைரியிலும் இக்குறிப்பு இடம் பெற்றுள்ளது.

### பூலித்தேவன் கூட்டணி

மீண்டும் கும்பினியர் தக்க படைபலத்துடன் வந்து தாக்கக் கூடும் என்று பூலித்தேவன் உணர்ந்தான். தமிழ்ப் பாளையக்காரர் களையெல்லாம் ஓரணியில் சேர்த்து வலுவான ஒரு கூட்டணியை உருவாக்க நினைத்தான். மதுரைப்பாளையங்களுடன் மேற்குப் பாளையங்களான கொல்லங்கொண்டான், சேத்தூர், சொக்கம் பட்டி, தலைவன்கோட்டை,ஊற்றுமலை ஆகிய பாளையங்களெல் லாம் பூலித்தேவன் அணியில் ஒன்று சேர்ந்து முழங்கின. இச் செய்தியைத் ''திருநெல்வேலி வரலாறு'' என்னும் நூலில் எச்.ஆர்.பேட்டி என்பவர் எழுதியுள்ளார். இக்கூட்டணியை வைத்துக்கொண்டு கும்பினியரை விரட்டியடிக்கத் திட்டங்களை வகுக்கப் பூலித்தேவன் முனைந்தான்.

### கும்பினியருடன் நடைபெற்ற போர்கள்

களக்காட்டில் மாபூசுகானுடன் நடந்த போரில் பூலித்தேவன் வெற்றி பெற்றான். பூலித்தேவனுக்கு உதவியாக திருவாங்கூரார் படைகளும் கலந்துகொண்டன.

திருவில்லிப்புத்தூர்க் கோட்டையை ஆர்க்காடுநவாபின் தம்பி ரகீம் பாதுகாத்து வந்தான். 1756 இல் இக்கோட்டையைப் பூலித்தேவன் தாக்கினான். அப்போது பூலித்தேவனிடம் ஆயிரம் குதிரைப்படை வீரர்களும் 25000 காலாட்படை வீரர்களும் இருந்தனர். இந்தப் போரிலும் பூலித்தேவனே வெற்றி பெற்றான்.

இதைத்தொடர்ந்து திருநெல்வேலிக்கு அருகில் மாபூசுக் கானின் படைகளுடன் பூலித்தேவனின் படைகளும் மோதின. பூலித்தேவனின் படைகளுக்கு ஏராளமான இழப்பு நேரிட்டது. போரைத் தொடர்ந்து நீடிக்காமல் பூலித்தேவன் நெற்கட்டான் செவ்வலுக்குச் சென்று விட்டான். பூலித்தேவன் மீளாத் துயர டைந்தான்.

தன்னுடைய துயரங்களையெல்லாம் நெஞ்சிலே பாய்ந்த வேலைத் தூக்கி எறிவதைப் போலத் தூக்கியெறிந்து கும்பினியரை ஒழித்துக் கட்டுவதிலே கண்ணும் கருத்துமாய் இருந்துவந்தான்.

1759 இல் கான்சாகிப், பெரும் படையுடன் பூலித்தேவனின் வாசுதேவ நல்லூர்க் கோட்டையைத் தாக்கினான். ஒரு மாத காலத்திற்கு மேல் தொடர்ந்து தாக்குதல் நடைபெற்றது. பல்லா யிரக்கணக்கான போர் வீரர்கள் பலியாயினர். நெற்கட்டான்

செவ்வல் கோட்டையிலிருந்து படைவீரர்களும் வந்து கும்பினி யரைத் தாக்கினார்கள். கான்சாகிப்பின் படைகள் பெருத்த அளவில் சேதம் அடைந்தன. போர் தொடர்ந்து இரண்டு மாதங் கள் நீடித்து நடந்தும் கோட்டையில் ஒரு பக்கத்து சுவர் இலேசான விரிவு கண்டதே தவிர, வேறொன்றும் அவர்களால் செய்ய முடியவில்லை. 18 பவுண்டு பீரங்கியை கான்சாகிப் உபயோ கித்தும் பயனில்லாமல் தோல்வியடைந்து திருநெல்வேலியை நோக்கி ஓடிவிட்டான். இந்தத் தடவையும் பூலித்தேவன் மாபெரும் வெற்றியடைந்தான்.

1760 இல் கான்சாகிப் நெற்கட்டான் செவ்வல் கோட்டை யை தாக்கினான். பூலித்தேவன் வேங்கையைப் போல் பாய்ந்து கான்சாகிப்பை விரட்டியடித்தான். கான்சாகிப் தன் ஆயுதங் களையும், பீரங்கி வண்டியையும் போட்டு விட்டு ஓடி விட்டான். அந்தப் பீரங்கியும் ஆயுதங்களும் மதுரைத் தொல்பொருள் பாதுகாப்பில் இருக்கின்றன.

## இங்கிலாந்து இராணுவம்

பூலித்தேவனை ஒழித்துக் கட்டவேண்டுமென்றால் தற்போது இருக்கும் ஆயுதங்களும், படைகளும் போதா; இங்கிலாந்திலிருந்து மேலும் அதிக அளவில் போர்க்கருவிகளும் படைகளும் வந்தால் தான் வெற்றி கொள்ள முடியும் என்று கும்பினி அதிகாரிகள் இங்கிலாந்திற்கு எழுதினார்கள். இதனால் ஏராளமான இராணுவத்தளவாடங்களையும் இராணுவங்களையும் குதிரைப் படைகளையும் கொண்டு வந்து சென்னையில் இறக்கினர்.

1766 இல் கேப்டன் பௌட்சன் என்பவன் 12000 படைவீரர்களுடன் வாசுதேவநல்லூர்க் கோட்டையைத் தாக் கினான். ஆனால் அவனோ பூலித்தேவனின் வீரத்திற்கு முன் னால் நிற்க முடியாமல் ஓடிவிட்டான்.

இராணுவ முகாமிலிருந்த கும்பினித் தளபதி, பூலித்தேவனை வெல்ல முடியா நிலையில் இருப்பதால் தக்க ஆலோசனை வேண்டி மேலிடத்திற்கு கடிதம் எழுதினான். அதற்கு எப்படியும் பூலித்தேவனை ஒழித்துக் கட்டத்தக்க ஆலோசனை வழங்கப் பட்டது.

**மீண்டும் வாசுதேவநல்லூர்க் கோட்டை தாக்கப்பட்டது**

1767 இல் டொனால்டு காம்பெல் தலைமையேற்று, மேசர் பீலிண்ட்., காப்டன் கார்பர் ஆகியவர்களுடனும் பல்வேறு இராணுவப் பெருந்தலைவர்கள் அடங்கிய போர்ப் படையுடனும வாசுதேவநல்லூர்க் கோட்டையைத் தாக்கினான். பூலித்தேவனும் அவனுடைய படை வீரர்களும் கு ம்பினியர்களை எதிர்த்து உக்கிர மாகப் போர் புரிந்தார்கள்.

அப்போது தொடர்ந்து பல நாள்கள் மழை பெய்து கொண்டே இருந்ததால் இரு தரப்பினரும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர். ஆனாலும் பூலித்தேவனின் படைகளில் ஏராளமானவர்கள் இறந்து விட்டார்கள். கும்பினியரை எதிர்த்துச் சமாளிக்கும் அளவிற்குப் படைபலம் போதாத நிலையில் இருந்ததால் பூலித்தேவனும் எஞ்சிய படை வீரர்களும், கோட்டையை விட்டு வெளியேறி மேற்கு மலைத் தொடருக்குச் சென்று விட்டார்கள். பூலித்தேவனின் இந்த வீழ்ச்சியைப் பற்றிக் கும்பினித் தளபதி மேலதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதினான். அக்கடிதம் இன்றும் சென்னை அரசு ஆவணக் காப்பகத்தில் இருக்கிறது.

**கோட்டைகள் தகர்ப்பு**

பூலித்தேவனுடைய நெற்கட்டான் செவ்வல், பனையூர், வாசு தேவ நல்லூர் ஆகிய கோட்டைகள் கும்பினியரால் இடித்து நொறுக்கப்பட்டன. பூலித்தேவன் மேற்கு மலைத் தொடரில் தலைமறைவாக வாழ்ந்து வந்தான்.

**பூலித்தேவன் மறைவு**

இத்தகைய பெருமைக்கும் புகழுக்கும் உரிய பூலித்தேவன் நினைத்திருந்தால் நவாப்பின் தளகர்த்தனாகவோ, பிரஞ்சு, டச்சு, ஆங்கிலேயே ஆதிக்கக்காரர்களின் மரியாதைக்குரியவராகவோ இருந்திருப்பான். ஆனால் அவன் வாழ்வின் எந்தப் பகுதியிலும், கோழைத்தனத்தை காண்பதற்கில்லை. அத்தகைய மாவீரனுடைய மறைவும் ஒரு மர்மமாகவே இருக்கிறது.

கும்பினியர் எப்படியோ பூலித்தேவனைக் கைது செய்து, பாளையங் கோட்டைக்கு அழைத்துச் செல்லும் வழியில் சங் கரன்கோவிலில் வழிபாடு செய்ய வேண்டும் என்று பூலித்தேவன் கேட்டுக்கொண்டான். தக்க பாதுகாப்புடன் கோவிலுக்குப்

போகப் பூலித்தேவன் அனுமதிக்கப்பட்டான். பூலித்தேவன் தன்னுடைய இறைவழிபாட்டை முடித்துவிட்டு அங்கிருந்த குகைக்குள் சென்று மறைந்துவிட்டான். அவனைப் பிடிப்பதற்கு முயன்றும் கும்பினியரால் முடியவில்லை. அவன் மறைந்த இடத்தில் பூலித்தேவன் அறை ஒன்று இன்றும் உள்ளது.

**பூலித்தேவன் மனைவி மரணம்**

நெற்கட்டான்செவ்வல் கோட்டை அழிக்கப்பட்டபிறகு பூலித் தேவனுடைய மனைவியும் குழந்தைகளும், பனையூர்க் காட்டில் ஓலைக்குடிசையில் வாழ்ந்துவந்தனர். அதை அறிந்த கும்பினியர் அவர்கள் இருந்த ஓலைக்குடிசையைத் தீயிட்டுக் கொளுத் தினர். பூலித்தேவன் மனைவி கயல்கண்ணி நாச்சியார் பலத்த காயங்களுடன் காலமானார். குழந்தைகள் தீக்காயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

**அரசு ஆவணங்கள்**

வரலாற்று ஆசிரியர்களின் பார்வைக்கும் அவனுடைய மறைவு மர்மமமாகவே இருக்கிறது. அவன் வாழ்ந்துவந்த நெற் கட்டான்செவ்வல் என்ற பெயரைக்கூட ''ஆவடையாள்புரம்'' என்று மாற்றிக் கும்பினியர் ஆணை பிறப்பித்துள்ள செய்தியை ''திருநெல்வேலி'' என்ற நூலில் கால்டுவெல்பாதிரியார் எழுதியுள்ளார்.

மாவீரன் பூலித்தேவனைப்பற்றிய சான்றுகள் சென்னை எழும்பூரிலுள்ள அரசு ஆவணக் காப்பகத்தில் ஏராளமாக இருக் கின்றன. அவற்றில் மாவட்ட ஆட்சியர்கள் நவாபுக்கும் கும்பினி யருக்கும் 1754லிலிருந்து பூலித்தேவனின் இறுதிக்காலம் வரை எழுதிய கடிதங்கள் உள்ளன. கும்பினியர்கள் பூலித் தேவனைப் பற்றி இலண்டனுக்கு எழுதிய கடிதங்களும் இலண்டனிலிருந்து சென்னைக்கு எழுதிய ஆலோசனைக் கடிதங்களும் பல உள்ளன. இராணுவமுகாமின் ஆலோசனைகளும் முடிவுகளும் ஆனந்த ரங்கம் எழுதிய அன்றாட நாட்குறிப்புகளும் பல உள்ளன.

**முடிவுரை**

இந்தியா ஆங்கிலேயரிடமிருந்து விடுதலையடையப் பல கட்டங்களாகப் போர்கள் நடைபெற்றன. அதில் முதல் கட்டமாக 1755-ல் மாவீரன் பூலித்தேவன் ''வெள்ளையனே வெளியேறு'' ''என்று வீரமுழக்கமிட்டான். அம் மாவீரனின் முதல் முழக்கமே

பின்னாளில் விடுதலை முழக்கம் முழங்கிய முத்துவடுகநாதர், வீராங்கனை வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை ஆகியோருக்கும் 1806-ல் நடந்த வேலூர் சிப்பாய்க் கலகத்திற்கும் 1857-ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கும் வழிகாட்டியாக அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது.

1755-ல் மாவீரன் பூலித்தேவனால் தொடங்கி வைக்கப்பட்ட விடுதலைமுழக்கம் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ல் முடிந்து விடுதலை மலர்ந்தது. மாவீரன் பூலித்தேவனுக்கு நாம் செய்ய வேண்டிய கைம்மாறு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்பதாகும். ஆதலின் பூலித்தேவனின் புகழ் வாழ்க என்று வாழ்த்திப் போற்றுவோமாக!

# 6. ஆங்காங் பயணம்

(டாக்டர் ந. சஞ்சீவி)

'ஏர்இந்தியா'வே ஏற்பாடு செய்திருந்த நட்சத்திர ஓட்டலுக்கு நான் போவதற்குள் விடியற்காலை மணி நான்காகிவிட்டது. தனியாளாக என்னுடைய பெட்டிகள், புத்தகக் கட்டுகள் (அன்பளிப்பிற்காக) மருந்துப்பை, சில்லரைச்சாமான்கள் மூட்டை இவற்றையெல்லாம் நானே தனியாளாக முன்பின் பழக்கம் இல்லாநிலையில் சக்கரத் தள்ளுவண்டியில் வைத்துக் கொண்டு, ஒவ்வோரிடமாக எங்கே தங்குவது? அதற்கு அனுமதிச்சீட்டு எங்கே வாங்குவது? 'நட்சத்திர ஓட்டலுக்கு எப்படிப் போவது?' என்று விசாரித்துச் சாமான்களோடு மாடிக்கும் கீழுக்குமாக அலைந்து விளக்கம் பெறுவதற்குள் படாதபாடு ஆகிவிட்டது. யாரைப்பார்த்தாலும் அச்சம்; ஐயம்; திருட்டுப் பயம்; ஏமாற்றி விடுவார்களோ என்ற கலக்கம்

அப்பப்ப! பயணம் போனால் தனியே போகக்கூடாது. அதுவும் வயதாகிப் போகக்கூடாது. அப்படிப் போனாலும் நாமே தூக்கக்கூடிய ஓரிரு கைப்பெட்டிக்குமேல் எடுத்துச்செல்லக் கூடாது. அந்தப் பெட்டிகளும் அடியில் சிறுசிறு சக்கரம் வைத்த வைகளாக இருக்கவேண்டும். அப்பெட்டிகளில் இருக்கும் கயிறு ஒன்றைப் பிடித்துக்கொண்டே நாட்டுப்புறங்களில் மாடு கன்றுகளை - நகர்ப் புறங்களில் நாய்க்குட்டிகளை - ஏன்? பெரிய நாய்களை இழுத்துச் செல்வதுபோல் இழுத்துச் சென்றுவிடலாம்.

பயணம் என்ற சொல்லிற்குள்ளேயே காங்காருக் குட்டிகள் போல், 'பணம்', 'பயம்' ஆகிய சொற்கள் உள்ளன. 'பயம்' என்ற சொல்லுக்கு 'அச்சம்' என்ற பொருளோடு 'பயன்' என்ற பொருளும் இருத்தல் கருதத்தக்கது. சற்று எழுத்துமாற்றம் செய்தால் 'பயணம்' 'பணயம்' என்று ஆகும்!

எப்படியோ ஒரு வகையாக இரந்து இரந்து செய்திகளையும் வழிகளையும் தெரிந்து கொண்டு, 'ஏர்இந்தியா' ஏற்பாடு செய்திருந்த நட்சத்திர ஓட்டலுக்குப் போனேன். இருட்டில் பெட்டிகள், பைகள், புத்தகக்கட்டுகள் ஆகியவற்றோடு எந்தப் பெட்டிக்குள்ளும் அடக்க முடியாத கனம் நிறைந்த கம்பளிக்கோட்டு ஒன்றையும் குடுகுடுப்பைக்காரன், பூமாட்டுக்காரன் போலச் சுமந்து

கொண்டிருந்தேன். எதையும் விட்டுவிடாமல் எப்படியோ எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு இரவைப் பகலாக்கிக் கொண்டி ருந்த நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்தேன்.

உலகம் உறங்கினும் உறங்கா உவகைமிக்க ஆண்களும் ஆண்களைவிடப் பெண்களும் அங்கே வேலை செய்துகொண்டி ருந்தனர். இந்திரபோகக் காட்சியாக இருந்தது. எனக்கு உரிய அறையையும் அதன் அழகையும் பெருமையையும் காட்டுவது போன்ற பெரிய பொன்னிறத் திறவுகோலையும் தந்தார்கள். 'ஏசி' அறையில் 'ஓசி'யில் தங்குவது போன்ற உணர்வு என்னைக் கிளுகிளுப்பூட்டியது !

முன்நாள் இரவு கண் விழித்தமையால் உறக்கம் அழுத்தியது; அறை மணி அடித்தது; அரை உறக்கத்தில் கதவைத் திறந்தேன். ஒரு பணிமாது, 'ஏதாவது வேலை உண்டா என்றார்.? அசடு வழியும் என் முகத்தைப் பார்த்துவிட்டு அருவருப்பாலோ 'இவன் என்ன மாந்திரிகனோ' என்று என் தாடிக்கோலமாகிய தவக் கோலத்தைப் பார்த்துவிட்டுப் பயந்தோ பைய நகர்ந்துவிட்டாள் அப்பெண்.

கொஞ்சநேரம் தூங்கிவிட்டு ஓட்டலை ஒருமுறை சுற்று மாடிப்பாதை வழியாகவும் மற்றொருமுறை சுற்றுத்தளப்பாதை வழியாகவும் வலம்வந்து பார்த்தேன். வட்டவடிவில் கட்டப்பட்ட ஓட்டல்! மேலேயும் சரி, கீழேயும் சரி, ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுப் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வந்துவிடலாம். ஆமாம், உலகம் உருண்டை போலத்தான் அந்த ஓட்டலும்! என் உலகப் பயணத் தை அழகாக நினைவூட்டியது அது! இடையிலேதான் நீச்சல் குளம், அழகு நிலையம், நீராவிக் குளியல் அறை, நகைக்கடை, புத்தகக் கடை, அழகுப்பொருள் கடை, வரவேற்புக் கூடம் எல் லாம்! ஆமாம்! இதையெல்லாம் பார்க்கும் போது, 'எல்லாமே நமக்காகத்தான், நம்முடையதுதான்' என்று நினனப்பது என் வழக்கம். அந்தப் போலி நினைப்பில்தான் எவ்வளவு இன்பம்! ஆமாம். இந்த உலகில் இன்னும் காற்றுக்கும் கற்பனைக்கும்தான் யாரும் வரி போடவில்லையே!

ஒரு காலைச்சிற்றுண்டியும் ஒரு நண்பகல்விருந்தும், 'ஏர் இந்தியா' இலவசமாகத் தருகிறது - இந்த 'எண்பது நாள்களில் உலகைச் சுற்றி' பயணச்சீட்டிற்கு - அதுவும் உடனே விமானத் தொடர்பு இல்லாதபோது - இல்லாத இடத்தில்.

நான் அடுத்துப் போகவேண்டிய இடம் ஆங்காங். மறுநாள் மாலைதான் விமானம். இந்தத் தாமதத்தால் கிடைத்த பயன்தான் பம்பாய் நட்சத்திர ஓட்டலில் சிலமணிநேர - பாதி இரவு, பாதி பகல் - எல்லாம் பாதி பாதிதான்! - சுகபோகம். ஆமாம், என் போன்றோர் நிலைக்கு அதுவே பெரிய சுகபோகம் அல்லவா?

காலைச் சிற்றுண்டியையும் நண்பகல் விருந்தையும் முடித்துக் கொண்டேன் மிகுந்த எச்சரிக்கையோடு. காரணம் அனுமதிக்கப் பட்ட அளவிற்கு மேல் ஒரு 'காப்பி' குடித்தாலும் கட்டணம் பத்து ரூபாய்! மாலை ஆறுமணி அளவிலேயே புறப்படவேண்டிய விமானத்திற்கு வழக்கமான கூடுதல் முன்னெச்சரிக்கையோடு மாலை மூன்றுமணிக்கே தயாராகிவிட்டேன்! தங்கியிருந்த அறையில் எந்த எந்த உதவிக்கு எந்த எந்தத் தொலைபேசி எண்ணுக்குக் கூப்பிடவேண்டும் என்ற அழகான குறிப்பு அட்டை இருந்தது. என்னிடம் தனியே இருந்த புத்தகக் கட்டுகளை ஒன்றாகக் கட்டி வாங்கிக்கொள்ளலாம் என்று 'சரக்குக் கட்ட' உதவும் ஆளை வரச்செய்யும் எண்ணைச் சுழற்றினேன். உடனே ஒருவர் கையில் அழகான சரக்குக்கட்டும் தாளுடன் பந்தாகச் சுற்றிய நாடாக்கயிற்றுடன் வந்தார். என் புத்தகங்களை ஒன்றாகக் கட்டித்தர வேண்டினேன். சில மணித்துளிகளில் அழகான பொட்டலம் தயாராகியது. அதுவும்கூட அழகாக இருந்தது.

பம்பாயில் விமான நிலையத்தில் அங்கும் இங்கும் எங்கும் நகர முடியவில்லை. சாமான்களைப் பார்த்துக்கொள்வதே பெரும்பாடாக இருந்தது. மேலும் பார்த்தால் எதையும் வாங்கு வதற்குப் பணமும் இல்லை. இருந்த பணத்தைச் செலவழிக்காமல் பார்த்துக்கொள்வதே பெரும் பொறுப்பாக இருந்தது.

விமானம் புறப்படும் நேரம் நெருங்கியது. விமானத்தில் - பெரிய வீடு போன்ற ஏர்இந்தியா விமானத்தில் நடுப்பகுதியில் சன்னல் ஓர இருக்கையில் உட்கார்ந்து கொண்டேன். கல்கத்தா வை அடுத்து ஆங்காங்கில் விமானம் இறங்கியது.

ஆங்காங் விமான நிலையம் மிகத் தூய்மையாக இருந்தது. விமானத்தில் வந்தவர்கள் எல்லாம் போய்விட்டார்கள். சுங்க அதிகாரி என்னைத் தடுத்து, 'நில்லுங்கள்; அங்கே சென்று அமருங்கள்; நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்' என்றார். அரை மணிக்குமேல் காத்திருந்தேன். என் உள்ளம் என்னவெல்லாமோ எண்ணியது. 'என்ன செய்வார்களோ? திருப்பி அனுப்பி விடுவார்களோ?' என்றெல்லாம் நினைத்தேன்; கலங்கவில்லை;

நடுங்கவில்லை. காரணம் நான்தான் துணிந்து விட்டேனே! சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் எம்மாத்திரம்? எந்த அனுபவத்தை யும் ஏற்பதே இன்பம். அரைமணி கழித்து ஒர் இளம் சீனப்பெண் (பிலிப்பைன் பெண்ணாகவும் இருக்கலாம். காரணம் ஆங் காங்கில் ஆயிரக்கணக்கான பிலிப்பைன் மக்கள் இருக்கிறார்கள். துல்லியமாக வேறுபாடு காண முடியவில்லை) என்னிடம் வந்து அழகிய மரத்தடுப்புகளால் ஆகிய அறைக்குள் அழைத்துச் சென்று அமரச் செய்தார். என் கடவுஅட்டையைக் கையில் வைத்துக் கொண்டார். விசாரணை தொடங்கியது, சரளமான ஆங்கிலத்தில்.

அவர் : **உங்கள் பெயர் என்ன?**

நான் : டாக்டர் என்.சஞ்சீவி

**நீங்கள் என்ன செய்கிறீக்ள்?**

பேராசிரியன்

**எங்கே?**

சென்னைப்பல்கலைக்கழகம்.

**எந்தப் பொருளில்?**

தமிழில்.

**தமிழா? அது என்ன?**

தமிழ் ஒரு பழைய மொழி.

**யார் பேசுகிறார்கள்?**

தமிழ்மக்கள்.

**எவ்வளவு பேர்?**

ஆறு கோடிக்கு மேல்.

**எங்கே இருக்கிறார்கள்?**

**தமிழ்நாட்டில். இந்தியாவின் பல்வேறு மாநிலங் களில். இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷஸ், தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களில்.**

**இங்கெல்லாமா?**

ஆமாம்.

**நான் கேள்விப்பட்டதே இல்லையே!**

600 008 174784 TB 031,6 N

(நாணத்தை அடக்கிக்கொண்டு) நான் சொல்வது உண்மைதான் அம்மா!

**ஆங்காங்கில் தமிழர் இருக்கிறார்களா?**

இருக்கிறார்கள் அம்மா. தமிழ்ச்சங்கம் கூட ஒன்று இருக்கிறது!

**உங்களுக்கு எப்படித் தெரியும்?**

**கேள்விப்பட்டிருக்கிறேன். வரும் சூலை 4 ஆம் தேதி ஆங்காங்கில் தமிழ்ச்சங்கத்தில் பாரதிவிழா. நானும் பேசுகிறேன்.**

**இன்னும் யார் பேசுகிறார்கள்.**

தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர்.

**சரி. நீங்கள் எதற்காக ஆங்காங் வந்துள்ளீர்கள்?**

சீன அரசு, தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் தலைமை யில் ஐந்து அறிஞர்கள் கொண்ட ஒரு கல்விக் குழுவை அழைத்துள்ளது. அக்குழுவில் நானும் ஒருவன்.

**எதற்காக அந்த அழைப்பு?**

நட்புறவுக்காக.

**சீனாவில் தமிழர் இருக்கிறார்களா?**

சிலர் அலுவல் பார்க்கவும், கல்வி கற்கவும் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பீகிங் வானொலி, தமிழ் ஒலி பரப்புச் செய்கிறது. அங்குள்ள தென்கிழக்கு ஆசிய ஆய்வு நிலை யத்தில் தமிழாய்வும் செய்ய முற்பட்டுள்ளார்கள்.

**அப்படியா? அங்கே போய் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

**முதலில் சீனாவை எவ்வளவு நன்றாகத் தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு நன்றாகத் தெரிந்துகொள்வேன். தமிழார் வம் உள்ளவர்களுக்குத் தமிழ்பற்றிய செய்திகளைத் தெரிவிப்பேன்.**

**சீனத்திற்கும் தமிழுக்கும் தமிழருக்கும் என்ன உறவு?**

வரலாற்றுத் தொடர்புதான்! பண்பாட்டுத் தொடர்புதான்! வேறு எந்த இந்திய மொழியிலும் இல்லா அளவுக்குத் தமிழ் மொழியில் சீனத் தொடர்புடைய சொற்கள் உண்டு. வேறு எந்த நாட்டோடும் தொடர்புடைய தமிழ்ச்சொற்கள் அவ்வளவுக்கு இல்லை. இது பற்றி நான் ஒரு பட்டியல் தயாரித்துக் கட்டுரையே எழுதியுள்ளேன்.

**சான்றுகள் சில சொல்லுங்கள்?**

சீன அவரை, சீனக்கிளி, சீன வெடி.....

**போதும் போதும்; நீங்கள் பெரிய ஆராய்ச்சியாளர்தான்! நீங்கள் என்ன சொல்லித்தருகிறீர்கள்?**

தமிழ்.

**ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம்?**

ஒரு மணி, இரண்டு மணி.

**புத்தகங்கள் எழுதியிருக்கிறீர்களா?**

ஆம். 16 புத்தகங்கள்.

**கட்டுரைகள்?**

நூற்றுக்கு மேல்!

**சரி நீங்கள் ஆங்காங்கில் எங்கே தங்குவீர்கள்? எவ்வளவு நாள் தங்குவீர்கள்?**

சைனாகட்டடம் என்று ஒன்று ஆங்காங்கில் இருக்கிறது அல்லவா?

**ஆமாம்.**

அங்கே ஓமன் பாங்கில் தமிழ் நண்பர் இருக்கிறார். அவரோடு இப்போது இரண்டு நாள் இருப்பேன். பின்னர் இரண்டு நாள் கழித்துச் சீனா போய் விடுவேன். 4 ஆம் தேதி ஆங்காங் தமிழ்ச் சங்கத்தில் பாரதிவிழா. அதில் நானும் தமிழ்நாடு கல்வி அமைச்சரும் பேசுவோம். பின்பு சூலை 7 ஆம் தேதி அங்கிருந்து டோக்கியோவுக்குப் போய் அங்குள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ்பற்றி விரிவுரைகள் செய்வேன். அப்புறம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் சில வற்றிற்குச் சென்றுவிட்டு இந்தியா திரும்புவேன்

**என்ன இவ்வளவு பெரிய பயணமா? நீங்களா? தனியாகவா?**

ஆமாம்.

**நீங்கள் என்ன மதம்?**

இந்து

**சரி, சைனா கட்டடத்தில் தமிழர் ஒருவர் இருக்கிறார் என்கிறீர்களே! அவர் குடும்பத்துடன் இருக்கிறாரா?**

ஆமாம்.

**என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? சைனா பில்டிங் எனக்குத் தெரியும். அங்கு யாரும் குடும்பத்துடன் தங்குவதில்லையே.**

அம்மா, நான் ஆங்காங்குக்குப் புதியவன். இதோ அவர் வேலை பார்க்கும் இடத்தின் முகவரியும் தொலைபேசி எண்

ணும் இருக்கிறது. இந்த எண்ணுக்குத் தொலைபேசி செய்து அவரிடம் பேசிய பின்தான் எனக்கு மற்ற விவரங்கள் தெரியும்.

**உம். சீனா போய், ஜப்பான் போய், அமெரிக்கா போய், ஐரோப்பிய நாடுகளுக்குப் போய் இந்தியாவுக்குத் திரும்பிப் போ வதாகச் சொல்கிறீர்களே? அதற்கெல்லாம் பணம் இருக்கிறதா?**

எங்கள் இந்திய அரசு அனுமதிக்கும் அந்நியச் செலாவணி தான் என்னிடம் இருக்கிறது.

**அது எவ்வளவு ?**

200 டாலர்.

**இந்தப் பணத்தில் நீங்கள் என்ன செய்யமுடியும்?**

ஏற்கனவே விமானச் சலுகைச் சீட்டு வாங்கிவிட்டேன். அதன்படி எண்பது நாள்களுக்குள் இந்த உலகை ஒரு சுற்று சுற்றலாம். சீன அரசின் விருந்தினராகச் செல்வதால் ஒரு சல்லிக்காசும் செலவில்லை. மற்ற இடங்களில் போதுமான நண்பர்கள் இருக்கிறார்கள். உணவுக்கும் உறையுளுக்கும் இடர் இல்லை.

**சரி, சீன அரசு அழைத்ததற்கான ஆதாரத்தைக் காட்டுங்கள்.**

சீன அரசு அழைத்த அழைப்பையும் அதை ஏற்று இந்திய அரசு தந்த இசைவுக்கு உரிய ஆணையையும் காட்டினேன்.

**சரி, இருங்கள் இதைப் படம் எடுத்துக்கொண்டு முடிவு சொல்கிறேன்.**

சீனப்பெண்மணி சில மணித்துளிகளில் படம் எடுத்துக் கொண்டு என் மூலப்பிரதியை என்னிடமே தந்துவிட்டு, 'இனி நீங்கள் போகலாம்' என்றார். சற்றொப்ப ஒரு மணி நேரத்திற்கு என்னை விசாரணை செய்த அந்தச் சீனப்பெண்மணியின் முகத்தில் ஒருவித மெய்ப்பாடும் இல்லை. அனுமதி கிடைத்த மகிழ்ச்சியில், தைரியத்தில் அந்தப் பெண்மணியைப் பல கேள்விகள் கேட்க விரும்பினேன்.

**என்னை ஏன் இவ்வளவு நேரம் விசாரித்தீர்கள்?**

நீங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவர் அல்லவா? அதனால்தான்!

சீனப் பெண்ணின் பேச்சுத்திறன் என்னை சில விநாடிகள் மூச்சுத்திறன் அற்றவன் ஆக்கியது. மகிழ்ச்சியோடும் மன நிறை வோடும் 'நன்றி' என்று சொல்லி நகர்ந்தேன்.

ஆங்காங் விமான நிலையத்தில் அந்த ஆரணங்கு நடத்திய விசாரணை முடிந்ததும் 'வெற்றி வீரன்' போலப் பயணிகளின் சரக்குகள் இறக்கி வைக்கப்படும் இடத்துக்கு விரைந்தேன். அந்த இடம் வெறிச்சிட்டுக் கிடந்தது. சரக்குகள் வரும் இடத்திற்குப் போனபோது அங்கு ஒருவரும் இல்லை: ஒன்றும் இல்லை. அதிர்ச்சியடையாமல் எப்படி இருக்கமுடியும்? எவரோ நம் பொருள்களையும் கடத்திச்சென்றுவிட்டார் என்றே எண்ணினேன்.

எதிரே வந்த எவரோ ஒருவரைப் பார்த்து என் குறையைக் கூறினேன். 'எந்த விமானத்தில் வந்தீர்கள்' என்றார். 'ஏர் இந்தியா' என்றேன். 'அதோ அந்தக் கம்பெனி அலுவலகம். அங்கே விசாரியுங்கள்' என்றார். விசாரித்தேன். 'அதோ அந்த இடத்தில் இருக்கின்றனவா?' என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார்கள். ஓடிப்போய் பார்த்தேன். அனைத்தும் ஒருதாய் வயிற்றுப் பூனைக் குட்டிகள் போல் ஒன்றாய்க் குந்தி இருந்தன. என்னைக் கண்டு குறுநகை பூத்தன. மறுபடியும் வெற்றி வீரனாய் அவற்றைத் தள்ளுவண்டியில் (விமான நிலையத்தில் சௌகரிய மாய் இருப்பவை - அவற்றை விமான நிலையத்தில் வரிசையாய்த் தள்ளி வைக்கும் ஏவலர்கள் திறமே திறம்!) வைத்துக்கொண்டு பயணத்துறை அலுவலகங்கள் இருக்கும் இடம் நோக்கினேன்.

அங்கே கம்ப்யூட்டர்கள் இயங்கிக் கொண்டிருந்தன. தொலை பேசி உதவியை கேட்டேன். எதிரே இருந்த பொதுத் தொலை பேசிகளைக் காட்டினார்கள். அவற்றுள் ஒன்றிடம் சென்று அது இயங்கும் முறையை அறிந்துகொண்டேன். சென்னையிலிருந்து புறப்படுமுன் டாக்டர் மு.நாகநாதன், திருமறைக்காடர் அலுவலக எண்ணைக் கொடுத்திருந்தார். திருமறைக்காடர், மறைமலை அடிகளார் பேரர் என்றும் பண்பாட்டின் திருவுருவம் என்றும் யான் எண்ணும்படி நல்லுரைகள் நவின்றிருந்தார். அப் பெருமகனாரின் பேருதவியால் இன்னல் ஏதுமின்றி ஆங்காங் நகரைப் பருகினேன்.

ஆங்காங்கில் யான் கண்ட காட்சிகளுள் மிகச் சிறந்தது கடலின்கண் முத்துப்போல் சுடர்விடும் ஆங்காங்கின் கடல் - துறைமுகக் கப்பல் கூடத்தின் அழகுதான்! நீலத்திரைக் கடலின் நித்திலமாய் - நித்திலக்குவியலாய் விளங்கும் ஆங்காங்கைச் சுற்றிச்சுற்றி நிற்கும் சிறியதும் பெரியதுமான கப்பல்களையும் ஆங்காங் தீவுக்குள் உயர்ந்தும் தாழ்ந்தும் மொய்த்திருக்கும் பல வடுக்குக் கோபுரங்கள் போன்ற மாளிகைகளையும் பார்க்கும் போது - பழந்தமிழ் இலக்கியங்கள் படித்த என் கண்களுக்கு, அந்த நாளில் அருமைத் தமிழகத்தில் வாழ்ந்த வேந்தர்களும் வேளிருமே

நினைவுக்கு வந்தார்கள். அவர்களுக்குக் கடல் கடந்தும் வாழ்ந்த அக்கால மன்னர்கள் பெரியதும் சிறியதுமாக அனுப்பிய கப்பக் கப்பல்கள் என்ற நினைவே எழுந்தது.

'முழங்கு கடல் முழுதும் வரினும் வழங்கத் தவாஅ' வள முடையதாக இருந்த பூம்புகார் இப்படித்தான் இருந்திருக்குமோ என்ற கருத்தே என்னை கவ்வியது; என் நினைவுகளில் கவிந்தது.

மேற்கண்ட காட்சியைக் காண அமைந்துள்ள இருவழிகள் என் கண்களையும் கருத்தையும் பெரிதும் கவர்ந்தன. ஒன்று கடலுக்கடியில் செல்லும் கரவுப்பாதை; ஓரிடத்தில் கடலைத் தூர்த்துக் கட்டப்பட்டுள்ள இப்பாதை நெடியது; பெரியது; அகன்றது; அழகியது; தூய்மையானது. இரவுபகல் எந்நேரமும் ஒளிமயமாய் உள்ள அப்பாதை மேற்கே அல்ல - கிழக்கேயும் வளர்ந்துவரும் அறிவியல், பொறியியல் ஆற்றலின் வெற்றி அடையாளம்.

இரண்டாவதாக - இரண்டாம்தரமாக அல்ல - என்னைக் கவர்ந்தது கடற்சோலை என்றழைக்கப்படும் மலைமேல் உள்ள கடற்காட்சியே ஆகும். இதைக்காண பெரியதொரு (பழனி போன்ற) மலைமீது கயிற்றுக் கூண்டுகள் வழியாகச் செல்ல வேண்டும். இக்காட்சியை இப்போது சிங்கப்பூரிலும் காணலாம் என்று சில நாட்களுக்கு முன்பு அங்கு நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கிற்குச் சென்றுவந்த என் மகள் செப்புகிறாள்.

பச்சைப்பசேலென்று - பச்சைக் கம்பளம் போர்த்தியது போன்ற காட்சி தரும் ஆங்காங் மலைமேலே அணி அணியாகப் பலநிற வண்ணங்கள் கொண்டதாய் இரும்புக் கயிற்றில் தொங்கிக் கொண்டு செல்லும் அந்த வண்ணக் கூண்டுகள் செல்லும் காட்சியை இன்றைக்கெல்லாம் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

வண்ணக் கூண்டுக்குள் ஏறிவிட்டாலோ முன்னும் பின்னும் செல்லும் கூண்டுகளையும் கீழே தெரியும் துறைமுகக் காட்சிகளையும் - நகரக் கோபுரக் கட்டடங்களையும் நங்கூரம் பாய்ச்சிய கப்பல்களையும் காணும் போது, 'இக்காட்சியைக் காணக் கொடுத்து வைத்தோமே, இந்த இன்பம் எல்லோருக்கும் கிடைக்காது' என்ற எண்ணமே தோன்றுகிறது. ஒவ்வொரு வண்ணக்கண்ணாடிக் கூண்டும் தரையிலிருந்து மலைமேலே ஒரு சமவெளித் திட்டிற்குச் செல்லக் கால்மணி நேரமாவது ஆகும். அந்தச் சிறு சமவெளித் திட்டுக்குள் நுழையும் கூண்டையும் ஒரிளைஞர் தடுத்துநிறுத்தி உள்ளிருப்போரை இறங்க வைக்கிறார். பின்னர் திரும்பும்போதும் உள்ளிருந்து இறங்குவதற்குத் தள்ளிவிடுகிறார்.

வண்ணக் கூண்டு ஒவ்வொன்றிலும், நாலு பேர் நாலு திசையிலும் உட்காரலாம். கண்ணாடியோ, கண்ணாடி போன்ற பிளாஸ்டிக்கோ என்று சொல்லத்தக்க மூடிய சன்னல்கள் வாயிலாகச் சுற்றிலும் உள்ள காட்சிகளைச் சிறப்பாக அந்த வண்ணக்கூண்டுப்பாதைக்கு வலமாக இருக்கும் திசையில் ஆங்காங் அழகை அள்ளிப் பருகலாம். இது போன்ற நேரங்களில் - அப்படிச் சொல்வதைவிட இதுபோன்ற நேரங்களை நினைவு கூரும் நேரங்களில் - மனிதனைப் படைத்த அவனுக்கு - இரு கண்களைப் படைத்து அந்தக் கண்களுக்கு அகலத்தையும் நிகலத் தையும் உயரத்தையும் ஆழத்தையும் அடக்கி ஒடுக்கிப் படமாகப் பார்த்து மகிழும் அருமைப்பாட்டை அமைத்த பெருமைமிகு இயற் கையை எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்து நன்றி பாராட்ட வேண்டியுள்ளது.

மலைமேல் அமைக்கப்பட்டுள்ள கடற்சோலையிலிருந்து கீழே இருக்கும் துறைமுகத்தைக் காணும் காட்சியே ஒப்புயர்வு இல் லாதது. அடுத்த நிலையில் ஓரிடத்தில் குளிர்ச்சிப்படுத்தப்பட்ட சுரங்க வழியில் ஒருபுறம் பார்த்தால் கடலுக்குள் இருக்கும் மீன்வளக் காட்சியெல்லாம் தெரிகிறது.

ஆங்காங் மலைமேல். இருக்கும் இயற்கைபோன்ற செயற் கைக் காட்சியை நினைக்கும்போதெல்லாம் நெஞ்சம் அங்கே வினாடி வேகத்தில் போய்விடுகிறது. உடலைக் கொடுத்த இயற்கை உடலின் ஒரு சிறந்த பகுதியாக இந்த உள்ளத்தையும் கொடுத்ததே!

அடுத்து ஆங்காங் மலையில் பெரிய நீச்சல் குளம் போன்ற ஒன்றில் 'டால்பின்' என்று சொல்லப்படும் பெருமீன்களின் நடனக் காட்சிகள் காட்டப்படுகின்றன. நீருக்குள் அம் மீன்கள் வெளிவந்து சொன்னபடி எல்லாம் ஆடுகின்றன! அழகிய பெண் ணொருத்தியை நீண்ட அந்த நீச்சல் குளத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தூக்கிச்சென்றனர். நம் ஊர் ராஜ ரத்தினம் ஸ்டேடியம், நேருஸ்டேடியம் போன்ற படிக்கட்டு அரங்குகளிலிருந்து இந்த டால்பின் காட்சிகளை மக்கள் கண்டு களிக்கின்றனர். சிறப்பாக, டால்பின் குதித்து, தன்னை ஆட்டுவோன் கன்னனங்களில் முத்தம் கொடுக்கும் காட்சிகளுக்கு எவ்வளவு முத்துகள் வேண்டுமானாலும் பரிசில் வழங்கலாம்.

# 7. காணவேண்டிய காசி மாநகரம்

(புலவர் இ.கோமதிநாயகம்)

இந்திய அன்னை 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும், இவள் என்று பிறந்தவள் என்று உணர' முடியாத வரலாற்றுத் தொன்மை உடையவள். அவள் தொன்மையைத் துலக்கும் சுவடுகள் பலப்பல. அவை வற்றாத வள நதிகள்; மலைக்கவைக்கும் மலைக் கூட்டங்கள்; தெய்வீக மணங்கமழும் திருக்கோயில்கள்; அயரவைக்கும் அழகு நகரங்கள். நகரங்களுள் சில முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்த் திகழ்கின்றன. அவற்றுள் ஒன்று 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுத் தொன்மை மிக்க காசி மாநகரம்.

## கங்கையாற்றின் கரையில் காசி மாநகரம்

இந்திய மாநிலங்களுள் மக்கள்தொகைப் பரப்பில் பெரியது உத்தரப்பிரதேசம். அங்கு வளங்கொழிக்கும் கங்கையாற்றின் கரையில் காசி மாநகரம் அமைந்துள்ளது. இது காசி மாவட்டத்தின் தலைநகரும் ஆகும். இதற்கு, வாரணாசி என்னும் பெயரும் உண்டு. 'வாரணா', 'அஸி' என்னும் இரு சிற்றாறுகளுக்கு இடையில் இந்நகரம் அமைந்திருப்பதால் வாரணாசி என்னும் பெயர் வந்தது. இக்காசி மாநகரம், போலோநாத் காசி, காபாலிக் காசி, அகோரிக்காசி என மூன்று பிரிவுகளாக அக்காலத்தில் இருந்தது என்பர்.

## புராணப்பெருமையும் வரலாறும்

சக்தியும் சிவமும் இணைபிரியாதிருந்து உயிர்களுக்கு அருள் செய்யும் புண்ணியத்தலம் காசி எனக் காசிபற்றி இந்து சமயப் புராணங்களும் இலக்கியங்களும் வியந்து கூறுகின்றன. காசிரகசியம், காசிக்காண்டம், இலிங்கபுராணம், கந்தபுராணம், அக்கினிபுராணம் முதலான சமயநூல்களிலும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும் காசியின் பெருமையைப் பிலிற்றும் பகுதிகளைக் காணலாம்.

இந்துசமய அருளாளர்களான ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், திருமங்கையாழ்வார், குமரகுருபரர், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் முதலானோர் காசிக்குச் சென்று இந்துசமயத்தின் பெருமையை நிலைநாட்டிய செய்திகளை வரலாற்று நிகழ்ச்சிகள் கூறுகின்றன.

காசிவிசுவநாதர் ஆலயம்

கி.பி. 1163 இல் இந்தியாவிற்கு வருகைபுரிந்த சீனப் பயணி யுவான் சுவாங், 'கலையழகுமிக்க அற்புத ஆலயம்' என வியந்து போற்றிய பழமை வாய்ந்தது காசி மாநகரில் உள்ள காசி விசுவநாதர் ஆலயம். இது பலமுறை சமயக் காழ்ப்பால் இடி பாடுற்று எழுந்துநிற்பது என வரலாறு கூறுகின்றது. இக் காலத்தில் காணப்பெறும் கோயில், கி.பி.1770 இல் இந்தூர் ராணி அகல்யாபாய் என்பவரால் புதுப்பித்துக் கட்டப் பெற்றதாகும்.

இக்கோயில், குறுகலான பல தெருக்களுக்கு இடையில் அமைந்துள்ளது; தொலைவில் காண்போரையும் தம்பால் ஈர்க்கும் தங்கத்தகட்டுக் கோபுரம் கொண்டது. கோயிலின் மையப் பகுதியில் சிவலிங்கம் உள்ளது. அச்சிவலிங்கமே காசிவிசுவ நாதர். கோயிலின் நான்கு பக்கங்களிலிருந்தும் இறைவன் திருஉருவத்தைக் காணலாம். பக்தர்கள் யாவரும் சிவலிங்கத்தைத் தொட்டு வழிபாடு செய்வது இக்கோயிலின் தனிச் சிறப்புகளுள் ஒன்று. இக்கோயிலில் நேபாளமன்னரால் வழங்கப்பெற்ற பெரிய மணி ஒன்றும் உள்ளது. காசிவிசுவநாதர் ஆலயத்தைக் கண்டு வழிபடுவதை இந்துக்கள் பெரும்புண்ணியமாகக் கருதுகிறார்கள்.

**அன்னையர் கோயில்**

விசுவநாதர் ஆலயத்திலிருந்து ஏறத்தாழ 200 மீட்டர் தொலைவில் காசி விசாலாட்சி திருக்கோயில் உள்ளது. 'மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி' எனப் புகழ்ந்து கொண்டாடுவதற்கேற்ப, விசாலாட்சி கோயிலிலும் இறைவியின் திருஉருவம் தென்னாட்டு அமைப்பில் உள்ளது.

விசுவநாதர் ஆலயத்தை யொட்டியே அமைந்திருப்பது அன்னபூரணியின் கோயிலாகும். விசாலாட்சியைவிட அன்ன பூரணியே பொன்னும் மணியும் பூண்டு பொலிவுடன் திகழ் கிறாள். இக் கோயிலில் தீபாவளித் திருநாளை யொட்டிய மூன்று

நாள்களிலும் சிறப்பான பூசைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன. புகழ்வாய்ந்த 'மிட்டாய்த் திருநாள்' அந்நாள்களில் நடைபெறும்.

### பிற கோயில்கள்

'ஆயிரம் கோயில்களைக் கொண்ட அழகு நகரம்' எனப் போற்றப்பெறும் காசியில், துர்க்கை கோயில், கேதாரீஸ்வரர் கோயில், உமாமகேசுவரர் கோயில் முதலான பல பழமையான கோயில்களும் இருக்கின்றன. மேலும் நவீன முறையில் உருவாக்கப்பெற்ற 'பிர்லா மந்திர்' என்னும் சிவன் கோயிலும் 'துளசி மானச மந்திர்' என்னும் திருமால் கோயிலும் காணவேண்டிய இடங்களாகும்.

### துளசிநாதர் கோயில்

'துளசி மானச மந்திர்' என்பது துளசிதாசருக்கு அமைக்கப் பெற்ற கோயிலாகும். வான்மீகி இராமாயணம், கம்பராமாயணம் என்பன போல் துளசி இராமாயணம் என்னும் இராமாயணமும் உள்ளது. அதை இயற்றியவர் துளசிதாசர். துளசிதாசர் நீண்டகாலம் தங்கி ஆன்மீகம் பரப்பிய இடம் காசி மாநகரமாகும். அதனால் அவருக்கு இங்குக் கோயில் அமைக்கப்பெற்றுள்ளது.

துளசிதாசர் கோயில் ஓர் அரிய கலைக்களஞ்சியமாக விளங்குகிறது. சலவைக் கற்களால் உருவாக்கப்பெற்ற அக் கோயில் இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது. அங்குத் துளசிதாசரின் திருவுருவச்சிலை உள்ளது. அவர் இயற்றிய இராமாயணப் பாடல்கள் சலவைக் கற்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இராமாயணக் கதையைப் பொம்மைக் காட்சியாக விளக்கும், அங்குள்ள 'இயங்கும் பொம்மைக் காட்சி' காண்போரைக் கவருவதாகும்.

நூற்று இருபத்தாறு ஆண்டுகள் வாழ்ந்த துளசிதாசர் வைணவ சமயத்தவரானபோதிலும் சிவனையும் வழிபட்ட பொது நோக்கு உடையவர். அதனால் அவருடைய கோயிலையும் சமய வேறுபாடு இல்லாமல் யாவரும் வழிபடுகின்றனர் போலும்!

**கங்கையின் பெருமை**

காசி மாநகரில் ஓடும் கங்கை, பனிமலையாம் இமயத்தில் தோன்றிக் கடல்மட்டத்திலிருந்து 4500 மீட்டர் உயரத்திலிருக்கும் கௌமுகியில் தவழ்ந்து இறங்கிவரும் வளமிக்க ஆறாகும். கங்கையில் நீராடினால் தாங்கள் செய்த பாவமெல்லாம் தொலையும் என்பது இந்து சமயத்தாரின் நம்பிக்கை. கங்கையில் எப்பொழுதும் நீரோடிக்கொண்டிருக்கும். மழைக்காலத்தில் மழைவெள்ளமும் கோடைக்காலத்தில் பனிஉருகி ஓடிவரும் வெள்ளமும் கங்கையை வற்றாத உயிர்ப்புள்ள ஆறாக்குகின்றன; கரைபுரண்டு ஓடும் வெள்ளப்பெருக்கையும் தருகின்றன.

கங்கை நீரில் காலராக் கிருமிகள்கூட மாண்டுவிடுவதை கனடா நாட்டு மருத்துவர் எப்.சி.ஹாரிசன் என்பாரும் பிரெஞ்சு நாட்டு அறிவியலாளர் டி.ஹெரல் என்பாரும் பிரிட்டன் நாட்டு ஆய்வாளர் சி.இ.நெல்சன் என்பாரும் ஆய்ந்தறிந்து 'கங்கைநீர் அற்புதம் வாய்ந்தது' எனப் பாராட்டிக் கூறியுள்ளனர்.

**நீராடு துறைகள்**

கங்கையில் அறுபத்துநான்கு நீராடுதுறைகள் உள்ளன. அவற்றைத் தீர்த்தக் கட்டங்கள் என வழங்குவர். அவையாவும் காசியின் பத்துக் கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ளன. அறுபத்து நான்கிலும் சென்று நீராட இயலாதவர்களுக்கு ஐந்து துறைகளை இன்றியமையாதனவாகக் குறிப்பிடுவர். அவை, அஸி சங்கமக்கட்டம், தசா அசுவமேதக் கட்டம், வருணசங்கமக் கட்டம், பஞ்சகங்காக்கட்டம், மணிகர்ணிகாக்கட்டம் என்பனவாகும். இவற்றில் நீராடச் செல்வதைப் 'பஞ்சதீர்த்த யாத்திரை' எனக் குறிப்பர். இங்கு நீராடச் செல்வோர் இறந்த தம் மூதாதையர்களுக்குரிய 'நீத்தார் கடன்' செய்வதும் மரபு ஆகும்:

**பல்கலைக்கழகங்கள்**

காசியில் மேலும் காணவேண்டிய இடங்கள் காசி இந்துப் பல்கலைக்கழகம், வித்தியா பீடம் ஆகியனவாகும்.

காசி இந்துப்பல்கலைக்கழகம்

கி.பி.1916இல் பண்டித மதன்மோகன்மாளவியாவின் அரும் முயற்சியால் உருவானது காசி இந்துப்பல்கலைக் கழகம். காசி மாநகரில் கங்கைக் கரையில் அமைந்துள்ள இப்பல்கலைக் கழகம் ஐந்நூற்று இருபது எக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப் பெற்றுள்ளது. இது, இந்துப்பல்கலைக்கழகமென வழங்கப் பெற்றாலும் அனைத்துச் சமயங்களையும் சார்ந்த மாணாக்கர் களும் இதில் சேர்க்கப்பெறுகின்றனர்; சேர்ந்தே கற்கின்றனர். இங்கு ஒன்றாகவே உண்டு உறையும் வாய்ப்பும் உள்ளது. இது இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

காசி இந்துப்பல்கலைக்கழகத்தில், அறிவியல் கல்வி, கலைக் கல்வி, கீழைப் பண்பாட்டுக் கலைக் கல்வி, மருத்துவம், சட்டம், தொழில் நுட்பக் கல்வி ஆகிய பல்துறைக் கல்விகளும் கற்பிக்கப் பெறுகின்றன.

காசி இந்துப்பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியில் இலக் கிய இலக்கண ஆராய்ச்சி மேற்கொள்ளும் அளவிற்கு வசதிகள் உள்ளன. அங்குள்ள நூலகத்தில் ஏராளமான தமிழ் நூல்கள் இடம்பெற்றுள்ளன.

அப்பல்கலைக்கழக வளாகத்தில், பிர்லா குடும்பத்தினரால் கட்டப்பெற்ற சிவன் கோயில் ஒன்றும் உள்ளது. சலவைக் கற் களால் கட்டப்பெற்ற அக்கோயிலில் பகவத்கீதை முழுவதும் கற்களில் செதுக்கப்பெற்றுள்ளது.

வித்யாபீடம்

காசியில் தேசியப்பல்கலைக்கழகம் ஒன்றும் உள்ளது. அதனைக் 'காசி வித்யாபீடம்' என வழங்குவர். அண்ணல் காந்தியடிகளால் கி.பி.1921இல் அதற்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. தமிழ் நாட்டில் தமிழ்மொழிக்கென்று தனிப் பல்கலைக் கழகம் இருப்பதைப் போன்று காசியில் சம்ஸ்கிருதப் பல்கலைக் கழகம் உள்ளது.

காசி அரண்மனை

காசிநகரப் பகுதிகளில் காணவேண்டிய இடங்களுள் ஒன்று, காசி அரண்மனை. அது கங்கைக்கரையில் காசிநகரத்திற்கு

எதிர்ப்புறம் உள்ள 'இராம்நகர்' என்னும் பகுதியில் உள்ளது. அங்குப் பண்டைய மன்னர் பரம்பரையினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அரண்மனையின் பெரும்பகுதி அரசால் நடத்தப் பெறும் அருங்காட்சியகமாக உள்ளது. அருங்காட்சியகத்தில் பண்டை மன்னர்கள் அணிந்த ஆடைகள், பயன்படுத்திய போர்க் கருவிகள், பவனிவந்த பல்லக்குகள் முதலானவை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப் பெற்றிருக்கின்றன. அவையெல்லாம் கலை நுட்பமும் கவின்மிகு வேலைப்பாடும் கொண்டனவாய்த் திகழ்ந்து காண்போரை மகிழ்விக்கின்றன. மேலும் அப்பகுதியில் 'வியாச காசி' என்னும் பகுதியும் உள்ளது. அங்கு, வேத வியாசரால் வழிபாடு செய்யப்பெற்றதாகக் கூறப்பெறும் கோயில் உள்ளது.

### குமரகுருபர சுவாமிகள் தொண்டு

நீராடு துறைகளுள் ஒன்றான கேதாரக் கட்டத்தில் 'கேதார நாதர் கோயில்' என்னும் சிவன்கோயில் உள்ளது. அக் கோயிலைக் கட்டியவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரும் புலவரும் சமயச் சான்றோருமான குமரகுருபர சுவாமிகள் ஆவார். அந்தச் சிவன்கோயிலில் தமிழ்மணங்கமழுமாறு தெய்வத்தமிழ்ப் பாமாலைகள் பலவற்றைக் கற்களில் பொறித்துள்ளனர்.

குமரகுருபர சுவாமிகள் சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்கப் பாடுபட்ட அருளாளர். நீதிநெறி விளக்கம், முத்துக்குமார சாமி பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை, முதலிய தெய்வத் திருப் பனுவல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் அவர் பாடிய 'காசிக் கலம்பகம்' காசிவிசுவநாதரை வழிபடும்போது பாடிய பனுவலாகும். இவை யன்றி, அவர் தம் காசி வாழ்க்கையின்போது, முகமதிய மன்ன ரின் அன்பைப் பெறவேண்டிக் கலைமகளை நினைத்துச் 'சகலகலாவல்லிமாலை' என்னும் பாமாலையையும் பாடினார்.

### காசிப்பட்டு

வரலாற்றுச் சிறப்பும் சமயச் சிறப்பும் கமழும் காசி மாநகரில் பல்வகைத் தொழில்களும் நடைபெறுகின்றன. காஞ்சிபுரம் பட்டு புகழ் பெற்றிருப்பதைப் போலவே காசிப்பட்டும் புகழ்பெற்று விளங்குகிறது. பட்டுநெசவு, சரிகைவேலை, பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பொம்மைகள் செய்தல் முதலான தொழில்கள் காசியில் சிறப்பாக நடைபெறுகின்றன.

**இனிக்கும் காசி**

'காசி அல்வா' என்பது காசி மாநகரில் கிடைக்கும் ஓர் இனிப்புப் பண்டமாகும். காசிக்கு வரும் பயணிகள் காசி அல்வா உண்டும், தங்கள் பயணத்தின் இனிய நினைவாகக் காசிப் பட்டையும் பித்தளைப் பொருள்களையும் போட்டி போட்டு வாங்கிவருவதையும் காணலாம்.

**புத்தகாசி**


காசியிலிருந்து ஏறத்தாழ எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் 'புத்தகாசி' எனப் புகழ்பெறும் 'சாரநாத்' உள்ளது. புத்தர் பெருமான் அருள்பொங்கப் பொன்னுரை புகன்றது அங்குதான். ஆதலால் அது 'புத்த காசி' என வழங்கப்பெறுகிறது. அது பௌத்தர்களின் திருத்தலமாகும்.

ஏறத்தாழ 80 கிலோ மீட்டர் சுற்றளவுடைய காசி மாநகரம் சமயங்களின் சங்கமநகராகப் பொலிகிறது; அழிந்துபட்ட அரசுகளின் வரலாற்றுவடிவங்களைத் தாங்கியிருக்கிறது; பல்கலை பயிற்றுவிக்கும் அறிவுக்கூடமாகத் திகழ்கிறது; ஆண்டுமுழுதும் மானுடப்பறவைகள் கூடும் வேடந்தாங்கலாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியப் பண்பாட்டுக் கூறான 'வேற்றுமையுள் ஒற்றுமை' என்பதை யாவருக்கும் பறைசாற்றுகிறது. எனவே இது 'காணவேண்டிய காசி மாநகரமாகும்'. செப்டம்பர் முதல் டிசம்பர் வரை காண்பதற்கு ஏற்ற கால அளவாகும்.

# 8. கணிப்பொறி

(பேராசிரியர் சி. சோமசுந்தரம்)

கணிப்பொறி என்னும் கருவி பல்வேறுபட்ட வடிவங்களில் அமையலாம். மின்கட்டணச் சீட்டுகளை ஒருவகையான கணிப்பொறி தயார்செய்து தருகிறது; பயணச் சீட்டுகளைப் பதிவுசெய்து தருவது இன்னொருவகை. விண்கல இயக்கங்களை எல்லாம் இன்று கணிப்பொறிதான் கட்டுப்படுத்துகிறது. ஒரு சில கணிப்பொறியைப் பயன்படுத்தி மகிழ்வூட்டும் பொழுது போக்கு விளையாட்டுகளை அமைக்கலாம். இன்று நடைமுறை வழக்காகிவிட்ட கணக்கிடு கருவிகூட கணிப்பொறியின் வகையே; கடிகார அமைப்பும் கணிப்பொறித் தத்துவமே.



கணிப்பொறி வகைகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. சில கணிப்பொறிகள் அதிக விலையுடையன; சில குறைந்த செலவில் வாங்கக் கூடியவை. இந்நாளில் கணிப்பொறியின் பயனும் தேவையும் பெருகிக் கொண்டு வருகின்றன. 'எனவே கணிப்பொறி' என்பது என்ன என அறிந்து கொள்ளல் வாழ்க்கைத் தேவையாகிறது.

சுருங்கக் கூறின், கணிப்பொறி என்பது கொடுக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு கட்டளைக் கேற்ப முடிவுகளைத் தரும் கருவியாகும். இதில் தகவல்கள் கணிமொழி வாயிலாகக் கொடுக்கப் பெறுகிறது என்பதை அறிதல் வேண்டும்.

கணிப்பொறி இக்காலத்தில் ஒரு மின்னணு இயந்திரமாக உள்ளது. ஆனால் இதன் வளர்ச்சி வரலாற்றை நோக்க, தொடக்க காலக் கணிப்பொறிகள் மின்னணுக் கருவியாக இல்லாதிருந்


தனையும் அதன் படிப்படி வளர்ச்சி நிலையே இன்றைய கணிப் பொறி உருவாக்கத்திற்கு காரணமாயிருந்ததையும் அறியலாம். காலத்தையும் உழைப்பையும் சுருக்கி, பணித்திறனையும் அளவை யும் பெருக்கி வியக்கவைக்கும் கணிப்பொறி அறிவுப் புரட்சி தந்த செல்வமாகும். அந்த அறிவுப்புரட்சியின் வரலாறு நெடுமை யானது; சுவையானது.

கணிப்பொறியின் வரலாறு

கணிப்பொறி எதையும் எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிக்கப் பயன்படுவதாகும். தொன்மைக் காலத்தில் மனிதனின் விரல்களே கணிப்பொறியின் வேலையைச் செய்தன எனலாம். எண்ணுவதற்கு விரல்களைப் பயன்படுத்திய அந்தக்காலத்தி லேயே கணிப்பொறியின் வரலாறு தொடங்கிவிட்டது. தான் செய்யவேண்டிய வேலைகளுக்கு உறுப்புகளையே சார்ந்திருந்த மனிதன் மெல்ல மெல்லக் கருவிகளையும் பயன்படுத்தத் தொடங் கினான். அப்போது கணிப்பொறியின் வரலாற்றுப் பாதையிலும் ஒரு கருவி உருவெடுத்தது. அக்கருவியே மணிச்சட்டமாகும்.

மணிச்சட்டம்

மணிச்சட்டம் குறுக்குக்கம்பிகளை உடைய மரச்சட்டம். படத்தில் காண்பது சீனநாட்டு மணிச்சட்டம். இதனினும் வேறு பட்ட அமைப்புடைய மணிச்சட்டத்தை குழந்தை கள் பயன்படுத்தி வருவதை அறிவோம். சீனநாட்டு மணிச்சட்டம் படத்தில் காண்பதுபோல் இரு பகுதி களைக் கொண் டது. குறுக்குக் கம்பி ஒவ் வொன்றிலும் மேல் பகுதி யில் இரண்டு மணிகள் இருக்கும்; கீழ்ப்பகுதியில் ஐந்து மணிகள் இருக்கும். மேல்பகுதியில் உள்ள மணிகளின் மதிப்பு ஐந்து, ஐம்பது என இடப்பக்கம் போகப் போக அதிகரிக்கும். கீழ்ப்பகுதியில் உள்ள மணிகளின் மதிப்பு ஒன்று, பத்து, நூறு என அதிகரிக்கும். இன்றும் ஜப்பான் நாட்டில்




இம்மணிச்சட்டம் பயன் படுத்தப்பெறுகிறது; இதைக்கொண்டு பெருக்கல் கூட்டல் கணக்குகளை ஆராய்வதற்கு நவீன கருவிக ளோடு போட்டியிடுகிறார்களாம்?

## இணைவு அளவுகோல்

கருவிகளால் கணக்கிடும்முறை ஒருபுறம் வளரவும், கணக் கியல் அடிப்படையாக உள்ள எண்மான முறை பத்தின் அடிப் படையில் வளர்ந்தது. கணிதவியலில் மேலும் புதியமுறைகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு தோற்றுவிக்கப்பெற்ற முறையே 'மடக்கை' முறையாகும். இதை, ஆங்கிலத்தில் 'லாக்கிரகம்' என்பர் ($2^3 = 8$ எனின் மடக்கை $2^8 = 3$) ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த கணிதவல்லுநர் ஜான்நேப்பியர் கண்டுபிடித்த இம்முறையால் மடக்கை அட்டவணை உருவாகியது. இது கணிப் பொறி வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாம். 1614 இல் உருவாகிய இக்கணக்கியல் தத்துவம்கொண்டு வில்லியம் ஆக்ட்ரைட் 'சிலைடு ரூல்' எனப்படும் இணைவு அளவுகோலை உருவாக்கினார். இன்றைய கணக்கிடு கருவி வருவதற்கு முன்னர் பொறியியலார் அதைத்தான் பயன்படுத்தி வந்தனர்.

## பாஸ்கலின் கணக்கிடு கருவி

1642 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த கணித வல்லுநர் பாஸ்கல் பற்சக்கரங்களைக் கொண்ட கணக்கிடு கருவியை உருவாக்கினார். அதுவே 'பொறி' என்னும் சொல்லுக்கும் பொருத்தமாக அமைந்தது. இதில் பல சக்கரங்கள் வரிசையாக இருக்கும். ஒவ்வொரு சக்கரத்திலும் பத்துப் பற்கள் இருக்கும். முதல் சக்கரத்தின் பத்துப் பற்கள் எண்ணும் வகைக் கேற்ப சுற்றிவர அடுத்த சக்கரத்திலுள்ள ஒரு பல் நகரும். பல்சக்கரங்களை இயக்குவதற்கு அவற்றின் எதிரே குமிழ்களும் அளவுகோல்களும் இருக்கும்.



அப்பொறியின் சிறிது வளர்ந்த நிலையில் லெபினிசு என்பவர் பிறிதொரு பொறியை உருவாக்கினார். இக்கருவிகளில் உள்ள சக்கரங்களின் இயக்கத்தைக் கடிகாரச் சக்கர இயக்கத்தோடு ஒப்பிட்டுப் புரிந்துகொள்ளலாம்.


**துளை அட்டை முறை**

1725 இல் பேனில் பூஷான் என்பாரும் 1801 இல் ஜக்கார்ட் என்பாரும் கைத்தறி அமைப்புக்கொண்ட கருவியால் கணிப்பொறிக்குத் தகவல் தரும் முறையை வகுத்தனர். அம்முறையின் வளர்ச்சியே இன்றைய துளை அட்டை (பஞ்சிங் கார்டு) முறையாகும்.

**பாபேஜின் சாதனை**

துளை அட்டை முறையை மேலும் சீர்படுத்திக் கணிப்பொறி ஒன்றை உருவாக்க அரும்பாடு பட்டவர் கணிதப் பேராசிரியர் சார்லஸ் பாபேஜ். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் பதினோரு ஆண்டுகள் பகீரதப் பணியாற்றி 1821 இல் பகுப்புப் பொறி (அனல்டிக்கல் என்ஜின்) என்னும் கருவியை உருவாக்கிக் காட்டினார். அவருடைய கருத்தின் வேகத்திற்கு அன்றைய பொறியியல் வல்லுநர்கள் ஈடுகொடுக்க இயலாத காரணத்தால் அந்தப் பகுப்புப்பொறி உருப்பட்டதே தவிர உருப்படவில்லை - அதாவது இயங்கவில்லை.

அந்தப் பொறியின் உருவாக்கம் அரைகுறையோடு நின்றது; அவர் ஆயுளும் முடிந்தது. அவர் உருவாக்க முனைந்த அப்பொறி அன்றே வெற்றிகரமாக இயங்கியிருந்தால், அதுதான் முதன்



முதலில் உருவாக்கப்பெற்ற தானியங்கிக் கணிப்பொறியாக அமைந்திருக்கும். இருப்பினும் அவர் தந்த கருத்துகளும் அறிவியல் தத்துவங்களுமே பிற்காலக் கணிப்பொறி உருவாக்கத்திற்குப் பெருவழி காட்டின.

பாபேஜின் காலம் வரைக்கும் சக்கரங்கள், வளையங்கள் போன்ற பொறிப் பகுதிகளால்

கணிப்பொறியை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. அறிவியல் அறிஞர்களின் ஓயாத போராட்டம் தற்காலக் கணிப்பொறி உருவாக உந்துசக்தியாய் அமைந்தது.

### மின்னணு இயக்கம்

தற்காலக் கணிப்பொறிகள் இயந்திர பாகங்கள் போன்ற வன்மையான பாகங்களைக் கொண்டதல்ல; மின்னணு இணைப்புகளால் செயல்படுவனவாகும். இவற்றிற்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்வது, பென்சில்வேனியா அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பெற்ற 'இனியாக்'. 'எலக்டரானிக் நியுமரிக்கல் இண்டக்டர் அண்ட் கால்குலேட்டர்' என்னும் ஆங்கிலத் தொடரின் சொல் சுருக்கமே 'இனியாக்'.

### மான்செல்டர் மார்க் 1

1948 இல் மான்செஸ்டர் பல்கலைக் கழகம் ஒரு 'இனியாக்' தயாரித்தது. அதற்கு, 'மான்செஸ்டர் மார்க் 1' எனப் பெயரிடப் பெற்றது. அது மிகப் பெருமளவிலான வால்வுகளையும் மின் னிணைப்புகளையும் கொண்டதாகும். அதைப்பற்றிப் பல சுவையான கதைகள் கூறப்படுகின்றன. அது மணித்துளிக்கு 5000 கூட்டல் கணக்குகளைச் செய்தது. அதன் வேகம் இன்றைய கணிப்பொறிகளின் வேகத்தை நோக்க, எருமையின் வேகமே. இருப்பினும் அது, தானே இயங்கியது வரவேற்கத்தக்கதே.

### அயரவைத்த அசுரப்பசி

18,000 வால்வுகளைக் கொண்டது மான்செஸடர் மார்க் 1 அதன் அமைவிடம் 150 சதுர மீட்டருக்கும் மேற்பட்டதாகும். பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் அதிலிருந்தன. அதன் எடையோ 30 டன். அதை இயக்க, மின்னிணைப்புக் கொடுக்கப்பெற்றால் அருகிலுள்ள நகரெங்கும் எரியும் மின் விளக்குகள் மங்குமாம்! ஒவ்வொரு முறையும் குறைந்த அளவு ஏழெட்டு வால்வுகள் உடையுமாம்! சுருங்கக் கூறின் அந்தப் பொறியே ஒரு பெரிய தொழிற்சாலை. அந்த அசுரப் பொறியின் யானைப் பசி யாரையும் அயரவைத்தது.

### டிரான்சிஸ்டர் உருவாக்கம்

1948 ஆம் ஆண்டிற்குப் பின்னர் 'டிரான்சிஸ்டர்' என்னும் மின்துருவக்கடத்தி உருவாக்கப்பெற்றது. கணிப்பொறிகளில்

'வால்வு'கள் இருந்த இடங்களில் 'டிரான்சிஸ்டர்'கள் பயன் படுத்தப்பெற்றன; மின்விரையம் தவிர்க்கப்பெற்றது. உருவச் சுருக்கம் பெற்ற கணிப்பொறி செலவுச் சுருக்கத்தையும் தந்தது. கணிப்பொறியை முதல் தலைமுறையை இரண்டாம் தலை முறைக்குக் கொண்டுவந்த 'டிரான்சிஸ்ட்ர்', பர்டீன், பிராட்டஸ், ஷாக்லி ஆகிய மூன்று அமெரிக்க அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டதாகும்.


**நுண்கணிப்பொறிகள்**

கணிப்பொறியின் மூன்றாவது தலைமுறை 1964 இல் தொடங்கியது எனலாம். அவ்வாண்டிற்குப் பின்னர், பல மின்னிணைப்புகள் கொள்ளத்தக்க 'டிரான்சிஸ்டர்'கள் உரு வாக்கப்பட்டன. அதன் பயனாய்க் கணிப்பொறியின் வேகமும் திறனும் மிகுந்தன; நுண்கணிப்பொறிகள் பல உருவாகின.

**சிலிகான்**

கணிப்பொறியின் நான்காவது தலைமுறையில் நாமிருக்கி றோம். இரண்டாவது தலைமுறையின் வால்வுகளுக்கு 'டிரான் சிஸ்டர்கள்' விடைகொடுத்தன. இப்போது 'டிரான்சிஸ்டர்' இடத்தைச் சிலிகான் நறுக்குகள் (சிலிகான் சிப்) பெற்றுள்ளன.

சிலிகான் ஒருவகைத் தனிமம் ஆகும். சிலிகான் நறுக்கு வேதியியல் முறையில் பயன்படுத்தப்பட்ட ½ மி.மீ. கனமுடைய மெல்லிய தகடு. ஒரு சிலிகான் நறுக்கில் நூற்றுக் கணக்கான மின்னணு இணைப்புகளைப் பொருத்த இயலும்; பல 'டிரான்சிஸ்டர்'களின் பயன்பாட்டைப் பெறவியலும்; கணிப் பொறியில் இதன் பயன் பாடு வியக்கத்தக்கதாகும். பல்லாயிரக் கணக்கான மின்னணு இணைப்பு களைச் சில நறுக்குகளில் அமைத்துக் கணிப்பொறி யில் செயல் திறத்தை அதி கரிக்கலாம். இக்காலக் கணிப்பொறிகள் எல்லாம் சிலிகான் நறுக்குகளைப் பெற்று வடிவில் சிறுத்துப் பெரும்பெரும் சிக்கல்களை யும் கணப்பொழுதில் கணித்துத் தருகின்றன.




எண்களோடு பிணைந்து கிடந்த கணிப்பொறியைப் பல பணிகளைச் செய்யும் அளவிற்கு உருவாக்க இன்றைய ஆராய்ச்சிகள் முனைந்து வெற்றிகண்டுள்ளன. எப்பணியையும் இனி கணிப்பொறி செய்ய இயலும் என்னும் நிலை உருவாகி விட்டது. அத்தோடு நிற்கவில்லை; நாம் ஐந்தாவது தலைமுறைக்கும் அடியெடுத்து வைக்க இருக்கிறோம்.

**எதிர்காலம்**

நம்மை எதிர்நோக்கியிருக்கும் ஐந்தாவது தலைமுறையில், இட்ட பணியைச் செய்யவல்ல கணிப்பொறி தானாகச் சிந்திக்கும் திறனையும் பெறவிருக்கிறது. அந்த நாளை எதிர்நோக்கி தற்போது கணிப்பொறியின் அமைப்பை நோக்குவோம்.

**கணிப்பொறியின் அமைப்பு**




கணிப்பொறியின் பகுதிகளை, தரவுவழி (இன்புட்), மையச் செயலறை (சென்ட்ரல் புராசசிங் யூனிட்), விளைவுவெளி (அவுட்புட்) என மூன்றா[illegible]க் காணலாம். இவற்றுள் மையச்செய லறை நினைவை, கணிவை, அடக்கை எனும் மூன்று உட்பகுதிகளைக் கொண்டதாகும். கணிப்பொறியின் மூன்று பகுதிகளும் சிறிய கணிப்பொறியில் தொலைக்காட்சி போன்ற தோர் ஒரேஅமைப்பில் அடங்கியிருக்கும். பெரிய கணிப் பொறிகள் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாக அமைந்திருப் பினும் விலகிய கட்டுப்பாட்டால் இயங்கும். அதாவது ஒவ் வொன்றுக்கும் இடையே கம்பிஇணைப்பு இல்லாமலேயே இருக்கும்.

**தரவுவழி**

இதன் ஒரு பகுதியே தட்டச்சுப்பொறியிலுள்ள குமிழ்ச்சட்டம் போன்ற பாகமாகும். குமிழ்களை அழுத்தித் தரவுகளை மையச் செயலறைக்கு அனுப்பலாம். தரவுகள் கணிமொழியால் கொடுக்கப்படும். தரவுகள் செய்தியாகவோ கட்டளையாகவோ அமையலாம்.

**நினைவை**

மையச்செயலறையிலுள்ள நினைவை ஆயிரக்கணக்கான மின்னணுச் சுற்றுகளைக் கொண்டது. கடிதங்கள், அஞ்சலகத்தில் குறியீட்டு எண்ணுக்கு ஏற்பத் தனித்தனியே துளைப்பெட்டியில் வைக்கப்படுவதைப்போல் நினைவையிலுள்ள ஒவ்வொரு சுற்றிலும் செய்தித் தரவுகள் வைக்கப்படும்.

நினைவை முதன்மை நினைவை, துணைநினைவை என இரு வகைப்படும். கணிப்பொறியை இயக்கும்போது அவ்வப்போது கொடுக்கப்பெற்றுப் பயன்படுத்த வேண்டிய செய்தித் தரவுகள் முதன்மை நினைவையில் இருக்கும். துணைநினைவையில் நிரந்தரமாகத் தேவைப்படும் தகவல்கள் நுண்சுருள், துளை அட்டை போன்றவற்றில் வைக்கப்படும். எடுத்துக்காட்டு ஒன்று நோக்குவோம். ஓர் அலுவலகத்தில் பணியாளர்களின் ஊதியத்தைத் திங்கள்தோறும் கணிப்பொறியைப் பயன்படுத்தித் தருவதாக வைத்துக்கொள்வோம். அலுவலகத்திலுள்ள பணியாளர்களின் பெயர்கள், அவர்களின் பணிப்பெயர்கள் போன்ற குறிப்புகள் துணைநினைவையில் வைக்கப்படும். துணைநினைவையில் வைக்கப்படும் குறிப்புகள் எல்லாம் நிரந்தரமானவை. முதன்மை நினைவையில் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் ஊதிய மாற்றங்கள், ஊதியப் பிடித்தங்கள் போன்றன முதன்மை நினைவைக்கு தரவுவழியால் அவ்வப்போது வழங்கப்படும்.

**கணிவை**

கணிவையில்தான் கணிப்பொறியின் வேலைகள் மின்னணுச் சுற்றின் அமைப்பால் நடைபெறுகின்றன. இட்ட பணியைச் செய்துதரும் பணியாள் போன்றது இது. கணிப்பொறியின் தன்மைக்கு ஏற்ப இதன் மின்னணுச் சுற்றுகள் அமைந்திருக்கும். ஒரு பெரிய நூலகத்தில் நூல்கள் வழங்கல், வாங்கல், வகைப்படுத்துதல் போன்ற பணிகளுக்காகக் கணிப்பொறியைப் பயன்படுத்து

வதாக வைத்துக்கொள்வோம். அக்கணிப்பொறியின் தரவுவழி மூலமாக அகரவரிசையில் உள்ள நூல்களை எல்லாம் கேட்பின், கணிவை, உடனே துணைநினைவையிலுள்ள குறிப்புகளைக் கொண்டு அகரவரிசையில் எத்தனை நூல்கள் உள்ளன என்பதை அறிந்து விளைவுவெளி வழியாகத் தந்துவிடும். இவ்வாறே கணிப் பொறியின் தன்மைக்கு ஏற்ப உரிய பணிகளைத் கணித்துத் தருவது கணிவையாகும்.

**அடக்கை**

இதுவே கணிப்பொறியின் எல்லா இயக்கங்களுக்கும் பொறுப்புடையதாகும். இது தரவுவழி மூலம் பெறப்படும் செய்தித்தரவுகளையும் கட்டளைத்தரவுகளையும் கொண்டு அவற்றிற்கு ஏற்பப் பிற பகுதிகளைச் செயல்படவைக்கிறது. இதை ஓர் அலுவலகத்தின் மேலாளருக்கு ஒப்பிடலாம். நினைவையி லிருந்து தரவுகளைப் பெறுதல், பெற்ற தரவுகளைக் கணிவைக்கு அனுப்புதல், கணிவையிலிருந்து பெறப்பட்ட முடிவுகளை (விளைவுகளை) கட்டளைத் தரவுகளுக்கு ஏற்ப நினைவையில் வைத்தல் அல்லது விளைவுவெளிக்கு அனுப்புதல் முதலிய பணிகள் இதன் கட்டுப்பாட்டால் நடைபெறுகின்றன. எனவே இது கணிப்பொறியின் பிற பகுதிகளை அடக்கும் பகுதி எனலாம்.

**விளைவுவெளி**

இது அடக்கையிலிருந்து பெறப்படும் முடிவுகளைப் புரியுமாறு வெளிப்படுத்த உதவும் அமைப்பாகும். கணிக்கும் முடிவுகளை அச்சிட்டுத் தருவதற்கான அமைப்பும் இதனுள் அமைந்திருக்கும். தொலைக்காட்சிப் பெட்டியின் திரை போன்றதொரு திரையும் இதில் அமைந்திருக்கும். இத்திரை, முடிவுகளைக் காட்டுவதற்கு மட்டுமன்றி, தரவுவழி வழியாகக் கணிப்பொறிக்குக் கொடுக்கப்படும் தரவுகளைளயும் அவ்வப்போது காட்டவும் பயன்படுகிறது.

வன்னுருவும் மென்னுருவும்
**(Hardware and Software)**

மேலே கூறப்பெற்றனவெல்லாம் கணிப்பொறியின் 'வன்னுரு' என வழங்கப்பெறும். கணிப்பொறிக்கு ஊட்டப் பெறும் கணிமொழிச் செய்திகள், கட்டளைகள் போன்றன மென்னுரு எனப்படும். மென்னுருப் பயிற்சி தட்டச்சுப்

பயிற்சியோடு கணிப்பொறிக்குத் தரவேண்டிய கணிமொழி களைத் கற்பதாகும். மென்னுருப்பயிற்சி, நகரங்களில் பல இடங்களில் அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் தரப்படுகின்றன.

மென்னுருப்பயிற்சியில் கற்றுத்தரப்படும் கணிமொழிகள் பலவாகும். தற்போது பெரும்வழக்கிலுள்ள கணிமொழிகள், 'பேசிக்', 'போர்ட்டான்', 'கோபல்', 'பாஸ்கல்', போன்றன வாகும். இப்பெயர்கள் முறையே 'பிகினர்ஸ் ஆல் பர்ப்பஸ் சிம்பாலிக் இன்ஸ்ரக்ஷன் கோட்', 'பார்முலா டிரான்சிலேசன்' 'காமன் பிஸனஸ் ஓரியன்டட் லாங் வேஜ்' எனும் ஆங்கிலத் தொடர்களின் சுருக்கம் ஆகும். பாஸ்கல், பாஸ்கல் எனும் அறிவியலாளரின் நினைவாக இடப்பெற்ற பெயராகும். இவை போன்று கணிமொழிகள் இருபதுக்கு மேற்பட்டு இருக்கின்றன. மென்னுருப் பயிற்சி இன்னும் சில ஆண்டுகளில் தட்டச்சுப் பணிபோன்று நடைமுறைத் தேவையாகிவிடும். மாணாக்கர் மென்னுருப் பயிற்சி பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் நலம்.



# 9. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

(டாக்டர் இராம. குருநாதன்)

## முன்னுரை

நமது பாரதநாடு பழம்பெரும் நாடு; கலைகள், ஆன்மீகம் முதலியன ஓங்கிய நாடு; அறமும் ஆற்றலும் பெருகிய நாடு; பல இயற்கை வளங்கள் செறிந்த நாடு. இப்படிப் பல்வகையான புகழை உடைய நாடு, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளாக வெள்ளையர் என்று சொல்லப்படும் ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டிருந்தது. நாடு முழுமையும் ஆங்கிலேயரை எதிர்க்கத் தொடங்கியது. ஆங்கிலேயரிடமிருந்து இந்தியத்தாயை மீட்பதற்காகப் பலரும் ஈடுபட்டனர். நமது உரிமைகளைக் காத்துக்கொள்ளவும், அடிமைத்தனத்தைப் போக்கவும் இந்தியா விடுதலை பெறவும் எண்ணிய நெஞ்சங்கள் விடுதலைவேட்கையால் தூண்டப் பட்டன; விடுதலை என்னும் வேள்வித்தீயில் குதித்தன. இதனால் விடுதலைப்போராட்டம் நாடெங்கும் தொடங்கப்பட்டது. இந்தியாவின் ஒரு பகுதியான தமிழகத்தும் விடுதலை உணர்வு அரும்பிற்று.

இமயமுதல் குமரிவரை விடுதலைப் போராட்ட உணர்வு பொங்கியது. மாபெரும் ஆங்கில வல்லரசை எதிர்ப்பது முடிகிற காரியமா? எனவே பலப்பல நிலைகளில், பலப்பல நிகழ்ச்சிகளால் மெல்லமெல்லப் போராட்டக் களத்தில் இறங்க வேண்டியிருந்தது. உலகப் பெரும் ஆங்கில வல்லரசான மாமலையைத் தகர்க்கச் சிற்றுளியாக விளங்கியவர்கள் பலர். நம் தமிழ் மாநிலத்தில் அத்தகையோர் இருந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். இந்திய விடுதலைக்குத் தன்னால் ஆன பங்கைச் செய்து தமிழகம் பெருமை தேடிக் கொண்டது.

## விடுதலை உணர்வு அரும்புதல்

தமிழகத்தில் விடுதலைப் போர் 18ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. தென்னகத்தில் ஆங்கிலேயரின் காலடிச் சுவடுகள் பதிந்த காலம் அந்நூற்றாண்டில்தான். மூன்று கர்நாடகப் போர்களும், நான்கு மைசூர்ப் போர்களும் அந்நிய

ராகிய ஆங்கிலேயரைத் தென்னக மண்ணில் நிலைப்படுத்தின. தமிழகத்தின் பகுதிகளில் ஆங்கிலேயரின் துணைபெற்ற கர்நாடக நவாப், வரியும் திறையும் செலுத்தக் கோரினான். நிலவரியும், திறையும் கடுமையாக இருந்தன. இக்கொடுமைகளைத் தமிழகம் ஏற்கவில்லை; மக்களிடமிருந்து கடுமையான முறையில் வரி, தண்டுதல் செய்யப்பட்டது. நன்னிலையில் இருந்த தமிழக மக்கள் கிளர்ச்சி மனங்கொண்டனர். திருநெல்வேலிச் சீமையில் இருந்த பாளையக்காரர்கள் முதன்முதல் ஆங்கிலேயரை எதிர்த்தனர். பாளையக்காரர்களின் தலைவருள் ஒருவனான பூலித்தேவனே தமிழகத்தில் ஆங்கிலேய ஆளுகையையும், அவர்களின் அடக்கு முறையையும் எதிர்த்தவனாவான்.

## பூலித்தேவன்

ஆங்கிலேயப் படைத்ததலைவன் அலெக்ஸாண்டர் ஹெரான் என்பவன் 1755 ஆம் ஆண்டில் பூலித்தேவனுக்குரிய நெற்கட்டான் செவ்வல் பகுதியை முற்றுகை இட்டான். வீறுகொண்ட வேங்கையெனச் சீறிப்பாய்ந்த பூலித்தேவன் ஆங்கிலேயரை வென்றான். ஆயின் 1761இல் நடந்த போரில் கான்சாகிப் என்பவனை எதிர்த்துத் தோற்றான். தமிழக வரலாற்றில் விடுதலைக் கிளர்ச்சிக்கு முதன் முதல் வித்தூன்றிய பெருமை பூலித்தேவனைச் சாரும்.

## கட்டபொம்மன் வீரம்

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தலைவன் வீரபாண்டிய கட்டபொம்மன், தமிழகமண்ணில் ஆங்கிலேயன் புகுந்ததை வலிமையோடு எதிர்த்தான். வீரம்மிகுந்த கட்டபொம்மன் ஆட்சித்திறமையும் பெற்றவன், தென்பாண்டியப் பாளையக் காரர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தான். ஆங்கிலேயருக்கு எதிர்ப்பான கூட்டணி அது. அதற்குத் தலைமை தாங்கியவன் கட்டபொம்மன். ஜாக்சன் என்பார், கட்டபொம்மனிடம் வரி கேட்ட போழுது, யாருக்கு யார் வரி செலுத்துவது? எனப் பதில் கூறினான். 'வானம் பொழியுது, பூமி விளையுது, மன்னவன் காணிக்கு நேற்று வந்தவன் வரி கேட்பதா?' எனக் கேட்டு வரியும் திறையும் செலுத்த மறுத்தான். கட்டபொம்மன். இதன் விளைவாகப் பகை மூண்டது. படையெடுப்பு நடந்தது. கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரை, தளபதி வெள்ளையத் தேவன் முதலியோருடன் பெரும்படை திரட்டி எதிர்க்கலானான்.

இருபக்கமும் அழிவு நேர்ந்தது. நண்பர்களால் கட்டபொம்மன் காட்டிக்கொடுக்கப்பட்டான். அஞ்சாநெஞ்சோடு ஆங்கிலேயரை எதிர்த்துத் தமிழ்மண்ணின் வீரம் காட்டிய கட்டபொம்மன், இறுதியில் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கில் இடப்பட்டான்.

**மருது சகோதரர்கள்**

கட்டபொம்மனுக்குப் பிறகு ஊமைத்துரை, சிவகங்கையைச் சார்ந்த மருதுபாண்டியர்கள், வேலுநாச்சியார், வெள்ளை நாயக்கர், செவத்தையா முதலானோர் ஆங்கிலேயரின் எதிர்ப்புக்கு அஞ்சாமல் வீரம்காட்டித் தங்கள் விடுதலை உணர்வை வெளிப்படுத்தினர்.

**வேலூர்ப் புரட்சி**

இதன்பின்னர், தமிழகத்தில் நடந்த வேலூர்ப்புரட்சி விடு தலை உணர்வைப் பெருக்கிற்று. வேலூர்ப் புரட்சிக்குரிய பின்னணிகள் பல.

ஆங்கிலேய ஆட்சி எதிர்ப்பால் பாளையக்கார வீரர்களும், கர்நாடக வீரர்களும் வேலூர்க் கோட்டையில் சிறைவைக்கப் பட்டனர். ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் புரிந்து தோல்வியுற்ற தமிழகப் புரட்சி வீரர்கள் பலரும், கரு நாடகப் புரட்சியாளர்களும் கோட்டைக்கருகில் குடியேறித் திட்டங்களை வகுத்தனர். சதிகளைத் தீட்டித் தக்க தருணத்தை எதிர்நோக்கினர்.

ஆங்கிலேயரிடம் இருந்த இந்தியப்படையினரின் தோற்றம், உடை முதலியவற்றில் சில வழக்கங்களை மாற்றிப் புதுமையைப் புகுத்தியது ஆங்கிலேயே அரசு. முறுக்கு மீசை கூடாது; திருநீறு, நாமம் இடக்கூடாது முதலிய கட்டளையைப் பிறப்பித்தது. இதனால் இந்துக்கள் வெறுப்படைந்தனர்.

குல்லாய் அணிதலில் மாற்றங்கொண்டுவந்தது. தளபதி ஆக்னு அறிமுகப்படுத்திய குல்லாய் வழக்கத்திற்கு வந்தது. இதில் தோலால் ஆன முடிச்சு இருக்கவே முகமதியர் அதனை எதிர்த் தனர்.

ஆங்கிலப்படையில் இருந்த இந்திய 'சிப்பாய்கள்' ஏசு போன்ற உருவமைந்த உலோகத்தகட்டை அணியவேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.

ஆங்கிலவீரர்க்கு இணையாக இந்திய 'சிப்பாய்கள்' நடத்தப்படவில்லை. இது வேற்றுமையை வளர்த்தது.

இவை யாவும் தமிழகப் புரட்சி வீரர்களையும் பிற மாநிலப் புரட்சி வீரர்களையும் கிளர்ச்சி செய்யத் தூண்டின. இதுவே வேலூர்ப் புரட்சிக்கு வித்தாகும். இந்தப் புரட்சி 1806 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாள் தொடங்கப்படவிருந்தது. ஆயின் ஐந்து நாட்களுக்கு முன்னரே கிளர்ச்சியாளர்கள் வேலூர்க் கோட்டைக்குள் நுழைந்தனர். ஆங்கிலேயப்படையின் உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களில் கர்னல் பென்கோர்ட், மெக்காரஸ், ஆம்ஸ்ட்ராங் முதலியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

வேலூர்ப் புரட்சியால் ஆங்கிலேயப்படை பெரும் ஆபத்திற் குள்ளானது. கோட்டையில் பிரிட்டிஷ் தேசியக்கொடி இறக்கப் பட்டது. திப்புசுல்தானுடைய கொடி ஏற்றப்பட்டது. திப்பு சுல்தானின் மூத்த மகன் பட்டே ஹைதர் மன்னனாக அறிவிக்கப் பட்டார்.

வேலூர்க்கோட்டையில் நடந்த இந்நிகழ்ச்சியை ஆர்க்காட்டில் இருந்த கர்னல் கில்லெஸ்பி அறிந்தான். பெரும் படையுடன் வேலூர்க்கோட்டையைத் தாக்கினான். வேலூர்ப் புரட்சிஆங்கிலேயப்படையால் முற்றிலும் ஒடுக்கப்பட்டது; முறியடிக்கப்பட்டது.

வேலூர்ப் புரட்சி, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிர்ப்பாக 1857 இல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்கு ஒரு முன்னோடி எனலாம். வேலூர்ப் புரட்சி தமிழ்நாட்டுப் படைவீரர்கள் ஆங்கிலப் படையைத் துணிவோடு எதிர்த்தமைக்குச் சான்றாகும்.

தமிழகம் ஆங்கிலக் கல்வி கற்ற தலைவர்கள்வழி, விடுதலை உணர்வை மீண்டும் பெறலாயிற்று. மக்கள் அரசியல் அமைப்பு களை ஏற்படுத்திப் பலவகைகளிலும் விடுதலைத் தாகத்தை ஏற்படுத்திக்கொண்டனர்

சென்னை சுதேசிசங்கம், சென்னை மகாஜனசபை முதலியவை விடுதலை உணர்வினைப் போற்றி வளர்த்தன; சொற்பொழிவு, விண்ணப்பம், வேண்டுகோள் முதலியவற்றின் வழி, நாட்டு விடுதலைக்கான செயல்திட்டத்தில் இவை முனைந்தன. மக்களிடம் கொள்கைகளைப் பரப்பின. ஆங்கிலேய ஆட்சியின் குறைபாடுகளை எடுத்துக்காட்டின.

**தமிழ்நாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ்**

தமிழ் நாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ்கட்சியின் முதன் மாநாடு 1885 டிசம்பர் 28ஆம் தேதி பம்பாயில் தொடங்கியது. அக்கூட்டத்தில் கலந்து கொள்ளத் தமிழகம் சார்பில் 21பேர் பேராளர்களாகச் சென்றனர். மாநாட்டின் தீர்மானங்களைத் தமிழகத்தின் சார்பில் சென்ற எஸ். சுப்பிரமணியம் முன் மொழிந்தார். இந்திய விடுதலைப்போராட்டத்தில் புதிய எழுச்சி பாடும் பூபாளமாக இந்திய தேசிய காங்கிரஸ் விளங்கியது. அதன் முதல் மாநாட்டிலேயே தமிழகம் சிறப்பிடம் வகித்தது. இக் கட்சியின் இரண்டாம் மாநாடு கல்கத்தாவில் 1886 இல் நடை பெற்றது. இதில் 47 சார்பாளர்கள் தமிழகத்திலிருந்து சென்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது மாநாடு தமிழ கத்தில் நடைபெற்றது. சென்னை நகரில் ஆயிரம் விளக்குப் பகுதியின்கண் விளங்கிய மக்கீஸ் தோட்டம் என்னும் இடத்தில் நடந்தது. 1887 ஆம் ஆண்டு டிசம்பரில் இம்மாநாடு நடந் தேறியது. சென்னை மாநிலத்தின் சார்பில் 362 பேர்கள் இதில் கலந்து கொண்டனர். சென்னையைச்சேர்ந்த சென்னை பட்டதாரிகள்சங்கம், சென்னைமகாஜனசபை, திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம், தென்னிந்திய வர்த்தக சபை, சென்னை மெட்டல் சங்கம், அஞ்சுமான் முப்த்-இஸ்லாம், புரசைவாக்கம் இந்துநிதி முதலிய சங்கங்களும் பல்வேறு அமைப்புகளும் இதில் இடம்பெற்றன. இம்மாநாட்டை வெற்றி கரமாக நடத்திக்கொடுத்த பெருமை ராஜா சர் டி.மாதவராவைச் சாரும். ராவ்சாகிப் முக்கணாச்சாரி தமிழில் பேசி மக்கள் உள்ளத்தை எழுச்சியுறச் செய்தார்.

தமிழ்நாட்டு அரசியலில் இம்மாநாடு சிறப்புப்பெற்றதோடு, இந்திய விடுதலை வேட்கை என்னும் சுடர்ப்பொறி ஆங்காங்கே ஒளிவிடக் காரணமாகவும் இருந்தது.

**மிதவாதமும் தீவிரவாதமும்**

பாரதத்திலும் தமிழ்நாட்டிலும் விடுதலை வேண்டு வோரிடையே இருபோக்குகள் காணப்பட்டன; காங்கிரஸ் கட்சியில் இவர்கள் பிரிந்து செயல்பட்டனர், மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். கோபால கிருஷ்ண கோகலே, மிதவாதிகள் தலைவர். கோகலேயின் வலக்கரமான

வி.எஸ்.சீனிவாசன் தமிழ்நாட்டின் மிதவாதிகளுக்குத் தலைவராயிருந்தார். பி.எஸ்.சிவசாமி, வி.கிருஷ்ணசாமி. டி.ஆர்.வெங்கடராமன் சாஸ்திரி, ஜி.ஏ.நடேசன் முதலானோர் தமிழ்நாட்டின் மிதவாதிகளில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

மிதவாதிகள் அன்றைய அரசின் ஆதரவாளர்களாக விளங்கினர். மாண்டேகு அறிக்கையைத் தமிழ்நாட்டு மிதவாதிகள் ஆதரித்தனர். இரட்டை ஆட்சியை ஏற்றனர்.

தீவிரவாதிகள் பாலகங்காதர திலகரைப் பின்பற்றினர். சேலம் விஜயராகவாச்சாரி தமிழ்நாட்டின் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தார். இவர் சீடர்தான் சி.ராஜகோபாலாச்சாரி. ஷ.எம்.நாயர், எஸ்.கஸ்தூரி ரங்க அய்யங்கார், ஏ.ராமசாமி, டி.ரெங்காச்சாரி முதலியோர் தீவிரவாதிகளில் குறிப்பிடத்தக்க வர்கள். தீவிரவாதிகள் திலகரை சூரத் காங்கிரஸிற்குத் தலை வராக்க முயன்றனர். மிதவாதிகள் ராஷ்பிகாரி என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க விரும்பினர். இக்குழுக்களுக்குள் கடும்போட்டி ஏற்பட்டது. தமிழ்நாட்டிலும் அக்குழுப்போட்டி எதிரொலித்தது. சூரத் காங்கிரஸிற்குத் தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் கூட்டம் திரட்டிவருமாறு, வங்க மாநிலத் தலைவர் அரவிந்த்கோஷ், வ.உ.சிதம்பரனாருக்குத் தந்தி கொடுத்தார். சிதம்பரனார், சுப்பிரமணியபாரதியோடும் மண்டையம் சீனிவாசாச்சாரியோடும் கலந்து பேசினார். நூறு பேருக்கு மேல் செல்வது என முடிவாயிற்று. சூரத் மாநாட்டில் குழப்பம் ஏற்பட்டது. திலகரை ஆதரித்த தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளான சிவசாமி அய்யர், சுரேந்திரநாத் எத்திராஜ், பாரதியார், வ.உ.சி. சீனிவாசாச்சாரி, சர்க்கரைச்செட்டியார் முதலானோர் திலகரைச் சூழ்ந்து பாதுகாப்பளித்தனர். தீவிரவாதிகள் அன்றைய நாள் எங்ஙனம் செயல்பட்டனர் என்பதைப் பாரதியார் குறிப்பிடுகிறார். அதனைக் கீழே காண்போம்:

'சென்னைப் பிரதிநிதிகளிலே இரண்டுபேருக்குப் பலமான அடிபட்டது. இன்னும் எத்தனையோ பிரதிநிதிகள் பலமான அடி பட்டும் காயம்பட்டும் வீழ்ந்தனர். ஆனால், தமக்கு எத்தனை அடி பட்டபோதும், திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்தச் சென்னைப் பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது' என்று பாரதி எழுதும்பொழுது நம்முடைய உணர்ச்சி வீறுகொள்கிறது. ஒரு சக்தியும் பிறக்கிறது.

**சுதேசி இயக்கம் :**

சுதேசி இயக்கம் வடஇந்தியாவில் வங்கப் பிரிவினையால் ஏற்பட்டது. தமிழகத்தில் கைத்தொழில் சங்கம், சுதேசிக் கழகம், பாலபாரத சங்கம் ஆகியவை உள்நாட்டுப் பொருள்களை வாங்கவேண்டும்; அவற்றையே பயன்படுத்த வேண்டும் எனக் கூறின. 1906 இல் தூத்துக்குடியில் வ.உ.சி., 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். தீவிரவாதிகளின் தலைவரான திலகரின் நண்பரான வ.உ.சி. 1908 பிப்ரவரி மாதம் கோரல் தொழிற்சாலை வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்று கருதப்பட்டார். தனக்கு விதித்த சட்டத்தை மீறினார். வெள்ளை வணிகர்கள், வெள்ளை முதலாளிகள், வெள்ளைக்கார அதிகாரவர்க்கம் ஆகிய மூன்று கூட்டத்தார்க்கு எதிராகக் கடல்வணிகத்தில் ஈடுபட்டார். பிரிட்டிஷ் கம்பெனிக்கு எதிராகக் கப்பல்விடச் செய்தார். 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயரும் பெற்றார்.

வ.உ.சி.யும் சுப்பிரமணிய சிவாவும் தடை உத்தரவை மீறிப்பேசிய பேச்சுகள் அவர்களைச் சிறையிட்டன. அவர்கள் கைதானதை அடுத்துத் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் வன்முறைகள் நிகழ்ந்தன. இது துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. 1911 ஜூன் 17ஆம் தேதி வாஞ்சிநாதன், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளரான ஆஷ்துரையை மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் சுட்டுக்கொன்றான். வன்முறைக் கொடுமைகளை அறவே ஒழிக்க எண்ணிய ஆங்கிலேய அரசை மறைமுகமாக எதிர்க்கச் செயல்பட்டனர். அவர்களில் குறிப்பிடத் தகுந்த தீவிரவாதி சுப்பிரமணியசிவா, பாரதி, வ.வே.சுப்பிர மணியஅய்யர், நீலகண்டபிரம்மச்சாரி, சுதேசி பத்மநாப அய்யர் முதலானோர் ஆவர்.

**தன்னாட்சி இயக்கம்**

சூரத் பிளவுக்குப் பின்னர் தீவிரவாதிகள் அடக்கப்பட்டனர். மிதவாதிகள் வலிமை குன்றினர். தேசிய இயக்கத்திற்குச் செயல் திறம் வாய்ந்த தலைவர்கள் இல்லை. ஆயின், தமிழகம், இந்திய விடுதலைப் போராட்ட உணர்விற்குச் செம்மையான தலைவர்களை அவ்வப்பொழுது தந்துகொண்டிருந்தது. சோதனை வந்த பொழுதெல்லாம் தமிழகம் தன்னை விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கத் தவறியதில்லை.

இந்திய தேசிய உணர்வு குன்றிப் போய்விட்டதோ என்று எண்ணி இருந்தபோது, குன்றென நின்று இந்திய தேசிய அரசியிலில் ஈடுபடலானார் அன்னிபெசன்ட் அம்மையார். தியோசாபிகல் சங்கத்தின் தலைவியாயிருந்த அவர் அரசியலுக்கு வந்தது *1914* ஆம் ஆண்டாகும். இந்தியாவிற்கு முழுமையான தன்னாட்சி வேண்டும் எனக் கூட்டங்களில் முழங்கினார். இதன் விளைவாகத் தன்னாட்சி இயக்கம் தோன்றியது. இதனைத் தோற்றுவித்ததோடு, மிதவாதப் போக்குடைய பலரையும் ஈர்த்து, முற்போக்குடைய இயக்கமாகத் தன்னாட்சி இயக்கத்தை உருவாக்கினார். *1916* ஆம் ஆண்டு *3* ஆம் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது. சர்.எஸ். சுப்பராவ், பட்டாபி சீதாராமையா, ஏ.அரங்கநாத முதலியார் முதலானோர் இவ்வியக்கத்தின் முதன்மை உறுப்பினர்களாவர். தமிழ்நாடு முழுமையும் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் தோன்றிய தன்னாட்சி இயக்கம் ஆங்கிலேயே அரசின் போக்கை எதிர்த்தது. இவ்வியக்கத்தின் தீவிரப்போக்கை சென்னை ஆளுநராக இருந்த பென்ட்லண்ட் பிரபு அடக்க எண்ணினார். முன்னணித் தலைவர்கள் கைதாயினர். பலரும் காவலில் வைக்கப்பட்டனர். தேசிய விடுதலையை எண்ணிய பலரும் அன்னிபெசன்ட் இயக்கத்தில் வந்து சேர்ந்தனர். இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்டு முதன் முதலாகச் சிறை சென்ற பெண்மணி அன்னிபெசண்ட் ஆவார். இவர் கைது செய்யப்பட்ட பின், நாடெங்கிலும் கிளர்ச்சி ஏற்பட்டது; புதியதோர் எழுச்சியும் தோன்றியது. திரு.வி.க. அரசியலில் புகுந்ததற்குக் காரணமாயிற்று. தன்னாட்சி இயக்கக் கிளர்ச்சியின் உச்சக்கட்டமே, இந்தியாவுக்கு விரைவில் தன்னாட்சி வழங்கவேண்டும் என மாண்டேகு பிரபுவை இலண்டன் நாடாளுமன்றத்தில் கூறவைத்தது.

**ரௌலட் சத்தியாக்கிரகம்**

காந்திஜி தமிழ்நாட்டில் தங்கியிருந்தபோது தொடங்கிய ரௌலட் சத்தியாக்கிரகம் தனிச்சிறப்புப் பெற்றது. *1918* ஏப்ரல் *15* ஆம் தேதி இந்திய சட்டமன்றம் ரௌலட் குழுவின் அறிக்கையின் பேரில் இரு சட்டங்களை நிறைவேற்றியது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்தியா முழுவதும் கிளர்ச்சி கொள்ளும் என்று காந்தி அறிவித்ததோடு, அதை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்யப்போவதாக உரைத்தார். இந்த ரௌலட் சட்டத்தின்படி *(1)* அரசாங்கம் ஆணை எதுவுமின்றிக் கைது செய்யலாம்.

(2) 'பயங்கரவாதிகள்' என்ற காரணத்தைக்கொண்டு எவ்வித விசாரணையுமில்லாமல் காலவரையறையின்றிக் காவலில் வைக்கலாம். (3) அரசுக்கு எதிரான குற்றங்களைச் செய்வோரைக் குறிப்பிட்ட இடங்களில் காவலில் வைக்குமாறு கட்டாயப்படுத்தலாம். (4) நடுவர்களின் துணையின்றியே அரசுக்கு எதிரான தீங்கிழைப்பை மூன்று உயர் நீதிமன்ற நடுவர்கள் விசாரிக்கலாம் என ரௌலட் சட்டம் கூறியிருந்தது.

ரௌலட் சட்ட எதிர்ப்புத் திட்டத்தினைக் காந்தி 1919, மார்ச்சு 21 இல் கஸ்தூரிரங்க அய்யங்கார் வீட்டில் உருவாக்கினார். சென்னை மாநிலத்தில் 120 பேர்கள் சத்தியாக்கிரக உறுதி மொழியில் கையெழுத்திட்டனர். சி.ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, வ.உ.சி., திரு.வி.க. முதலியோரும் கையெழுத்திட்டனர். ரௌலட் சட்ட எதிர்ப்பில் இராஜாஜி, காந்தியுடன் முழுமையாகப் பாடுபட்டார்.

ரௌலட் சத்தியாக்கிரகம் தமிழகம் எங்கும் பரவியது. டாக்டர் நாயுடு என்பார் சென்னை, சேலம் போன்ற இடங்களில் எண்ணற்ற கூட்டங்களில் பேசினார். இந்தியாவெங்கும் இச் சத்தியாக்கிரகம் எழுச்சியுற்றது.

1919இல் தமிழக காங்கிரஸில் வலிமை வாய்ந்த தலைவர்கள் இருந்தனர். இவர்கள் தீவிரமாக அரசியலில் ஈடு பட்டு எதிர்ப்புணர்ச்சியைக் காட்டலாயினர். இவர்களில் குறிப் பிடத் தகுந்தவர்கள் ஈ.வெ.இராமசாமிப்பெரியார், திரு.வி.க., தோழர் சிங்காரவேலர் முதலியோர் ஆவர்.

சென்னை மாகாண சங்கம் என்ற ஓர் அமைப்பு அந்நாளில் உருவாக்கப்பெற்றது. 1919ல் ஈரோடு நகரில் ஈ.வெ.ரா. இச்சங்கத்தின் மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றார். வரவேற்புத் தலைவராயும் இருந்தார். இதன் மூலம் தேசிய நீரோட்டத்தில் கலந்தார். பின்னாளில் நடந்த ஒத்துழை யாமைப் போரில் குதித்தார்; இவரது மனைவி நாகம்மையாரும் தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமியும் இப்போரில் இறங்கினர். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட ஈ.வெ.ரா. கள்ளுக்கடைகளை மறியல் செய்தார். தனக்குரிய தோப்புகளில் இருந்த தென்னை மரங்களைக் கள் குத்தகைக்குவிட மறுத்தார்; பல்லா யிரக்கணக்கான ரூபாய் வருமானத்தையும் இதனால் இழக்க நேர்ந்தது. கதராடை அணிந்து பிறரையும் அணிவிக்கச்

செய்தார். கேரளாவில் வைக்கம் என்ற இடத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாகப் போராட்டம் செய்தார். இதனால் சிறை சென்றார்.

திரு.வி.க. வெஸ்லிக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். கல்லூரி நாட்களிலேயே, அன்னிபெசண்ட் அம்மையார் கைது செய்யப்பட்டதை எதிர்த்து அரசியலில் குதித்தவர். அன்னிபெசன்ட் தொடங்கிய தன்னாட்சி இயக்கத்தில் சேர்ந்து தேசிய விடுதலைப்போருக்குத் தயாரானார். காந்திய சத்தியாக்கிரக உறுதிமொழியில் கையெழுத்திட்டு ஆதரவு தந்தவர். தொழிற்சங்கம் அமைக்கத் துணை நின்றோருள் இவரும் ஒருவர்.

தோழர் சிங்காரவேலர் ரௌலட் சட்ட எதிர்ப்பியக்கத்தில் ஈடுபடலானார். காந்தி கொணர்ந்த ஒத்துழையாமைக் களத்தில் குதித்தார்.

**கிலாபத் இயக்கம்**

1919 இல் காந்தியின் ஒத்துழைப்போடு இந்திய முஸ்லீம் தொடங்கிய கிலாபத் இயக்கம் தமிழ்நாட்டில் ஆதரவு பெற்றது. இராஜாஜி முழு ஆதரவு தந்ததோடு, இந்துக்களின் ஆதரவையும திரட்டித் தந்தார். அலி சகோதரர்களை விடுதலை செய்யக் கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். டி.எஸ்.இராஜன், டி.வி.சுவாமிநாத சாஸ்திரி, கஸ்தூரி ரங்க ஐயங்கார். பிரகாசம் போன்றோரின் ஒத்துழைப்போடு கிலாபத் இயக்கம் தமிழ்நாட்டில் வெற்றி பெறத் துணைநின்றவர் இராஜாஜி ஆவார்.

**ஒத்துழையாமை இயக்கம்**

காந்தியடிகள் 1920 இல் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம் ராஜாஜியின் தலைமையின் கீழ் தமிழகமெங்கும் தீவிரமாகியது. தன்னாட்டுப் பொருள்களுக்கு ஆதரவு தருவதே இவ்வியக்கத்தின் குறிக்கோள். கள் ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, தேசிய கல்விச் சட்டத்திற்குப் பணிய மறுப்பு, வரி செலுத்த மறுப்பு, அரசுப் பதவிகளைத் துறத்தல், மாணவர்கள் கல்வி நிறுவனங்களை விட்டு வெளியேறுதல் முதலிய பல செயல்கள் இவ்வியக்கத்தின் குறிக்கோள்கள் ஆயின. தமிழகம் முழுதும் இவ்வியக்கம் வெற்றி கண்டது. பதவியைத் துறந்தோர் பலர்; கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டோர் பலர்; தொழிலாளர்கள்

வேலைநிறுத்தம் செய்தனர்; கடையடைப்பு நடந்தது; வன்முறையும் துப்பாக்கிச் சூடும் நிகழ்ந்தன. ஒத்துழையாமை இயக்கத்திற்கு முதுகெலும்பாய் இருந்த இராஜாஜி சிறைப்பட்டார்.

**சைமன் குழு எதிர்ப்பு**

சித்தரஞ்சன்தாஸ் தொடங்கிய சுயராஜ்ய கட்சியால் சட்டமன்றங்களில் இடம்பெற்றது காங்கிரஸ். ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டபின்பு, சுயராஜ்யக் கட்சி நம்பிக்கை தருவதாயிருந்தது. நாளடைவில் அதுவும் வலுவிழந்தது. ஆயின் சைமன் குழு அமைக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது.

சைமன் குழு 1929 பிப்ரவரி 18இல் சென்னை வந்தது. இந்திய அரசியல் நிலையினை ஆராய்ந்து, தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க அக்குழு இங்கு வந்தது. அக்குழுவில் இந்தியர் எவரும் இடம்பெறவில்லை. அதனை அனைத்துக் கட்சிகளும் புறக்கணித்தன. 'சைமனே திரும்பிச் செல்' என்ற முழக்கம் ஓங்கியது. ஈ.வெ.ரா., ஆர்.கே.சண்முகம் செட்டியார், வரதராஜூ நாயுடு, ராஜாஜி, சத்தியமூர்த்தி. காமராஜ், பக்தவத்சலம், குமாரசாமி ராஜா போன்றோர் காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களாக இருந்தனர்.

**உப்புச்சத்தியாக்கிரகம்**

காங்கிரஸ் செயற்குழு சபர்மதி ஆசிரமத்தில் கூடியது. காந்தி உப்புச்சட்டத்தை மீறப்போவதாகத் தெரிவித்தார். சட்டமறுப்பு இயக்கமாக உருவெடுக்கத் தொடங்கியது. ஏழைகள் வயிற்றைத் தொட்ட உப்புவரிவிதிப்பைத் தக்க கணையாகக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தார். ஆங்கிலேயர் உப்புச் சத்தியாக்கிரகத்தைக் கிண்டல் செய்தனர். 'தேநீர்க் கிண்ணத்தில் எழுந்த புயல்' என வருணித்துக் கேலி பேசினார் இர்வின் பிரபு ஆங்கிலேய ஆளும் இனம், கிண்டர்கார்டன் கிளர்ச்சி எனக் கருதியது. காந்தி இதனை வலிமைமிக்க அறப்போராகவே எண்ணிச் செயல்படலானார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தார் ராஜாஜி. உப்புச் சத்தியாகிரகத்தை வழிநடத்த காங்கிரஸ் அவரைத் தளபதி ஆக்கியது. வேதாரணியத்தில் உப்புச்சத்தியாக்கிரகம் செய்வதென முடிவாயிற்று. 1930 ஏப்ரல் 13 ஆம் நாள் ராஜாஜி, சுப்பராமன், மற்றும் 98 சத்தியாக்கிரகிகள்

திருச்சியிலிருந்து வேதாரணியம் நோக்கிக் கால்நடையாகப் புறப் பட்டுச் சென்றனர். வழிநெடுகிலும் இவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏப்ரல் 28ஆம் தேதி வேதாரணியத்தை அடைந் தனர். ஏப்ரல் 30ஆம் நாள் ராஜாஜி 16 சத்தியாக்கிரகிகளோடு அகஸ்தியம்பள்ளியிலுள்ள உப்பளம் சென்று சட்டத்தை மீறி உப்பை அள்ளினார்; கைது செய்யப்பட்டார்.

இராஜாஜிக்குப் பின் க. சந்தானம், மட்டப்பாறை வேங்கடராமய்யர், கே.சுப்பிரமணிய அய்யர் போன்ற பலர் உப்புச்சத்தியாக் கிரகத்திற்குத் தலைமை தாங்கினர்; சட்டத்தை மீறினர்; கைதாயினர். கிட்டத்தட்ட ஒன்றரை மாதம் உப்புச்சத்தியாக்கிரகம் நடந்தது. வேதாரண்ய உப்புச்சத்தியாக்கிரகத்தில் 'சர்தார்' வேதரத்னம்பிள்ளை ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

சென்னை நகரிலும் ஆந்திரகேசரி பிரகாசம் தலைமையில் ஏப்ரல் 13 ஆம் தேதி இச்சத்தியாக்கிரகம் தொடங்கியது. டாக்டர் நடராசன், ஸ்ரீபாத சங்கர், ஆக்கூர் அனந்தாச்சாரி, ஜமதக்கனி, செல்வி துர்க்காபாய் முதலானோர் பங்கேற்றனர். தண்டனையும் பெற்றனர். தமிழகத்தின் பிற பகுதிகளிலும் இச் சத்தியாக்கிரகம் தீவிரம் அடைந்தது.

### சட்ட மறுப்பு இயக்கம்

சட்டமறுப்பு இயக்கத்தின் தொடர்பாக 1930, மே 15ஆம் நாள் காந்தி கைதானார். எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். தமிழகம் முழுவதும் கடையடைப்பு, வேலை நிறுத்தம் செய்யப் பட்டன. திருமதி முத்துலட்சுமிரெட்டி போன்றவர்கள் காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்துப் பதவியில்இருந்து விலகினர்.

சட்டமறுப்புப் போராட்டம் தீவிரமாகியதும் அரசின் அடக்கு முறையும் தீவிரமாகியது. சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டனர். சட்ட விரோதப் பேச்சுக்காகச் சிறைத்தண்டனை பெற்றவர்களில் இராஜாஜி, சத்தியமூர்த்தி, கே.பாஷ்யம் அய்யங்கார், வி.ஏ.சுந்தரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1932இல் ஜனவரி 4இல் காந்தி மீண்டும் கைதானார். சட்டமறுப்பு இயக்கத்தின் தொடர்பாக இம்முறை அவர் கைது செய்ததைக் கேள்வியுற்ற திண்டுக்கல் வெள்ளைச்சாமி பிள்ளை

என்பவர் உயிர் நீத்தார். இராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோரும் மறுபடியும் கைதானார்கள்.

1932 ஜனவரி 26ஆம் நாள் சுயஆட்சி தினம் கொண்டாடப்பட்டது. தமிழகத்தில் பலரும் கைதாயினர். திருப்பூரில் தடை உத்தரவை மீறியதற்காக பி.எஸ்.சுந்தரம் தலைமையில் சென்ற ஊர்வலத்தைக் காவலர்கள் கண் மூடித்தனமாகத் தாக்கினர். இத்தாக்குதலின் போது திருப்பூர்க் குமரன் என்ற பெயருக்கு உரிய குமாரசாமியின் மண்டை நொறுக்கப்பட்டது. கொடியைக் கையில் பிடித்தவாறே உயிர் நீத்தார். கொடியைக் காக்க, தான் பலியானார். இதனால் 'கொடி காத்த குமரன்' என்ற பெயரும் பெற்றார். சட்டம் மீறிய குற்றத்திற்காக, கோவை சி.ஏ.ஐயாமுத்துவும் அவரது மனைவி கோவிந்தம்மாளும் கைதாயினர். விருதுநகரில் காமராஜர் ஜாமீன் கட்ட மறுத்து ஓராண்டுச் சிறை பெற்றார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மிகத் தீவிரமாக இருந்தது சட்ட மறுப்பு இயக்கமாகும்.

### தனிநபர் சத்தியாக்கிரகம்

வார்தாவில் 1940 அக்டோபர் 13 ஆம் நாள் கூடிய 'காங் கிரஸ் கமிட்டிக்' கூட்டத்தில் காந்தி தனிநபர் சத்தியாக்கிரகத் திட் டத்தை வெளியிட்டார். தமிழ் நாட்டில் பலர் கைதாயினர். டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் முதல் சத்தியாக்கிரகக் கைதியாகச் சிறை சென்றார். காமராஜர் சத்தியாக்கிரகிப் பட்டியலைத் தயா ரித்துக் காந்தியைச் சந்திக்கக் கூடுர் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார். அங்கு காமராஜர் கைது செய்யப்பட்டார். ஒத்துழையாமை இயக்கம், உப்புச்சத்தியாக்கிரகம் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டவர்களைக் காட்டிலும் தனிநபர் சத்தியாக் கிரகத்தில் கலந்து கொண்டு சிறைத்தண்டனை பெற்ற வர்கள் மிகுதியாவர். இராஜாஜி, சத்தியமூர்த்தி, டாக்டர் சுப்பராயன், முனுசாமிப்பிள்ளை, எஸ். இராமநாதன், கோபால ரெட்டி, வி.வி.கிரி, எம்.பக்தவத்சலம், என்.எஸ்.வரதாச்சாரி, டி.எஸ். அவினாசிலிங்கம், குமாரசாமிராஜா, வேங்கடசாமி நாயுடு, தெ.பொ.மீனாட்சிசுந்தரம், மா.பொ.சி., மறை திரு நாவுக்கரசு, டி.எஸ்.சொக்கலிங்கம்பிள்ளை, ரா.கிருட்டிண மூர்த்தி (கல்கி) முதலானோர் சிறைப்பட்டனர்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1942 ஆகஸ்டில் பம்பாயில் கூடிய காங்கிரஸ், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தியாவெங்கும் உடனடி விளைவு ஏற்பட்டது. காந்தி கைதானார். பம்பாய் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிய காமராஜர், வேலூர் வி.எம்.உபயதுல்லா, திருவண்ணாமலை என்அண்ணாமலைபிள்ளை, சி.என்.முத்துரங்கமுதலியார், எம்.பக்தவத்சலம், எஸ்.சத்தியமூர்த்தி, முதலானோர் கைது செய்யப்பட்டனர்.

காந்தியின் 'செய் அல்லது செத்துமடி' என்பது தாரக மந்திரமாயிற்று. இந்தியாவை விட்டு ஆங்கிலேயரை வெளியேற்றும் போராட்டம் தமிழகம் முழுதும் எதிரொலித்தது. துப்பாக்கிச் சூடும், கண்மூடித்தனமான தாக்குதலும் பலவிடங்களிலும் நடந்தன. காவலர்களின் கொடுமை தாங்காது மக்கள் மாண்டனர்; கடும் அநீதிக்கு உள்ளாயினர் தமிழ் மக்கள். தேவகோட்டை திருவாடானை, திருவேகம்புத்தூர் முதலிய ஊ ர்களில் காவலர்களின் வன்முறை உச்சகட்டமாயிற்று பலர் மடிந்தனர்.

நாசவேலை என்று குற்றம் சாட்டப்பட்டுப் பலரும் கைதானார்கள். திராவக வீச்சு, 'லான்' கொலை, விமானத்தளம் எரிப்பு, சீர்காழிசதி, திருவையாறு கலவரம், குமரி மாவட்டக் கலகம் முதலியவற்றிற்காக வழக்குகள் தொடரப்பட்டன. இவ் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டோர்க்கு மரணதண்டனை, ஆயுள் தண்டனை, நாடுகடத்தல், கடுங்காவல்தண்டனை முதலியவை வழங்கப்பட்டன. தன்னை ஈந்து தமிழகம் தியாகத்தின் திருவிளக்காய்ச் சுடர்விடத் தொடங்கியது.

மீண்டும் 1942இல், ஆகஸ்டுக் கிளர்ச்சி, தமிழ்நாட்டில் வேரூன்றிய பின், தலைமறைவாயிருந்த பலரும் முன்வந்து நாடு விடுதலையுறப்பாடுபட்டனர். வன்முறை வழியேயும் தங்களின் தீவிரமான விடுதலை உணர்வை வெளியிட்டனர். அதற்கு 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் கால்கோளாகும்.

## இந்தியாவிற்கு விடுதலை

1945 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி வெற்றி பெற்றது. இது இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உரிய வெற்றிப்பாதையில் நடைபோட வழி வகுத்தது.

நாடாளுமன்றத்தில் அட்லி பிரபு வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை வெளியிட்டார். அது வெளியிடப்பட்டது 1947 பிப்ரவரி 20 ஆம் நாளாகும். அதன்படி :

(1) 1948 ஜூன், முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்.

(2) அதிகாரத்தை மாற்றி யாரிடம் கொடுப்பது என் பதைப் பிரிட்டிஷ் அரசே முடிவு செய்யும்.

(3) வேவல் பிரபுவுக்குப் பதிலாக மௌண்ட் பேட்டன் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பு ஏற்பார். புதிய வைசிராய் இந்தியர்களிடம் அதிகாரத்தை மாற்றி வழங்குவார்.

அட்லியின் அறிவிப்பு இந்திய இதயங்களுக்கு ஆறுதல் அளித்தது; கானலில் கிடைக்கும் நீராக இன்சுவை பயந்தது; தேனுண்டு திளைப்பது போலாயிற்று; வறண்டு போய்க்கிடந்து பிளவுபட்டிருந்த நிலங்களில் கார்மழை பொழிந்து நிலத்தாகம் தீர்ப்பதாக இருந்தது.

மௌண்ட் பேட்டன் இந்தியா வந்ததும் அட்லி கூறியதைச் செயல்படுத்தினார். இந்திய விடுதலைக்கான அறிவிக்கை தயார் செய்யப்பட்டது. இருப்பினும், இந்திய நாட்டைக் கூறுபோட்டே, மௌண்ட் பேட்டன் விடுதலை வழங்க எண்ணினார். எண்ணம் செயல் வடிவம் பெற்றது. 1942ல் நாட்டு விடுதலை கருதி, பாகிஸ்தான் பிரிவினையை ஏற்கும் இராஜாஜியின் திட்டமும் உருவாயிற்று. இத்திட்டத்தின் அடிப்படையில் பேட்டன் செயல் பட்டார். இந்தியா, பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்தது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 - 15 நள்ளிரவு நேரத்தில் நாடு முழுவதும் உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா விழித்துக் கண் திறந்தது! ‘விடுதலை இந்தியா’ என ஆயிற்று.

### செய்தித்தாள்களின் பங்கு

பத்திரிகையின் பணியையும் விடுதலைக்கீதம் பாடிய கவிஞர்களையும் நாம் எண்ணாமல் இருக்க முடியாது. மக்களைத் தட்டியெழுப்பி உணர்ச்சி கொள்ளச் செய்த ஆற்றல் தமிழகு இதழ்களுக்கு இருந்தது. தேசிய விடுதலையின் போர்க்குரலாக அவை முழக்கமிட்டன. தமிழக மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்தன. நாட்டுத் தலைவர்களின் கருத்து, பேச்சு முதலியவற்றை வெளியிட்டு வந்தன. கூட்டங்கள், சொற்பொழிவு பற்றிய செய்திகளைத் தெரியப்படுத்தின.

சுதந்திரச்சங்கு, காந்தி, சுதேசமித்திரன், சத்யாக்கிரகி தேசபக்தன், இந்து, ஹோம்ரூல், தினமணி, தமிழ்நாடு, சுயராஜ்யா, பிரபஞ்சமித்திரன், நவசக்தி, கர்மயோகி, இந்தியா, விஜயா முதலான செய்தித்தாள்களின் பெரும்பங்கு குறிப்பிடத் தக்கது. இவற்றின் ஆசிரியர்களும் விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்றனர்.

**புரட்சிக்கீதம் பாடியவர்கள்**

நாட்டுணர்ச்சியைப் பாட்டில் தீட்டிக் காட்டிய கவிஞர்கள், விடுதலை வேட்கையில் உந்தப்பெற்றவர்கள். விடுதலை உணர்வு கொண்ட கவிஞர்களுள் பாரதி, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை முதலானோர் ஆற்றிய பணியினை மறுப்பதற்கில்லை. விடுதலை வேள்வியில் குதித்து, உள்ளம் வீறு கொள்ள நாட்டின் விடுதலையைப் பாடியவர்கள் இவர்கள்.

பாரதியின் விடுதலைக் கவிதைகளில் கனல் மணக்கும்; புரட்சி வீறுகொண்டு வெடிக்கும்; உணர்ச்சி வேங்கையென மூரி நிமிரும். காந்தி கைதானபோதும் வ.உ.சி.செக்கிழுத்தபோதும், அந்நிகழ்ச்சிகளைப் பாட்டில் தேக்கினார்; மிதவாதத்திற்கு விடைகொடுத்து, ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா! எனப்பாடித் தீவிரவாதத்தை ஆதரித்தார்; போலிச்சுதேசிகளைச் சாடினார்; பல்வேறு வகைகளில் தம்மால் ஆன கவிப்பணியையும் செய்து நாடு விடுதலைபெற விழைந்தவர் பாரதி.

நாமக்கல் கவிஞர் விடுதலை வேள்வியில் ஈடுபட்டவர்; காந்தியக் கவிஞர். வேதாரண்யம் உப்புச்சத்தியாக்கிரகத்தின்போது. அவர் எழுதிய 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடல் தமிழக வீரர் களைத் தட்டியெழுப்பியது. வீர உணர்ச்சி ஊட்டியது. இப்போர்ப் பரணி தமிழரின் இதயங்களைத் தொட்டது.

பாரதியின் 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற பாட்டும், நாமக்கல் கவிஞரின் 'கத்தியின்றி இரத்தமின்றி' என்ற பாட்டும் தமிழக விடுதலை வீரர்களின் விடுதலை வேதமாகத் திகழ்ந்தன.

பாடுபட்டு வாங்கிய விடுதலையை வீடுதோறும் பேணி நாட்டைச் சிறக்கச் செய்வோமாக!

# 10. கடைசிக் கடிதம்

(ஜவகர்லால் நேரு)

டேராடூன்
ஆகஸ்ட் 9, 1933

அன்பே கதை முடிந்து விட்டது. இனி நான் எழுத வேண்டிய தில்லை. ஆனால், கதை ஜோராக முடியவேண்டும் என்னும் விருப்பம் என்னை இன்னொரு கடிதம் - கடைசிக் கடிதம் - எழுதுமாறு தூண்டுகிறது!

எனக்கும் கதையை முடிக்க வேண்டியநாள் வந்துவிட்டது. எனது இரண்டு வருஷத் தண்டனைக் காலம் முடியப்போகிறது. இன்றயிலிருந்து சரியாக முப்பத்து மூன்றாவது நாள் நான் விடுதலை அடைவேன். அதற்கு முன்பே நான் விடுதலை ஆனாலும் ஆகலாம். இரண்டு வருஷம் இன்னும் கழியவில்லை. ஆனால், எனக்கு மூன்றரை மாதம் 'மார்க்கு' தண்டனைத் தள்ளுபடி - கிடைத்திருக்கிறது. ஒழுங்காக நடநதுகொள்ளும் கைதிகளுக்கெல்லாம் இவ்வாறு 'மார்க்கு' கிடைப்பது வழக்கம். நான் ஒழுங்காக நடந்துகொள்ளும் கைதி என்று அர்த்தம். என்னை ஏன் அவ்வாறு கருதுகிறார்களோ, எனக்கே தெரியவில்லை. ஆகவே, எனது ஆறாவது சிறைத்தண்டனை முடிவுறுகிறது. மீண்டும் பரந்த உலகத்துக்கு நான் செல்வேன். ஆனால், எதற்காக? அதனால் என்ன நன்மை! எனது நண்பர் களிலும் தோழர்களிலும் பெரும்பாலோர் சிறையில் கிடந்து வதங்கும்போது, நான் மட்டும் எதற்காக வெளியே போவது?

நான் எழுதியுள்ள கடிதங்கள் போர் போராகக் குவிந்து கிடக்கின்றன! எவ்வளவு சுதேசிக் காகிதத்துக்குக் கேடு! எவ்வளவு சுதேசி மைக்குக் கேடு! இதனால் ஏதாவது பிரயோஜனம் உண்டா என்று எனக்கே தெரியவில்லை. இவ்வளவு காகிதமும் மையும் உனக்கு ஏதாவது சுவாரசியமான சமாசாரம் சொல்லக்கூடுமா? 'சொல்லக்கூடும்' என்றுதான் நீ சொல்லுவாய். வேறுவிதமாகச் சொன்னால் என் மனம் புண்படுமென்று நினைப்பாய். என் னிடம் உனக்குள்ள அன்பினால் நீ என்னைப் புண்படுத்த விரும்ப மாட்டாய். ஆனால் நீ அவற்றை விரும்பினாலும் விரும்பா விட்டாலும், இந்த இரண்டு நீண்ட வருஷமும் நாள் தவறாமல் நான் அவற்றை எழுதும்போது அடைந்த இன்பத்தை யாரும்

எடுத்துக்கொள்ள முடியாது. நான் இங்கு வந்தபோது குளிர் காலம். குளிர்காலம் போய் இளவேனிற்காலம் வந்தது. இள வேனில் அதிக நாள் நீடிக்கவில்லை. கோடை வந்து அதைக் கொன்றுவிட்டது. பிறகு பூமியெல்லாம் வறண்டு மனிதனும் மிருகமும் நாவுலர்ந்து இரைப்பு வாங்குகையில், பெருமழை பொழிந்து உலகைக் குளிர்வித்தது. நீல ஆகாயம் துலாம்பரமாகக் காட்சி அளித்தது. பின் மாலைப்போது இனிமையாயிருந்தது. பருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஓராண்டு கழிந்தது. மீண்டும் அதே பருவங்கள்; குளிர்காலம், இளவேனில், முது வேனில், கார்காலம். நான் இங்கே உட்கார்ந்து எழுதிக் கொண்டும் உன்னை நினைத்துக்கொண்டும் பருவங்கள் கழி வதைப் பார்த்துக்கொண்டும் சிறைக்கூடத்துமேல் தளத்தில் விழும் மழையோசையைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறேன்.

**பிரெஞ்சுப் பாடல்**

*மழைவிழும் ஓசை இனிதே!*
*மண்ணிலும் கூரையிலும் மழை பொழியுமே!*
*நைந்த நெஞ்சுக்கு, மழை வழங்கும்*
*தீம்பாட்டு எத்துணை இனிது!*

பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெஞ்சமின் டிஸ்ராலி என்னும் பிரிட்டிஷ் ராஜதந்திரி, 'பிறர் சிறைப்பட்டு நாடு கடத்தப்பட்டால் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து விடு கிறார்கள். ஒரு புலவனோ அந்நாட்களைத் தன் வாழ்க்கையி லேயே மிகவும் இனிய நாட்களாகக் கருதுவான்' என எழுதி யிருக்கிறார். 17வது நூற்றாண்டில் வாழ்ந்த கீர்த்தி மிக்க டச்சு சட்ட நிபுணரும், தத்துவ மேதையுமான உறியூகோ குசோட்டி யசைப் பற்றி அவர் அவ்வாறு எழுதினார். உறியூகோ குசோட் டியசுக்கு ஆயுள் தண்டனை விதித்தார்கள். ஆனால், அவர் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் தப்பி வந்துவிட்டார். சிறையி லிருந்த அவ்விரு ஆண்டுகளையும் அவர் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியிலும் இலக்கிய சிருஷ்டியிலும் செலவிட்டார். புகழ் மிக்க புலவர் பெருமக்கள் எத்தனையோ பேர் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார்கள். அவர்களில் புகழ்பெற்றோர் இருவர்: டான் குயிக்சாட் என்னும் நூலை எழுதிய ஸ்பானியப் புலவர் சர்வாண்டிஸ் ஒருவர்; 'சொர்க்காரோகணம்' என்னும் நூலை எழுதிய ஆங்கிலப் புலவரான ஜான் பனியன் இன்னொருவர்.

நான் புலவன் அல்லன். நான் சிறையில் கழித்த நாட்கள் என் வாழ்க்கையிலேயே மிகவும் இனிமையான நாட்கள் என்று சொல்லவும் நான் தயாராயில்லை. ஆனால், படிப்பதும் எழுது வதும் சிறையில் காலத்தைக் கழிப்பதற்கு மிகவும் உதவியாயிருந்தன என்று மட்டும் சொல்லுவேன். நான் இலக்கிய ஆசிரியன் அல்லன்; சரித்திர ஆசிரியனும் அல்லன்; பின்னே நான் என்ன? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டம். நான் பல விஷயங்களில் புகுந்து பார்த்திருக்கிறேன். கலாசாலை யில் விஞ்ஞானம் கற்றேன். பிறகு சட்டம் படித்தேன்; பிறகு எத்தனையோ விஷயங்களில் நுழைந்து பார்த்துவிட்டுக் கடைசி யாக இந்தியாவில் பலரும் ஈடுபட்டுள்ள தொழிலாகிய சிறைக்குப் போகும் தொழிலை மேற்கொண்டிருக்கிறேன்!

நான் இக்கடிதங்களில் எழுதியுள்ள எதையும் நீ முடிந்த முடிவாகக் கொள்ளக்கூடாது. ஓர் அரசியல்வாதி எல்லாவற்றைப் பற்றியும் ஏதாவது சொல்லிவைக்க விரும்புவான். அவன்மீது எப்போதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்! இக் கடிதங்கள் மேற் போக்காக வரையப்பட்ட குறிப்புகளே ஒழிய வேறில்லை. இவற்றூடு செல்லும் மெல்லிய கயிறு இவற்றைப் பிணித்து நிற்கிறது. சரித்திர உலகில் சஞ்சரிக்கையில் பல நூற் றாண்டுகளையும் பல முக்கிய நிகழ்ச்சிகளையும் ஒரே தாண்டாகத் தாண்டிவிட்டு எனக்குப் பிடித்த ஏதாவதொரு நிகழ்ச்சியில் கூடாரம் அடித்துக் கொண்டு தங்கிவிட்டிருக்கிறேன். என்னுடைய எழுத்தில் என்னுடைய விருப்புவெறுப்புகள் வெளிப்படத் தோன்றுவதை நீ கவனித்திருப்பாய். அதேபோலச் சிறையில் மாறிமாறிவரும் என்னுடைய சித்தவிருத்திகளும் என்னுடைய எழுத்தில் படிந்துள்ளன. நான் சொல்லியுள்ளதை யெல்லாம் நீ வேதவாக்காக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் கூறியுள்ள வரலாறுகளில் எத்தனையோ பிழைகள் இருக்கலாம். சரித்திர சம்பந்தமாக எழுதுவதற்கு நூல்நிலையமோ அவ்வப்போது பார்ப்பதற்கு வேண்டும் நூல்களோ இல்லாத சிறை ஏற்ற இடம் என்று சொல்ல முடியாது. என்னுடைய குறிப்புப் புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டே நான் பெரும்பாலும் எழுதவேண்டி யிருந்தது. நான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் சிறைக்குப் போக ஆரம்பத்ததிலிருந்து இக்குறிப்புப் புத்தகங்களைச் சேர்த்து வந்திருக்கிறேன். வெளியிலிருந்தும் பல நூல்களை வரவழைத் தேன். ஆனால், அவை வந்து போய்விட்டன. சிறையில் நான் ஒரு நூல்நிலையம் சேர்க்க முடியாதல்லவா? அந் நூல்களிலிருந்து

அநேக விஷயங்களையும் கருத்துகளையும் வெட்கமின்றி எடுத்தாண்டிருக்கிறேன். நான் புதிதாகச் சொல்லிவிட்டது ஒன்று மில்லை. சில இடங்களில் நான் எழுதியிருப்பதைப் புரிந்து கொள்வது உனக்குக் கஷ்டமாயிருக்கலாம். அவற்றைப் பேசாமல் விட்டுவிடு. சில சமயங்களில் நான் உனக்கு எழுதுகிறேன் என்பதை மறந்துவிட்டுப் பெரியவர்களுக்கு எழுதுகிற மாதிரி எழுதிவிட்டேன். அம்மாதிரி நான் செய்திருக்கக்கூடாது.

நான் எழுதியுள்ளதைச் சரித்திரம் என்று கூற முடியாது. எனது ஆராய்ச்சி மிகவும் ஸ்தூலமானது. நமது நீண்ட கடந்த காலத்தின் காட்சிகளைப் பூதக் கண்ணாடியில் காட்டுகிற மாதிரி காட்டியுள்ளேன். சரித்திரத்தில் உனக்குச் சுவை இருந்தால், சரித்திரம் உன்னை மயக்கினால், உனக்குப் படிப்பதற்குப் பல நூல்கள் இருக்கின்றன. கடந்த காலங்களின் சிக்கல்களை அவிழ்க்க அவை உனக்கு உதவும். ஆனால், நூல்களைப் படிப்பது மட்டும் போதாது. கடந்த காலத்தைப் புரிந்து கொள்ள விரும்பினால் நீ அதை அனுதாபத்தோடும் அமைந்த கருத்தோடும் அணுக வேண்டும். நெடுங்காலத்துக்குமுன் வாழ்ந்த ஒருவனை நீ உள்ளபடி அறியவேண்டுமாயின், அவனுடைய சூழ்நிலையையும் வாழ்நிலையையும் கருத்து நிலையையும் அறிய வேண்டும். சென்று போன காலத்தில் வாழ்ந்தவர்களை இக்காலத்தில் நம்மோடு வாழ்வோராகவும் நம்மைப்போன்ற எண்ணம் உடையோராகவும் நினைத்து மதிப்பிடக் கூடாது. இன்று, அடிமைத்தனம் நியாயம் என்று சொல்வோர் ஒரு பூதர் கிடை யாது. அப்படியிருந்தும் மகாமேதாவியான பிளேட்டோவின் கருத்தை ஏற்று அடிமைத் தனத்தை நிலைக்கப் பண்ணுவதற்காகப் பல்லாயிரக் கணக்கான பேர் உயிரிழந்தார்கள். கடந்த காலத்தை நிகழ் காலத்தின் அளவைகளைக் கொண்டு நாம் நிதானிக்க முடியாது. இதை எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால், கடந்த காலத்தின் அளவைகளைக் கொண்டு நிகழ்காலத்தை நிதானிப்பதும் மடத்தனமாகும் என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். சிறப்பாக, நமது மதங்கள் பழைய குருட்டு நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் மக்கள் மனத்தில் ஊறவைத்து விட்டன. அவை தாம் பிறந்த காலதேச வர்த்த மானத்துக்குப் பொருத்தமானவையாக இருந்திருக்கலாம். ஆனால், தற்காலத்துக்கு அவை ஒரு சிறிதும் பொருந்தா.

ஆகவே, கடந்தகால சரித்திரத்தை நாம் அனுதாபக்கண் கொண்டு பார்த்தால், காய்ந்துலர்ந்த எலும்புக் கூடுகளெல்லாம்

சதையும் ரத்தமும் கூடி மனித உருவங்களாகி உயிர்பெற்று நம் முன்னர் நடந்து செல்வதைக் காணலாம். நமது அகக்கண் முன்பாகப் பல தேசங்களையும் பல காலங்களையும் சேர்ந்த ஆண் களும் பெண்களும் குழந்தைகளும் பவனி போவதைப் பார்க்க லாம். அவர்கள் நம்மிலிருந்து மாறுபட்டுத் தோன்றுகிறார்கள்; ஆயினும், நம்மைப் பெரிதும் ஒத்திருக்கிறார்கள். நம்மைப் போலவே அவர்களிடத்திலும் நல்லது கெட்டது இரண்டும் இருக்கின்றன. சரித்திரம் என்பது இந்திர ஜாலமன்று. ஆயினும் கண்ணுள்ளவர்கள் அதில் எத்தனையோ இந்திர மகேந்திர ஜாலங்களைக் காணலாம்.

சரித்திரத்தின் சித்திரச்சாலையிலே நாம் எண்ணற்ற பல காட்சிகளைக் காண்கிறோம்: எகிப்து-பாபிலோன்-நினேவே பழைய இந்திய நாகரிகங்கள்-ஆரியர் இந்தியாவுக்கு வருவதும் அவர்கள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவுவதும்-சீனர் கலைப்பண்பின் அதிசய சாதனைகள்-நாசாசும் கிரீசும்-ரோம சாம்ராஜ்யமும் ஸ்பைஜாண்டியமும்-அரபியர் இருகண்டங்களை வென்று வாகை சூடுதல்-இந்தியர் கலையின் மறுமலர்ச்சியும் தேய்வும்-நமக்கு அதிகமாகத் தெரியாத அமெரிக்காவைச் சேர்ந்த மயா நாகரிகமும் அஸ்டெகிய நாகரிகமும்- மங்கோலியர் கண்ட மாபெரும் வெற்றிகள் - ஐரோப்பிய இடைக்காலமும் அக்காலத் தில் எழிலுறத்தோன்றி வானுறவளர்ந்த காதிக் தேவாலயங்களும்- இந்தியாவுக்கு இஸ்லாமின் வருகையும் மொகலாய சாம் ராஜ்யமும்-மேற்கு ஐரோப்பாவின் கல்விப் பெருக்கும் கலை மறுமலர்ச்சியும்- அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதும் கீழ் நாடுகளுக்கு வரக் கடல் - மார்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும். கிழக்கை மேற்கு காக்க ஆரம்பித்தது - பெரிய யந்திரத்தின் வருகையும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் - தொழிலியல் வாதம் பரவுதல் - ஐரோப்பிய ஆதிக்கம் - சாம்ராஜ்ய வாதம் - தற்கால உலகில் விஞ்ஞானம் இயற்றிவரும் அற்புத விந்தைகள்.

பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் தோன்றி வளர்ந்து மாண்டு மடிந்து விட்டன. மனிதனும் அவற்றை மறந்து ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சென்றுவிட்டன. பிறகு அகழ்வாராய்ச்சியாளர்கள் பூமியைத் தோண்டிப் பொறுமையோடு சோதித்துப் பார்த்து அவற்றின் சின்னங்களை இப்போது நமக்குக் காட்டுகிறார்கள். ஆனால், சாம்ராஜ்யங்கள் அழிவுற்றாலும் எத்தனையோ கருத்துகளும் கற்பனைகளும் அழியாது இன்றளவும் சிரஞ்சீவியா யிருக்கின்றன. மேரி கோல்ரிட்ஜ் பாடுகிறார்:

''எகிப்து எங்கே? கிரீஸ் எங்கே? திராய்நகர் எங்கே? மணிமுடி தரித்த ரோமாபுரி எங்கே? வெனிஸ் நகரின் செருக்கு எங்கே? எல்லாம் மண்ணோடு மண்ணாயின. ஆனால், அவற்றின் மணிவயிறுவாய்த்த குழந்தைகள் கண்ட கனவும் புனைந்த கவிதையும்- நிலையற்றனவே, சத்தற்றனவே, பயனற்றனவே, நிழல் போன்றனவே, காற்றில் கலக்கும் சூனியமே என்று பிறர் நினைத்தார்கள் - என்றும் அழியா வரம் பெற்றனவே.''

இறந்தகாலம் நமக்கு வழங்கியுள்ள கொடைகள் அனந்தம். இன்று நாம் பெற்றுள்ள செல்வம் அனைத்தும்-கலை, நாகரிகம், விஞ்ஞானம், சத்தியத்தின் அம்சங்கள் சிலவற்றை அறியும் அறிவு, எல்லாம் சேய்மையிலோ அண்மையிலோ கழிந்தொழிந்த இறந்த காலம் அளித்த வரங்களே ஆகும். ஆனால், இறந்தகாலத்தோடு நமது கடமை தீர்ந்துவிடவில்லை. எதிர்காலத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையும் உளது. ஊன்றி நோக்கினால், இறந்த காலத்தைக் காட்டிலும் எதிர் காலத்துக்கு நாம் ஆற்றவேண்டிய கடமை பெரிது என்பது புலப்படும். ஏனெனில், இறந்த காலம் இறந்தொழிந்தது. அதை நாம் மாற்ற முடியாது. எதிர் காலம் இனி வரப்போவது. அதை உருவாக்குவதில் நாம் சிறிதேனும் உதவி புரிதல் கூடும். இறந்த காலம் சத்தியத்தின் ஒரு அம்சத்தை நமக்குக் காட்டிச் சென்றதாயினும், எதிர்காலத்துக்குப் பின்னால் அதே சத்தியத்தின் வேறு பல அம்சங்கள் ஒளிந்து கிடக்கின்றன. அவற்றைத் தேடும்படி எதிர்காலம் நம்மைக் கைகாட்டி அழைக் கிறது. ஆனால், நாம் எதிர்காலத்தை அணுக ஒட்டாதபடி இறந்த காலம் நம்மைத் தழுவிக் கொள்ளுகிறது. நாம் இறந்த காலத்தின் பிடியினின்று நம்மை நாம் விடுவித்துக்கொண்டு எதிர்காலத்தை நோக்கி முன்னேறவேண்டும்.

சரித்திரத்திலிருந்து நாம் கற்கவேண்டிய பாடங்கள் பல என்று சொல்லுகிறார்கள். சரித்திரம் ஒரு முறை இருந்த மாதிரி மறு முறை இருப்பதில்லை என்றும் சொல்லுகிறார்கள். இரண்டும் உண்மையே. நாம் சரித்திரத்தை அப்படியே 'காப்பி' அடித்தால் ஒரு பலனும் ஏற்படாது. அது ஒரு முறை வந்தபடியே மறுமுறையும் வரும். அல்லது இருந்தபடியே இருக்கும் என்று எதிர்பார்த்தாலும் பலன் இல்லை. ஆனால், நாம் அதற்குள் நுழைந்து அதை இயக்கும் சக்திகளைத் துருவி ஆராய்ந்தால் அதனின்று சிறிது பலன் பெறலாம். அப்பொழுதுகூட நமது வினாவுக்கு நேரான விடை கிடைத்துவிடும் என்று சொல்வதற்

கில்லை. 'சரித்திரம் பழைய வினாக்களுக்கு விடை பகரும் முறை புதிய வினாக்களை எழுப்புவதே ஒழிய வேறில்லை' என்று காரல்மார்க்ஸ் கூறுகிறார்.

கழிந்து போன யுகம் பக்தி யுகமாகும். பக்தி என்றால் அவ நம்பிக்கையோ, சந்தேகமோ கொள்ளாத குருட்டுப் பக்தி. பழைய காலத்தில் கட்டப்பட்ட அற்புதமான கோயில்களும் மசூதிகளும் தேவாலயங்களும் பொதுவாக மக்களின் பக்தியில், சிற்பிகளின் பக்தியில் விளைந்த விழுச் செல்வங்களேயாகும். அவர்கள் சிரத்தையோடு ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கிய கற்களும் செதுக்கிய சிற்ப அற்புதங்களும் அவர்களுடைய பக்தியை நாக்கொண்டு நவிலுகின்றன. பக்திஉருவான கோபுரமும் மசூதி மினாரும் காதிக் தேவாலயச்சிகரமும் எல்லாம் வானமுகட்டை நோக்கி எழுந்து பக்திப் பரவசமாகி நின்று கடவுளுடைய புகழைக் கல்லில் இசைப்பன போன்றல்லவோ காணப்படுகின்றன! இன்றுகூடப் பக்தியற்ற நமது கல்நெஞ்சையும் கசிந்துருகப் பண்ணுகின்றனவே. ஆனால் அப்பக்தியுகம் கழிந்துவிட்டது. அதனோடு கல்லில் காவியமியற்றும் கைவன்மையும் மறைந்துவிட்டது, இன்றுகூடக் கோயில்களும் மசூதிகளும் தேவாலயங்களும் ஆயிரக்கணக்கில் காட்டப்படுகின்றன! ஆனால் இடைக்காலத்தில் அவற்றுக்கு உயிர் தந்த மாயசக்தி இப்போது இல்லை. அவற்றுக்கும் இப்போது நம் காலத்தில் கட்டப்படும் நம்காலச் சின்னங்களான வியாபார நிலையங்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

நாம் வாழும் யுகம் வேறு. இப்போது பழைய மாயை அகன்று விட்டது; எதிலும் நிச்சயம் இல்லை; எடுத்ததற் கெல்லாம் சந்தேகம்; தொட்டதற்கெல்லாம் கேள்வி. பழைய நம்பிக்கை களிலும் பழக்க வழக்கங்களிலும் பலவற்றை நாம் இப்போது ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. ஆசியாவிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, அப்பழைய நம்பிக்கை போய்விட்டது. ஆகவே, நாம் நமது சூழ்நிலைக்குப் பொருத்தமான புது வழி களையும் சத்தியத்தின் புது அம்சங்களையும் தேடுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் பெருத்த வாதப் பிரதிவாதத்தில் இறங்கிப் பலவித வாதங்களையும், தத்துவங்களையும் சிருஷ்டித்துக் கொண்டிருக் கிறோம். சாக்ரடீஸ் வாழ்ந்த காலத்தைப்போன்று நாம் இப்போது கேள்வி கேட்பது ஏதென்ஸ் நகரோடு நின்றுவிடாமல் உலக முழுவதும் வியாபித்திருக்கிறது.

சில சமயம் உலகில் காணப்படும் அநீதியும் துன்பமும் கொடுமையும் நமது மனத்தை வாட்டுகின்றன. எங்கும் இருள் சூழ்கிறது. நமக்கு வழி புலப்படவில்லை. மத்தேயு ஆர்னால் டைப்போல் நாமும் இனி உலகம் உய்ய வழி இல்லை என்றும் நாம் செய்யக்கூடியதெல்லாம் நாம் ஒருவருக்கொருவர் உண்மை யாயிருப்பதே என்றும் எண்ணுகிறோம்.

ஆயினும், நாம் இவ்வளவு தூரம் நம்பிக்கையை இழந்து அவல நினைவுகளுக்கு இடங்கொடுப்போமாயின், வாழ்க்கையோ அல்லது சரித்திரமோ போதிக்கும் பாடத்தைச் சரியாக உணர்ந்த வர்கள் ஆகமாட்டோம். சரித்திரமோ வளர்ச்சியினையும் முன்னேற்றத்தையும் நமக்கு எடுத்துரைக்கிறது. மனிதன் எட்டாத உயரத்தையெல்லாம் எட்டுதல் கூடும் என்று அது சொல்லுகிறது. வாழ்க்கையோ பலதிறப்பட்டது; அதில் எவ்வளவோ நன்மை இருக்கிறது. வாழ்க்கையில் சேறும் சகதியும், உளையும் கலங்கல் நீரும் நிறைய இருந்தாலும், அதில் ஓதமாக் கடலும், சிமயமால் வரையும், உறைபனியும், ஓங்கு பனிமலையும், விண்மீன் பூத்த வண்ண நள்ளிரவும் (சிறையில் இதன் அழகு இன்னும் மிகைபடக் காணும்!) பெண்டு பிள்ளைகளின் அன்பும், நண்பர்களின் கேண்மையும், பொதுவான ஒரு பணியில் ஈடுபட்டுள்ளோரின் தோழமையும், பாட்டும் பண்ணும், நூற்கேள்வியும், கருத்துலக சாம்ராஜ்யமும் ஆகிய விலைமதிக்க முடியாத மாணிக்கங்களும் இருக்கின்றன அல்லவா? ஆகவே நாம் ஒவ்வொருவரும் கவி யோடு சேர்ந்துகொண்டு,

"இறைவா, நான் மண்ணிலே பிறந்து மண்ணிலே வாழ்ந்தேன். மண் என்னைப் பெற்ற அன்னையாயினும், மீன்மிளிரும் விண்ணே என்னைப் பிறப்பித்த தந்தை" என்று பாடலாம்.

சிருஷ்டியின் அற்புதங்களிலே சிந்தையைத் திறைகொடுத்துச் கருத்து வானிலே கற்பனைச் சிறகு கட்டிக் கொண்டு பறப்பது மிகவும் எளிது. ஆனால், இவ்வாறு மனோராஜ்யத்தில் திளைத் துக்கொண்டு மற்றவர்கள் எக்கேடும் கெடட்டும் என்று எண்ணு வது ஆண்மையோ அன்புடைமையோ ஆகாது. சிந்தனைக்கு அருங்கலம் செயலில் இறங்குதல். நமது நண்பர் சோமெய்ன் ரோலண்டு கூறுகிறார்: "சிந்தனையின் பயனும் முடிவும் செயலே ஆகும். செயலை நாடாத சிந்தனையெல்லாம் வஞ்சனையும் கரு வழித்தலுமே ஒழிய வேறில்லை. ஆகவே, சிந்தனைக்குச் சேவகம் செய்யும் நாம் செயலுக்கும் சேவகம் செய்யவேண்டும்."

ஜனங்கள் செயலில் இறங்காததற்குக் காரணம் அவர்கள் அதன் விளைவுகளைக் கண்டு அஞ்சுவதுதான். செயலில் அபாயம் இருக்கிறதென்பதில் ஐயமில்லை. ஆனால், தூரத்திலிருந்து பார்க்கும்போது பெரிதாகத் தோன்றும் அபாயம் கிட்டநின்று பார்க்கும்போது அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை. மேலும், நமக்கு அபாயம் நல்ல தோழனுமாகும். அது வாழ்க்கை யின் இன்பத்தையும் சுவையையும் காட்டுகிறது. வாழ்க்கையின் தினசரிக் கிரமங்களில் நமக்கு அடிக்கடி அலுப்புத் தட்டிப் போகிறது. வாலாயமாகக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பொருள்கள் பலவற்றின் அருமையை நாம் அறிவ தில்லை. அவற்றை நாம் சகஜமாகக் கொள்வதால் அவற்றில் எவ்வித இன்பத்தையும் காண்பதில்லை. ஆனால், 'நிழலருமை வெயிலிலே' என்பது போல் சிறிது காலத்துக்கு அவை இல்லா மற் போய்விட்டாலும் அவற்றின் அருமை பெருமைகளை உணர ஆரம்பித்து விடுகிறோம். பலர் உயிருக்குத் துணிந்து அபாயத் தைப் பொருட்படுத்தாமல் மலை உச்சியின் மீது ஏறுகிறார்கள். அவர்களுக்கு அபாயத்தைக் கடப்பதிலும் இடையூற்றைத் தாண்டு வதிலுமே ஒரு தனி ஆனந்தம். நாலு புறமும் அவர்களை அபாயம் சூழ்ந்து நிற்பதால் அவர்களுடைய பொறி புலன்களெல்லாம் பல மடங்கு கூர்மை அடைகின்றன. அவர்களுடைய உயிர்மயிரிழை யில் தொங்குவதால் அவர்களுக்கு உயிர் வாழும் இன்பம் கழி பேரின்பமாய்த் திகழ்கிறது.

இரண்டு வழியில் ஏதாவதொரு வழியை நாம் எல்லோரும் பின்பற்றலாம். ஒன்று, மலைகளுக்கிடையிலுள்ள பள்ளத் தாக்கில் நாம் வாழலாம். அங்கே பனிப்படலமும் புகைப்படலமும் நம்மைச் சூழ்ந்திருக்கும். ஆனால், அங்கே நம் சடலத்துக்கு ஓரளவு பாதுகாப்பு இருக்கும். அல்லது, பள்ளத்தாக்கில் வாழ்வதை விடுத்து அபாயத்தை உற்ற துணைவனாகக் கொண்டு நாம் மலையுச்சியில் ஏறினாலும் ஏறலாம். அப்படி ஏறினால், தூரத்தே தெரியும் அழகிய காட்சிகளைப் பருகலாம்; உதயகிரியில் சூரியனைக் கண்டு திருப்பள்ளி எழுச்சி பாடலாம்.

இக்கடிதத்தில் பலருடைய பாடல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறேன். கடைசியாக இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய 'கீதாஞ்சலியிலிருந்து' ஒரு பாட்டைக் கூறி முடிக்கிறேன்:

''எங்கு மனம் பயமற்றுத் தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ

எங்கு அறிவு சுதந்திரத்தோடு ஒளிர்கிறதோ

எங்கு உலகம் குறுகிய குடும்பப் பூசல்களால் பிளவுறாமல் உருப்பெற்றிருக்கிறதோ

எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ

எங்கே தளராமுயற்சி பரிபூர்ணத்தை நோக்கிக் கைகளை நீட்டுகின்றனதோ

எங்கே பகுத்தறிவான தெள்ளிய ஓடை இறந்த பழக்கங்களான பயங்கரப் பாலை மணலில் பாய்ந்து வறண்டு மறையவில்லையோ

எங்கே உள்ளத்தை நின்து அருள் முடிவற்றுப் பரந்த சிந்தனையிலும் ஈர்த்துச் செல்கிறதோ

அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில், எந்தையே, என் நாடும் விழிப்புறுமாக!''

கண்ணே, என் அருமந்தச் செல்வமே! கதை முடிந்துவிட்டது. கடைசிக் கடிதம் ஆய்விட்டது. கடைசிக் கடிதமா? ஒருக்காலும் இல்லை. உனக்கு நான் இன்னும் எத்தனையோ கடிதங்கள் எழுதுவேன். ஆனால் இந்தத் தொடர் முற்றிற்று.

(தமிழ் மொழிபெயர்ப்பு: திரு ஓ.வி. அளகேசன்)

# ஆசிரியர் குறிப்பு

**இராசையா, ந.புலவர் :** இவர் காமராசர் மாவட்டத்திலுள்ள சேத்தூரில் 15.2.1932இல் பிறந்தார். இவருடைய தந்தையார் சி.நச்சாடலிங்கம்; அன்னையார் பெத்தம்மாள். கல்வித்துறையில் 35 ஆண்டுகள் பணிமுதிர்வு கொண்ட இவர் தற்போது இராசபாளையத்தில் உள்ள சேத்தூர் சேவுகப்பாண்டியர் அரசு மேனிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

**கிருஷ்ணமூர்த்தி,இரா :** இவர் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் 18.12.1933 இல் பிறந்தார். தந்தையார் இராமசுப்பு; அன்னையார் கிருஷ்ணம்மாள். 'தினமலர்' நாளிதழில் 30 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் இவர் 1977 ஆம் ஆண்டு முதல் அவ்விதழின் ஆசிரியராகவும் பொறுப் பேற்றுள்ளார்.

**குருநாதன், இரா.டாக்டர் :** இவர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் 7.6.1945இல் பிறந்தார். தந்தையார் அ.இராமலிங்கம். அன்னையார் இரா.சேது. இவர் 1971ஆம் ஆண்டு முதல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

**கோமதிநாயகம், இ.புலவர்:** இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவிலில் 5.6.1949 இல் பிறந்தார். பெற்றோர் திரு மு.இசக்கியாபிள்ளை, திருமதி. பிரமு அம்மாள். தற்போது இவர் சென்னை கோடம்பாக்கம் அரசினர் மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிவருகிறார்

**சஞ்சீவி, ந. டாக்டர்:** இவர் திருச்சியில் 2.5.1927இல் பிறந்தார். பெற்றோர் திரு: நடேசமுதலியார் - திருமதி: கண்ணம்மா. சிலப்பதிகார விருந்து, மருதிருவர் போன்ற பதினாறு நூல்களையும் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியர் மற்றும் துணைத்தலைவர் பணியி லிருந்து 1987ஆம் ஆண்டு மேத் திங்களில் ஓய்வுபெற்றார்; 22.9.1988இல் இயற்கை எய்தினார்.

**சேதுப்பிள்ளை, இரா.பி.டாக்டர்:** இவர் திருநெல்வேலி மாவட்டம் இராசவல்லிபுரத்தில் 2.3.1896இல் பிறந்தார். தந்தையார் பிறவிப்பெருமாள் பிள்ளை, தாயார் சொர்ணத் தம்மை. இவர் 'சொல்லின் செல்வர்' என்னும் சிறப்பைப் பெற்றுள்ளார். 'ஆற்றங்கரையினிலே' 'ஊரும் பேரும்' 'திராவிடப் பொதுச் சொற்கள்' 'திருவள்ளுவர் நூல் நயம்' முதலிய பல சிறந்த நூல்களைப் படைத்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் 25.4.1961ல் இயற்கை எய்தினார்.

**சோமசுந்தரம், சி.பேராசிரியர் :** இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாப்பாங்குளம் என்னும் சிற்றூரில் 8.11.1944ல் பிறந்தார். தந்தையார் புதுவீடு பா.மீ.சிவசுப்பிரமணியம்; அன்னையார் சி.அழகம்மாள். இவர் தற்போது திருவரம்பூர் அரசினர் கலைக்கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்

**பன்னீர்செல்வம்,க. பொறியியலாளர் :** இவர் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலையில் 8.10.1953 இல் பிறந்தார். தந்தையார் சா.கண்ணன்., அன்னையார் க.சரசுவதி. இவர் தற்போது சென்னை கிண்டியிலுள்ள மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனத்தின் முதல்வராகப் பணியாற்றுகிறார்.

**விக்கிரமன், டாக்டர் :** வேம்பு என்னும் இயற்பெயர் கொண்ட இவர் திருச்சியில் 19.3.1928இல் பிறந்தார். தந்தையார் சுப்பராயர், அன்னையார் இலட்சுமி. இவர் தற்போது அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்சங்கத் தலைவராகச் செயலாற்றி வருகிறார்.

**ஜவகர்லால் நேரு :** உலகறிந்த தலைவர். விடுதலை இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர். பெற்றோர் : மோதிலால் நேரு - சொரூபராணி. 14.11.1889 இல் அலகாபாத்தில் பிறந்தார். இவருடைய பிறந்த நாள் இந்திய நாடெங்கும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பெறுகிறது. விடுதலைப் போராட்டக் களங்கள் பல கண்ட இவர் அவ்வப்போது ஆங்கில ஆட்சியால் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டார். தம் சிறைவாழ்வைக்கூட வெறும் வாழ்வாக்காமல் கடிதங்கள் வாயிலாகத் தம் மகள் இந்திராவுக்கு (இந்திரா காந்தி) கடிதங்கள் வாயிலாக உலக வரலாற்றை உணர்த்தினார். அக்கடிதங்களில் கடைசிக் கடிதமே இந்நூலுள் காணப்பெறுவதாகும். அக்கடிதங்கள் இளைஞர் சமுதாயத்திற்கு இந்திய நாட்டின் வரலாற்றுப் பெருமையையும் உலகக்கண்ணோட்ட உணர்வையும் ஊட்டின. 1947 இல் இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற பின்னர் தலைமை அமைச்சர் பொறுப்பேற்றுப் புகழ்வாழ்வு வாழ்ந்த இவர் 27.5.1964 இல் இயற்கை எய்தினார். 1988 - '89 நேரு பெருமானின் நூற்றாண்டுவிழா ஆண்டாகும்.

# பயிற்சியும் வினாக்களும்

## 1. தமிழ்த் திருநாள்

**பயிற்சி**

1. 'செங்குட்டுவன் ... ' எனத் தொடங்கும் பத்திக்குக் கீழ்க் காணுமாறு குறிப்புகள் தரலாம்.

**குறிப்புகள் :** சிலப்பதிகாரச் செய்தி - சேரன் செங்குட்டுவன் - கண்ணகி கோயில் அமைத்தல் - இலங்கை மன்னன் கஜபாகு வருகை - இலங்கையில் வழிபாடு தொடரல்.

'இலங்கை நாட்டிலே ... பாதுகாத்து வைத்திருப்பது யாழ்ப்பாணமாகும்' - **இப்பத்திக்குப் பொருத்தமான குறிப்புகள் தருக.**

**வினாக்கள்**

1. 'தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் பழமையான தொடர்பு உண்டு' - விளக்குக

2. குறிப்பு எழுதுக.

தமிழ்வளர்த்த ஈழச்சான்றோர்கள், யாழ்ப்பாணம்.

## 2. மாமல்லபுரம்

**பயிற்சி**

1. மாமல்லபுரத்திற்குச் சுற்றுலாச் சென்றதாகக் கருதி, அங்குள்ள வராகமண்டபத்தைப் பற்றிக் கீழ்க்காணும் குறிப்புகளை அடியொற்றிக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - அமைவிடம் - அவதாரங்கள் - ஓவியமும் சிற்பமும் - சிறப்பு - முடிவுரை.

---

**வினாவிற்குரிய விடை ஒன்றரைப் பக்க அளவில் அமைய வேண்டும்.**

600 008.

**வினாக்கள்**

1. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் புராண விளக்கங்களாக அமைந்துள்ளன என்பதை எடுத்துரைக்க
2. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில் பற்றி விவரிக்க.
3. மாமல்லபுரத்தில் காணப்பெறும் ரதங்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## 3. வாழ்வுசார் தொழில்கள்.

**பயிற்சி**

1. முதல்வருக்கும் இரு மாணாக்கருக்கும் நடந்த உரையாடல் பகுதி முழுமையையும் அயற்கூற்று வடிவில் அமைக்க.

**வினாக்கள்**

1. 'ஆசிரியரின் அறிவுரை' 'முதல்வரின் விளக்கம்' 'வட்டார வளர்ச்சி அலுவலரின் வழிகாட்டல்' ஆகிய தலைப்புகளில் ஆனந்தனின் அங்கலாய்ப்புக்குக் கிடைத்த தீர்வினை எடுத்துரைக்க.
2. தொழிற் பயிற்சி நிறுவனத்தில் மணியும் ஆனந்தனும் பார்வையிட்ட தொழிற் பிரிவுகளின் தன்மைகளைப் பற்றிக் கூறுக.
3. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் பற்றி விவரிக்க.

## 4. எழுத்துச் சூழல்.

**பயிற்சி**

1. இப்பாடத்திலிருந்து அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைக் காலமுறைப்படி வரிசைப்படுத்தித் தருக.

**வினாக்கள்**

1. 'எழுத்து வரலாறு' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.
2. தமிழ் வட்டெழுத்து பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க

## 5. விடுதலை இயக்கத்தின் விடிவெள்ளி மாவீரன் பூலித் தேவன்.

**பயிற்சி.**

1. இப்பாடத்தில், 'பூழிநாடும் பூழியர் கோனும்', 'பூழிநாடு பாளையமாதல்', 'புலியை அடக்குதல்' ஆகிய உள் தலைப்புகளில் அமைந்தவற்றை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

**வினாக்கள்.**

1. பூலித்தேவனின் பண்புநலன்களை எடுத்துரைக்க.
2. பூலித்தேவன் ஆங்கிலேயரை எதிர்த்த திறத்தினை விவரிக்க.

## 6. ஆங்காங் பயணம்

**பயிற்சி**

சீனப்பெண்ணுக்கும் டாக்டர். சஞ்சீவி அவர்களுக்கும் நடந்த உரையாடலைப் படித்துக் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடை தருக.

1. (நாணத்தை அடக்கிக்கொண்டு) 'நான் சொல்வது உண்மைதான் அம்மா.' - இவ்வாறு டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் கூறக் காரணம் யாது?
2. டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் சீன நாட்டுக்குச் சென்ற தேன்?
3. சீனத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு யாது?
4. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் சிறந்த எழுத்தாளர் என்பதை இவ்வுரையாடலின் எப்பகுதி எடுத்துக் காட்டுகிறது?
5. 'நீங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவர் அல்லவா!' எனச் சீனப்பெண் கூறியதற்கு விளக்கம் தருக.

**வினாக்கள்.**

1. டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் ஆங்காங் விமான நிலையம் செல்லும்வரையில் பெற்ற பயண அனுபவத்தைக் கூறுக.
2. டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் ஆங்காங்கில் கண்ட அரிய காட்சிகளை விவரிக்க.

## 7. காணவேண்டிய காசிமாநகரம்

**பயிற்சி**

1. 'பக்தர்கள் யாவரும் சிவலிங்கத்தைத் தொட்டு வழிபாடு செய்வது இக்கோயிலின் தனிச் சிறப்புகளுள் ஒன்று' - 'தனிச் சிறப்பு' என ஆசிரியர் கூறக் காரணம் யாது?

**வினாக்கள்.**

1. காசி மாநகரத்திலுள்ள கோயில்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. இலக்கியச் சான்றோர்களின் இருப்பிடமாகக் காசி மாநகரம் திகழ்ந்தமையை விளக்குக.
3. 'வேற்றுமையுள் ஒற்றுமை' என்பதைக் காசி மாநகரம் பறைசாற்றும் தன்மையை விளக்குக.

## 8. கணிப்பொறி

**பயிற்சி**

1. 'இதில் தகவல்கள் கணிமொழி வாயிலாகக் கொடுக்கப் பெறுகிறது' - ஆசிரியர் குறிப்பிடும் கணிமொழிகள் எவை?

2. கீழ்க்காணும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை அறிக. அடக்கை, இணைவுஅளவுகோல், கணிவை, தரவுவழி, துளைஅட்டை, நறுக்கு, நினைவை, நுண்கணிப்பொறி, பகுப்புப் பொறி, மணிச்சட்டம், மின்னணு, மையச் செயலறை, விளைவு வழி.

**வினாக்கள்**

1. 'கணிப்பொறி அறிவுப் புரட்சி தந்த செல்வமாகும். அந்த அறிவுப் புரட்சியின் வரலாறு நெடுமையானது; சுவையானது,' - நெடுமையையும் சுவையையும் பேராசிரியர் சி.சோமசுந்தரம் வழிநின்று விளக்குக.

2. 'கணிமொழிகள்', 'வன்னுருவும் மென்னுருவும்' ஆகியன பற்றி விளக்குக.

## 9. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு

**பயிற்சி**

1. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. பொருத்தமான தலைப்பும் இடுக.

   குறிப்புகள் : ரௌலட் சட்டம் - எரிப்பு - தமிழகத்தில் பெரியார் - திரு.வி.க. - முகமதியர் - ஒத்துழையாமை இயக்கம் - வேதாரணியம்.

**வினாக்கள்**

1. 'தமிழகத்தில் விடுதலைப்போர் 18ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. 'என்னும் கூற்றை டாக்டர் இராம குருநாதன்வழிநின்று விளக்குக.

2. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட விடுதலை இயக்க உணர்வு அமைப்புகளைப் பற்றிக் கூறுக.

3. 1919 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் நடை பெற்ற விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைக் குறித்துக் கட்டுரை எழுதுக.

4. விடுதலை உணர்வூட்டிய கவிஞர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் புனைந்த விடுதலை உணர்வுப் பாடல்கள் இரண்டை எடுத்துக்காட்டுக.

## 10. கடைசிக் கடிதம்

**பயிற்சி**

1. நேரு அவர்கள் எழுதிய கடிதத்தை உங்களுக்கு எழுதிய தாக நினைத்து அதற்குப் பதில் மடல் வரைக.
2. 'படிப்பதற்குப் பல நூல் .... அவை சிறிதும் பொருந்தா'. 'என்னும் பத்தியையும்', ஆகவே கடந்த கால... ஜாலங்களையும் காணலாம்.' என்னும் பத்தியையும் மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக. சுருக்கத்திற்குப் பொருத்தமான தலைப்பும் தருக.

**வினாக்கள்**

1. வரலாற்றைக் கற்கவேண்டிய முறைபற்றி நேரு அவர்கள் கூறுவன யாவை?
2. நேரு அவர்கள் கடிதத்திலிருந்து இளைஞர் பெறவேண்டிய அறிவுரைகள் யாவை?
3. கீதாஞ்சலிப் பாடலிலிருந்து நேரு அவர்கள் உணர்த்துவன யாவை?

600 008
174284

இந்தியர் என்பதில்
பெருமிதம் கொள்வோம்!
இணைந்தே இன்னும்
பல சாதனை புரிவோம்!

SCANNED

தரமான சத்துணவு
தந்து நிற்கும் புத்துணர்வு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

SCANNED